# தாய்மண்

மேலாண்மை பொன்னுச்சாமி

மீனாட்சி
புத்தக
நிலையம்

# தாய்மதி

மேலாண்மை பொன்னுச்சாமி

மீனாட்சி புத்தக நிலையம்
60, மேலக்கோபுரத் தெரு
மதுரை-625001.

முதற்பதிப்பு : ஆகஸ்ட்டு 1994
உரிமை பதிவு
மீனாட்சி எண் : 241
**விலை ரூ. : 22/00**

நூல் தலைப்பு : தாய்மடி
ஆசிரியர் பெயர் : மேலாண்மை பொன்னுச்சாமி
முதற்பதிப்பு : ஆகஸ்ட்டு 1994
தாளின் தன்மை : வெள்ளைத்தாள்
நூலின் அளவு : 18×12.5cm.
அச்சு எழுத்து அளவு : 10 பாயிண்ட்
பக்கங்கள் : 174 பக்கங்கள்
நூலின் விலை : ரூ. 22-00
அச்சிட்டோர் : அலைகள் அச்சகம்
36, தெற்குச் சிவன் கோவில் தெரு,
கோடம்பாக்கம், சென்னை-24.
நூல் கட்டுமானம் : பாக்ஸ்போர்டு பைண்டிங்
நூலின் தன்மை : சிறுகதைகள்
நூல் வெளியிட்டோர் : மீனாட்சி புத்தக நிலையம்
60, மேலக் கோபுரத்தெரு,
மதுரை-625001.

Meenakshi Puthaka Nilayam
60 West Tower Street, Madurai-625001.

# பதிப்புரை

திரு. மேலாண்மை பொன்னுச்சாமி, தான் பிறந்து வளர்ந்த கிராமத்தையும், கிராம மண்ணையும், கிராம மக்களையும், அவர்களின் சுகதுக்கங்கள் ஆசைகள்—அவலங்கள் வெற்றிகள் யாவற்றையுமே ஆழமாக நேசிப்பவர். அவருடைய கதை மாந்தர்கள் எல்லோரும், அவரைச்சுற்றி உயிரும் சதையுமாக வாழ்ந்து கொண்டிருப்பவர்கள். அவரது கதை எல்லை காமராசர் மாவட்டத்தைத் தாண்டி நீள்வதில்லை.

வறுமையால் வாடும் கிராம மக்களும் அந்த வறுமையால் பாரத்தை அதிகமாகத் தாங்க நிர்ப் பந்திக்கப்படும் கிராமப் பெண்களும் நம்மைப் பலமாகச் சிந்திக்க வைக்கிறார்கள்.

தற்கால நாகரிகமும் விஞ்ஞான வளர்ச்சியும் நாட்டின் கிராமங்களை வளமாக்க உதவாமல், கிராமங்களை அழித்து கிராம மக்கள் நகரச் சேரி களில் குவிய வழி செய்யும் நிலையை நினைத்து வருந்தும் ஆசிரியர் ஒரு நன் நம்பிக்கைவாதி. எத்தனை துயரங்கள் வந்தாலும் முடிவில் மனித சமுதாயம் அவைகளை வென்று முன்னேறவே செய்யும் என்ற நம்பிக்கை இக்கதைகளில் பரவி நிற்பதைக் காணலாம்.

நூலாசிரியருக்கும், வாசகப் பெருமக்க ளுக்கும் எங்கள் நன்றி உரியதாகுக.

மதுரை
16-7-94

செ. செல்லப்பன்
மீனாட்சி புத்தக நிலையம்

# முன்னுரை

இத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள முதல் சிறுகதை 'தாய்மதி' எனக்கு மிகவும் பிடித்த கதை. அது சிறுகதையா, குறுநாவலா என்ற வடிவரீதியான சர்ச்சைக்குரிய சிறுகதைதான். இருப்பினும் எனது நேயத்திற்குரிய கதை.

உசிலம்பட்டியில் 'சிசு கொலை' நடப்பதாக எழுத்தாளர் சௌபாவினால் ஜூனியர் விகடனில் எழுதப்பட்டு, அப்புறம் அது தேசிய அளவிலான விஷயமாக பேசப்பட்ட நாளிலேயே இப்படி யொரு கதை எழுத ஆசைப்பட்டேன். ஆனால் எழுதிவிடவில்லை.

காத்திருந்தேன். சிசுவை கொலை செய்ய ஒரு தாய்க்கும் பெண்களுக்கும் எப்படி மனசு வரும் என்று புரியாமல் தவித்தேன்.

நான் வாழும் பகுதியிலேயே இதே மாதிரி யான ஒரு கருணைக்கொலை நடந்த நிஜத்தைப் பார்த்தவுடன், முழுசாக அதிர்ந்து போனேன். அந்த அதிர்வில் அனுபவமாகிப் போன உணர்வு களே 'தாய்மதி'யில் பதிவாகியிருக்கிறது.

'தமிழ் அரசி' சிறுகதைப் போட்டியில் ரூ. 5000 பரிசையும், எம். ஜி. யார் உருவம் பொதித்த தங்கப் பதக்கத்தையும் பெற்றுத் தந்தது, இக்கதை. இயக்குநர் பாலச்சந்தர் கதை யின் நடையை மெய்மறந்து பாராட்டினார்.

பரிசளிப்பு விழாவில், இயக்குநர் பாரதிராஜா சால்வை போர்த்த... இதழின் ஆசிரியர், ம. நடராஜன் பதக்கம் அணிவித்தார்.

இந்த நிகழ்வின் முழு மகிழ்ச்சியை அனுபவிக்க முடியாமல்... அன்று தலைவலியால் தவித்துக் கொண்டிருந்தேன்.

'தாய்மதி' மாதிரித்தான் எனது மற்றைய கதைகளும். நெஞ்சைப்பாதிக்கிற எத்தனை பெரிய விஷயமாக இருந்தாலும்... எனது அனுபவமாகி என்னுள் உணர்வு ரீதியான உண்மையான பிறகே... அது எண்ணிலிருந்து எழுத்தாக வெளிப்படும்.

யதார்த்தவாதம் சிறுகதைத் துறையில் முன்னெப்போதைக் காட்டிலும் இப்போதும் பெரும் சோதனைக்கு ஆளாகியிருக்கிறது.

மேஜிகல் ரியலிஸம், அதிவினோதக் கற்பனாவாதம் போன்ற நவீன (?) இஸங்கள் வந்து தானடித்த மூப்பாக யதார்த்தவாதத்தின் மீது மோதிப் பரிகசிக்கின்றன.

யதார்த்தவாதம் என்பது காலாவதியாகிப் போன பழைய வடிவமா? உண்மை எந்த நாளில் பழமையாகும்?

வாழ்வின் உள்ளும் புறமுமான உண்மையின் உயிர் முகங்களை தரிசிக்கும் கலைவடிவமாக சிறுகதை இருக்கும் வரை... யதார்த்தவாதமே அதற்குரிய வடிவமாக இருக்கும்.

சற்றுத் தாமதமாகி விட்டாலும்... இத் தொகுப்பை மிகச்சிறப்பாகக் கொண்டு வருகிற புகழ்மிகு மீனாட்சி புத்தகநிலைய அதிபர் செ. செல்லப்பன் அவர்கட்கும்,

எனது எல்லா நூல்களையும் தோளில் தூக்கி நெஞ்சில் போற்றி சகல கலை இலக்கிய இரவுகளி லும் மக்களிடம் கொண்டு செல்கிற தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத் தோழர் களுக்கும்,

என் கதைகளை உடனுக்குடன் படித்து, நேரி லும் கடிதங்களிலும் விமர்சித்தும் பாராட்டியும் என்னைச் செதுக்குகிற ச. தமிழ்ச் செல்வன் போன்ற எனது சமகாலப் படைப்பாளிகளுக்கும்,

எனது நன்றிகளைக் காணிக்கையாக்கு கிறேன்.

நன்றி!

20-7-94 என்றும் உங்கள்

மேலாண்மறைநாடு **மேலாண்மை பொன்னுச்சாமி**

626127

காமராசர் மாவட்டம்.

# சமர்ப்பணம்

அவனும் நானும் வேறு வேறு ஜாதி. என்னைவிட மூன்று வயது மூத்தவன். எல்லா நிலையிலும் 'வா, போ' என்று ஒருமையிலேயே பேசிக்கொள்கிற ஆழ்ந்த நட்பு.

சின்ன வயதிலேயே இருவருக்கும் கல்வியை இழந்த இழப்புணர்வு. இரண்டு குயர் நோட்டுகளில் இருவரும் கதை எழுதிப் பார்ப்போம். இழந்த கல்வியை ஏதேனும் ஒரு வழியில் மீட்கிற வேட்கை இருவருக்குள்ளும் நெருப்பாக...

நான் எழுத்தாளனாகவே ஆகிவிட்டேன்.

அவனுள் அந்த வேட்கை நெருப்பு தணியவில்லை. சிமிண்டாலை கல்குவாரியில் கல்சுமக்கும் தொழிலாளியாகி... உழைப்பும் படிப்புமே உயிர் மூச்செனவாழ்ந்து, சிமிண்டாலையின் கல்குவாரி உதவி மேலாளர் எனும் உயர் அந்தஸ்துக்கு உயர்ந்தபின்னும்—

எல்லோருக்கும் அவர் ஆபிஸர்.

எனக்கு மட்டும் அவன் பழைய நண்பன்.

நட்பைக்கூட கற்பைப்போல காத்து வந்த உயர் மனிதன்; உயிர் நண்பன்.

ஒரு மழை நாளில் கற்குவாரியில் வெடி வெடித்து தகர்கிறபோது... அவனும் சதைச்சிதறலாய்...

என் இனிய நண்பனே

**து. ராஜா எனும் தீபமே...**

இன்றும் நீ என்னுள் ஒளியாய் சுடர்கிறாய்...

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | தாய்மதி | 9 |
| 2. | மதிப்பீடு | 25 |
| 3. | சொந்த வீடு | 38 |
| 4. | காட்டு ருசி | 51 |
| 5. | அவனாகி... | 67 |
| 6. | உயர்ந்தவன்? | 83 |
| 7. | பௌர்ணமி | 95 |
| 8. | முக்காலும் காலுமாய்... | 105 |
| 9. | நல்ல சாவு | 121 |
| 10. | இழப்பு | 139 |
| 11. | பந்தம்! | 150 |
| 12. | காட்டம் | 163 |

# 1. தாய்மதி

முப்பிடாதி தவிக்கிற தவிப்பைப் பார்க்கச் சகிக்க வில்லை. பார்க்கப் பார்க்கப் பாதரவாயிருக்கிறது, சொள்ளமுத்துவுக்கு.

நிமிர்ந்து உட்காரக்கூட முடியாமல், தத்தளித்து, அவள் படுகிறபாடு, உடம்பாலும், மனசாலும் அவளைக் கொன்று கொண்டிருப்பதாய்... ஒரு குற்ற உணர்வு. எல்லாவற்றுக்கும் இவன்தான் காரணம்.

புருசன் பூப்போல வைத்துக் கொண்டாட வேண்டி யவன். கண்ணுக்குள் 'முழி'யாய்க் காப்பாற்ற வேண்டி யவன். முடியவில்லை. அவள் படுகிற உடம்பின் அவஸ்தை யாச்சும் இயற்கையானது. மன அவஸ்தை? மனக் கொந்தளிப்பு?...

இதை நினைக்கும்போதுதான், உள்ளுக்குள் கரீரென்று குத்தும் முள்ளாய், குற்ற உணர்வு-அவளை ஏமாற்றி வஞ்சிப்பதாய் ஒரு மனத்தவிப்பு!...

குற்றம் செய்யாமலும் இருக்க முடியவில்லையே?... வாழ்வின் வடிவமாய் நின்று சித்தி அச்சுறுத்துகிறாளே... என்ன செய்றது?

அடடா...முப்பிடாதி, எம்புட்டு அழகாயிருப்பாள்!

சின்னஞ்சிறு தேவதை மாதிரியிருப்பாள், முப்பிடாதி. கைப்பிடியடக்கமாய் ஒல்லி; கச்சிதமான வீச்சரிவாள் மாதிரி உருவம். நல்ல சிவப்பு, மஞ்சள் கிழங்கு மாதிரி

உதடு, கண் எல்லாம் அளவெடுத்து வைத்த மாதிரி அத்தனை லட்சணம்.

மஞ்சள் பூசி குளித்து மொழுகி... ஈரத்தளதளப்போடு வந்து நிற்பாள். பூங்கொடி மாதிரி பசேரென்று மின்னு வாள். அந்த முப்பிடாதியம்மனே இறங்கி வந்து நடமாடுகிற மாதிரி.

அழகின் அற்புதத்தில் மயங்கி மலைத்து நிற்கிற சொள்ளமுத்துவின் கன்னத்தில் செல்லமாய் இடித்து பொய்க் கண்டிப்பாய் அதட்டுவாள்.

''இந்தா... என்ன இப்படி முழிக்கே?''

''அடிப்பாவி மகளே, எம்புட்டு லட்சணமாயிருக்கே, தெரியுமா?''

''புதுமாப்பிள்ளை கணக்கா வாயைத் தொறக்காதே. ரெண்டு பொட்டைக இருக்கு, நமக்கு.''

''ரெண்டு புள்ளை பெத்த பொம்பளை மாதிரியா யிருக்கே?''

''பெறகு?''

''இப்ப சடங்கான எளங்கொமரி கணக்கா இருக்கே?''

''ம்...!''

அவளது சின்ன உதடுகளில் பெருமிதத்தின் ஈரமின்னல். கண்களில் மனப்பூரிப்பின் மலர்ச்சி. அதை மறைக்கிற போலி முயற்சியே ஓர் அழகாய்-பௌர்ணமிக் குளிர்ச்சி யாய்... நாண நளினமாய்... செல்லச் சிணுங்கலாய் ஓரப் பார்வை பார்ப்பாள்.

''ரொம்பத் தாளிக்காதே. வந்து சாப்டு.''

''புள்ளைக எங்க?''

''பள்ளிக்கோடம் போய்ட்டு வந்துட்டு, வெளை யாடப் போயிருக்குது. தெருக்காட்லே திரியும்.''

அவ்வளவுதான். அணை உடைந்த வெள்ளமாய்ப் பாய்ந்து, பின்பக்கமாய் அவளை அள்ளி அணைத்துக் கொள்வான். அவனுள் மூச்சு முட்டுகிற பரவசம், முறுக்கேறிய நரம்புகளில் ஓடிச் சிலிர்க்கிற உணர்ச்சித் தத்தளிப்பு.

குளித்த உடம்பின் ஈரக் குளிர்ச்சி. பூசிய மஞ்சளின் மிருதுவான வாசம் கைக்குள் அடக்கமாய் குழைகிற அவளது சிற்றுடம்பு.

அவனுள் மனப்பிரளயம்.

துள்ளித் துடிக்கமாட்டாள். பதற்றமில்லாத உறுதி யாய் மீறமுடியாத நிதானமான கண்டிப்பாய் அதட்டு வாள்.

''ஏய்... கையை எடு.''

''மாட்டேன்.''

''வெலகிப் போ.''

''மாட்டேன்.''

''மாட்டீயா? அப்ப, ஓங்கூட பேசமாட்டேன்.''

''ராத்திரிக்கு?''

''எப்பவும்?''

''ஐயய்யோ...''

தேளை மிதித்தவனாய்த் துள்ளி விலகி, அசடு வழிகிற புருசனைப் பார்ப்பாள். குறும்பும் கேலியுமாய்ச் சிரிப் பாள். நெஞ்சுக்குள் இறங்கி உணர்வுகளைச் சீண்டுகிற சலங்கைச் சிரிப்பு. கண்ணாடி வளையல்களின் குலுங்கல் சிரிப்பு.

கிட்ட அவள் படுத்திருந்தால் அதுவே ஓர் அழகு. விரித்துட்போட்ட தலைவாழை இலை மாதிரி. இவனுக்குள் கூத்தாடுகிற உணர்வலைகள். ஆர்ப்பரிக்கிற பிரவாகம். இவனது உள்மனம் பரவசத்தால் நிரம்பித் ததும்பும்.

அப்பேர்ப்பட்ட லட்சணக்காரி, முப்பிடாதி... இப்போது?

ரத்தம் வற்றிப்போய் சாம்பல்பூத்த முகத்தில் வேதனையின் கருநிழல், வாடிக் கருகிப்போன சோளப் பயிராய்- உயிர்வற்றிப்போய் லட்சணமில்லாமல்...

வலியின் அவஸ்தை தாளாமல் கடித்துக் கடித்துக் கன்றிப்போன அடி உதடு. நிறைமாச வயிறு. தேர் மாதிரி உப்பியிருக்கிறது. ஏற்றிக்கொண்டு நிமிர்ந்திருக்கிறது. கவிழ்த்துப் போட்ட மொடாப் பானையாக, பெரிய வயிறு.

நிமிர்ந்து உட்காரக்கூட அவளால் முடியவில்லை. வயிற்றுப் பாரத்தின் ஒரு பக்கச் சாய்வு, இடது கையைப் பின்னால் ஊன்றி அதன்மேல் மல்லாக்கச் சாய்ந்து, வலது கையால் இடுப்புக்கு முட்டுக் கொடுக்கிறாள்.

சராசரி கர்ப்ப வயிற்றைவிட சற்றுப் பெரிதான வயிறு; "வவுறு பெருசாயிருந்தா... பொறக்குறது பொட்டைதான்."

அனுபவங்களின் அனுமானம். உள்ளுக்குள் 'கரங் கரங்' கென்று அறுக்கிறது!

ஏழாவது மாச வயிறே சொல்லிவிட்டது- உள்ளே வளர்வது பொட்டைதான் என்று! புருசனின் சித்தி 'கடுகடு' வென்றாகிவிட்டாள். எல்லையக் குறிவைக்கிற சடுவன் பூனை மாதிரி அவள் மூஞ்சி. புருசனிடம் குசுகுசுவென்று நச்சரிக்க ஆரம்பித்துவிட்டாள். அதை இதைச் சொல்லி

பயமுறுத்துகிறாள். மீற முடியாமல்- சம்மதிக்கவும் முடியாமல் தத்தளிக்கிற புருசன், சொள்ளமுத்து.

பாவம், அவன்! ஈரமான தாய்ப் பாசத்தை உணராதவன். ஒரு வருசப் பிள்ளையாய் இவன் இருக்கும் போதே, ஓடிப்போன அம்மா. உயிரோடு தாயிருந்தும், பாசத்துக்கு ஏங்கி ஏங்கிக் காய்ந்து போனவன். மறுதாரமாய் வந்த சித்தியோ, மழலைப் பாக்கியம் இல்லாதவள். அவளது சபிக்கப்பட்ட வாழ்வின் வெளிப்பாடாய் வெறுப்பு-முள் முள்ளாய்க் குத்தும் போலிப் பாசம்- அப்புறம் பத்து வருசத்திலேயே 'போய்'ச் சேர்ந்து விட்ட ஐயா.

சித்தியின் நிழலில் வாழ்வு. அவளது நிழலாய்ப் படிந்த சுபாவம். நிழலடித்த செடியாய் — நிறம் மாறியே வளர்ந்த அப்புராணி.

பிறக்கப்போகிற பிள்ளை இருக்கக் கூடாது என்பது சித்தியின் நினைப்பு. 'மூன்றாவது பொட்டையையும் குடும்பம் தாங்காது. நசுங்கி நாசமாயிரும்' என்று அவளது பயம். பயமுறுத்தல். சித்தியை அரட்டுகிற ஊர் நடப்பு. உலக நடப்பு.

முப்பிடாதிக்குள் தீ. இழப்புத் தீ. இழப்பைத் தடுக்க முடியாத இயலாமைத் தீ. உயிர்க்குடலைச் சுட்டுத் துடிக்க வைக்கிற பாசத் தீ.

அடப்பாவி மக்கா... ஊர் ஒலகத்துக்கு இப்படியா புத்தி போகணும்? பொட்டைப் புள்ளைன்னா...மட்டமா? பாரமா? திங்குற வவுத்தோடயும், நகை நட்டு போடுற கழுத்து மூக்கோட மட்டுமா, பொண்ணு பொறக்கு? பாடு படுற கையோடயும், வலுவான? மனசையும் சேர்த்துத்தானே வந்து பொறக்கு? பத்து வயசு வரைக்கும் வளர்த்து ஆளாக்கிட்டோம்னா... அதது பாட்டை அதது பாத்துக்காதா? பாடுபட்டுக் கொள்ளாதா? வைர மனசோட வாழ்க்கையோட மல்லுக்கட்டிக் கொள்ளாதா? கனை வெட்டியாச்சும் பொழைச்சிக்காதா? அதைக்

கொன்னு, அந்தப் பாவத்தைச் சுமக்கணுமா? பெத்த புள்ளையைச் கொன்னுட்டு, வாழ்ற வாழ்க்கையும் ஒரு வாழ்க்கையா? ஈண்ட குட்டிகளை முழுங்கிட்டு நெளியுற பாம்பு மாதிரியா? பாம்பும் மனுசனும் ஒண்ணா...? அடப் பாதரவே...!'

குலுங்கிக் குலுங்கி அழுதாள், முப்பிடாதி. வெறுப்பும் கசப்புமாய் மனம் குமட்ட.... வெடித்துக் கதறினாள். சுமந்து, ரத்தம் தந்து, உயிர் கொடுத்து பெறப்போகிற மழலையை சாவின் கையில் ஒப்படைக்கப்போகிற அக்கிர மத்தை நினைக்க நினைக்க, குலையே கொதிக்கிறது. மண்டைக்குள் ஏதோ பிறாண்டுகிறது. கிறக்குப் பிடித்து விடும் போலிருக்கிறது.

மதியக்கரண்டு. பருத்திப் புஞ்சையில் தண்ணீர் விட்டு வந்திருந்தான், சொள்ளமுத்து. மம்பட்டியைக் கதவுக்குப் பின்னால்' போட்டான். அழுகையும், கண்ணீருமாய்... அறுத்துப் பேட்ட கொடியாய் முப் பிடாதி...?

பதற்றத்தோடு கிட்டத்தில் வந்தான். கனிவும் மிருதுவுமாய் அவள் முகத்தை வருடி, தன் வயிற்றோடு சேர்த்து அணைத்துக் கொண்டான் அவனுள் பதைப்பு பாசப் பரிதவிப்பு. கொஞ்சலாய்க் கேட்டான் ;

''ஏய் முப்பு, என்னம்மா இது?''

அவன் வயிற்று ரோமத்தில் அவள் கன்னம் உரச. வெறுமையாய் நிமிர்ந்து, அண்ணாந்தாள். விரிந்து மலர்ந்திருந்த கண்களில் குலை, கொதிப்பு. குற்றச் சாட்டு முள். 'அட, கொலைகாரப் பாவி' என்கிற சீற்றம்.

'வவுத்துப்புள்ளைக்காரி அழலாமா? ஒடம்பு என்னத் துக்காகும், முப்பு?''

"ஒடம்பா? அது இருந்தா என்ன, செத்தா என்ன?"

"ஏன் இப்படி 'வெடுக் வெடுக்'குன்னுபேசுதே, முப்பு? நீயில்லாம என்னாலே உசுர் வைச்சிருக்க முடியுமா? தாயில்லாம ஏங்கித் திரிஞ்ச பய நா. தாயா வந்து பாசத்தைப் பொழிஞ்ச மகராசி, நீ...!"

"பாசம் பாசம்னு வாய்க்கு வாய் சொல்லுதீயே? பெத்த புள்ளையைக் கொல்றது மட்டும் பாசமாக்கும்?"

"அறிவு கெட்டதனமாப் பேசாதே. புள்ளையை யாராச்சும் கொல்லுவாகளா? கொல்ல மனசு வருமா?"

"சும்மா பாவலா காட்டாதே! ஓஞ் சித்தியும், நீயும் 'குசு,குசு'ன்னு பேசுறது, எனக்குத் தெரியாதாக்கும்?"

அவனுள் பூரான் ஊர்கிற மாதிரியோர் உணர்வு. தன் உயிர்ப் பங்காளியிடமே பொய் சொல்லுகிற குற்ற உணர்ச்சி. சமாளித்துக் கொண்டு, உதறிப் பேசினான்.

"அதெல்லாமில்லே. நீயாவே என்னத்தையாச்சும் நெனைச்சுக்கிட்டு ஓளராதே."

"யோவ்... இப்பச் சொல்லிட்டேன், நமக்கு ரெண்டு புள்ளைக இருக்கு. அதுக தழையணும். நம்ம குடும்பம் சுத்தம் குறையில்லாம நிமிர்ந்து நிக்கணும். வவுத்துப் புள்ளையை கொன்னா... அந்தப் பாவம் சும்மா விடாதுய்யா. பெத்தவுக செய்யுற பாவ புண்ணியம், புள்ளைக தலையிலே விடியும்னு சொல்லுவாக. பாத்துக்கய்யா..."

"இங்க பாரு முப்பு! மாத்தி மாத்தி அதையே சொல்லாதே. கண்டதை கழியதை நெனைச்சுக்கிட்டு, மனசைப் புண்ணாக்காதே... நிம்மதியாயிரு..."

அவள் நம்பவில்லை. நிம்மதியாகவில்லை சொன்ன மூத்தவுக்கு நன்றாகப் புரிகிறது. அவன் மனசுக்குள் ஒரு பிலாக்கு! 'அழுகையும். கண்ணீருமாய், கலைந்த தலையும். அலங்கோலமுமாய் பரிதவித்துப் புலம்புகிற முப்பிடாதி,

தலை வாழை இலையாய் தளதளத்த மகராசி. மனசுக்குள் மனசை கரைத்து உயிர் கலந்த புண்ணியவதி. லட்சணக்காரி. வயிற்றைத் தள்ளிக்கொண்டு, லட்சணம் கெட்டுப் போய், கிழிந்துபோன மனசோடு கதறுகுற அவலம்!'

பார்க்கச் சகிக்கவில்லை. இளகிக் கரைகிற இருதயம். ''பொட்டப்புள்ளை பொறந்தா, பொறக்கட்டும் — அதையேன் சாகடிக்கணும்?'' — இளகிய மனசின் ஈர உச்சரிப்பு.

அந்த உச்சரிப்பை எச்சில் துப்பி அழிக்கிற சித்தியின் குரல். 'சின்னராசு கதையை அயத்துராதே. அந்தக் கதி ஒனக்கும் வரணுமா?' இரக்கமற்ற உலக நடப்பின் ராட்சசக் குரல். பாம்புக் குரல்.

அவனுள் ஓடிச்சிலிர்க்கிற பய உணர்ச்சி?...

உழுதவன் கணக்குப் பார்த்தால், உழக்கும் மிஞ்சுவ தில்லை. கலப்பையும் காணாமல் போயிடும். புதுப்புது வித்துகள். புதுப்புது விவசாய முறைகள். என்னத்தை வந்து என்ன செய்ய? புதுப்புது நோயும் வந்து சேர்கிறது. மருந்தடித்து, மருந்தடித்து, மனிதன் மாய வேண்டியிருக்கிறது.

விளைவதில்லை. விளைந்தாலும், வியாபாரிகளின் கொள்ளை. நாதியத்துப் போன சம்சாரித்தனம், நாசமாகி... பிழைப்பே இழுபறியாகி... வரட்டிழுப்பாகி...

சின்னராசுவும் ஒரு சின்னச் சம்சாரி. ஒற்றைப் பெண் பிள்ளை இருந்தால்கூட, அதைக் கரையேற்ற முடியாமல், கண் முழி பிதுங்கிப் போகிறான், சம்சாரி. சின்னராசுவுக்கு மூன்று பொட்டைகள்.

ரெண்டு பிள்ளைகளைக் கரையேற்றி முடிப்பதற்குள், 'ஆத்தாடி அம்மாடி' என்றாகிவிட்டது. காடுகரையெல்லாம் கைமாறி, காத்தாடிப் போனான்.

மூன்றாவது பெண்ணைக் கரை சேர்க்கத்தெம்பில்லை. அவனும் ஓடியாடிப் பார்த்தான். ஒரு வழியும் தட்டுப்படவில்லை.

குடும்பத்திற்குள் மூச்சு முட்டல். குமைச்சல், ஓயாத சண்டை சச்சரவுகள். நச்சரிப்புகள். நிம்மதியில்லை.

பெண்ணுக்கு ஓர் இடம் அமைவதுபோல நெருங்கி வந்து, நழுவிப் போயிற்று. அது விஷயமாய், மீண்டும் சண்டைகள். கூச்சல் கூப்பாடுகள்.

ரெண்டு நாளாய் சின்னராசைக் காணோம். ஊரே பதறிப் போய்த் தேடியது. பனந்தோப்பில் பிரேதமாய் விறைத்துப் போய்க் கிடந்தான். பூச்சி மருந்தைக் குடித்திருந்தான். வாயில் தள்ளிய நுரை, உலர்ந்து கிடந்தது.

சின்னராசின் மனைவியும், மற்றப் பெண்களும் வாயிலும், வயிற்றிலும் அடித்துக் கொண்டு, கதறி அழுத காட்சி, பார்க்கப் பரிதாபமாயிருந்தது. மனசை நடுங்க வைக்கிற வங்கொடுமையாயிருந்தது. ஊரே கதிகலங்கிப் போய்ப் புலம்பியது.

காலும், கையும் விரித்துப்போட்டு, விறைத்த பிரேதமாய்ப் புல் மண்டிய செம்மண் தரையில் கிடந்த அலங்கோலம், மாறிமாறி மனசுக்குள் தெரிகிறது! சொள்ள முத்துவுக்குள் நடுக்கம்.

"அடேய், சின்னராசு கதி ஒனக்கும் வரணுமா?" என்று சித்தி கேட்கிற போது, உள்ளுக்குள் உறைந்தே போகிறான்.

"பாவ புண்ணியத்தைப் பத்தி பயப்படாதே. நா மலட்டு ஜெம்மம். எங்கையாலே அந்தக் கொடுமையைச் செய்றேன். என்னை வேணும்னா பாவம் புடிச்சா, புடிச்சிட்டுப் போகட்டும். நீயும், ஒங்குடும்பமும் நல்லாயிருந்தா... அது எனக்குப் போதும்."

பாசத்தில் சித்தி சொல்கிறாள், கொன்னுவிடணும் என்று! முப்பிடாதியும் பாசத்தில் கதறுகிறாள் 'கொல்லாதே' என்று!— இவனும் பாசமுள்ள மனுசன் தான்!...

என்ன செய்றது? என்ன செய்யாமலிருப்பது? ஒன்றும் புரியவில்லை. கண்ணைக் குத்தி காட்டில் விட்டமாதிரியிருக்கிறது.

முப்பிடாதியை நினைக்க நினைக்க மனம் கிடந்து அலை பாய்கிறது! ரணகளமாய்த் திணறுகிறது.

அவள் தவிப்பும், புலம்பலுமாய்-மனம் கசந்த வெறுப்புமாய் கண்ணீரில் கரைகிற முப்பிடாதி... அட, கொடுமையே, அந்த மகராசிக்கா இந்தக் கதி?

அவள் அப்போதே மன்றாடினாளே?... மருகிக் கரைந்தாளே?...

மாதாந்திரத் 'தொல்லை' வர வேண்டிய நாள் தப்பிப் போய்ப் பத்து நாளாயிற்று. காட்டுக்கும், வீட்டுக்குமாய் 'விண் விண்' ணென்று ஓடியாடித் திரிந்த முப்பிடாதி, ஈரத்துணியாய் துவண்டு துவண்டு விழுந்தாள். 'சொளுக், சொளுக்' கென்று படுத்தாள். நாக்கில் எந்நேரமும் வழுவழுப்பு- விளக்கெண்ணெய் குடித்த மாதிரி. சோறு தண்ணீர் ஒவ்வவில்லை. ஓங்கரிப்பும், குமட்டலுமாய் வாடிக் கிடந்தாள்.

அப்பவே... சொள்ளமுத்துவிடம் அழாத குறையாய் சொல்லிச் சொல்லி மன்றாடினாள்:

"இதைக் கலைச்சிருவம்".

"ம் ஹூம், இருக்கட்டும்."

"சொன்னாக் கேளு. ரெண்டு பொட்டைப்புள்ளைக இருக்கு. போதும். மூணாவது... ம்னா, வீடு தாங்காது!"

"எனக்கு ஆம்பளைப் புள்ளை வேணும். வம்சப்பேரு தொலங்குறதுக்கு ஒரு சிங்கம் வேணும்."

''எதுக்கு-தோளுக்கு மேலே வளந்த பெறகு, கை நீட்டி பெத்தவுகளை அடிக்குறதுக்கா? வாய்க்கூசாம நாக்கை நீட்டி வைய்றதுக்கா?''

''அதெல்லாம், நம்ம புள்ளை அப்படி வராது...''

''ஆமா. ஒம்புள்ளைமட்டும் தங்கப் புள்ளையா வருமாக்கும்?''

''ஆமா. தங்கந்தான். நீயும் நானும் தங்கம். நம்ம புள்ளையும் தங்கந்தான்...!''

''சரி... அப்படியே இருக்கட்டும். பொறக்குறதும் பொட்டையாய்ப் போச்சுன்னா...?''

''ஒரு நம்பிக்கையிலேதான் நாளும் பொழுதும் நகர்ந்துக்கிட்டிருக்கு. எதையெடுத்தாலும் சந்தேகப் பட்டா... எப்படி? நாஞ் சொல்லுதேன்... நமக்கு ஆம்ப ளைப் புள்ளைதான். அது எனக்கு வேணும்!''

''இங்க பாரு. இப்பவே சொல்லியிருதேன், பொறக் குறது ஆணா இருந்தா இருக்கட்டும். நல்லதுதா. பொண்ணாப் போச்சுன்னா... நெல்உமி, எருக்கலம் பால்னு அலையக்கூடாது. ஆமா... அப்படி இப்படின்னு கமுக்கமாக ஏதாச்சும் செய்ஞ்சேன்னா, நா ரணகாளியா மாறிருவேன்...!''

சொள்ளமுத்துவுக்கு சுள்ளென்று கோபம் வந்தது. எரிச்சலாய் ஒரு சீறு சீறினான்:

''ஏய், இந்தா. அநாவசியமாய்ப் பேசாதே. எனக்கு ஆம்பளைப் புள்ளை வேணும். இஷ்டமிருந்தா, பெத்துக் குடு. இல்லேன்னா கழிச்சிடு.''

சினந்து பேசிவிட்டு விருட்டென்று வெளியேறிப் போனது ஞாபகத்துக்கு வந்தது. அன்றைக்கே 'சரி' யென்று தலையாட்டியிருந்தால்... இன்றைக்கு இந்தச் சிக்கல் வந்து நிற்காது!

சிக்கல் என்றால், லேசுப்பட்ட சிக்கலா? சொள்ள முத்துவுக்கு மீள முடியும் என்று தோன்றவில்லை. இருட்டிக் கொண்டு வந்தது.

சித்தியும், முப்பிடாதியும் எதிரும் புதிருமாய் ரெண்டு பக்கமாய் இழுக்கிறார்கள்— 'கொல்லணும்', 'கொல்ல விடாதே.'

எந்தப் பக்கம் சாய்வது? சாயாமல் இருப்பது? எந்தப் பக்கம் சாய்ந்தாலும் பாவம்தான். மன உளைச்சல்தான்.

"பாவம் என்னைப் பிடிச்சா பிடிக்கட்டும். நீ சும்மாயிரு" உலக நடப்பின் வடிவமாய் சித்தி.

இவனுக்குள் நெருக்கடி. சிக்கல். மனத்திணறல். நினைக்க நினைக்க, ஏகமாய்க் கற்பனை. திகில். பீதி. விதம் விதமாக பயங்கரக் காட்சிகள்.

விறைத்துக் கிடக்கிற, சின்னராசின் பிரேதம்...?

வெள்ளிக்கிழமை. பொழுதடைகிற நேரம். முப்பிடாதிக்கு குத்திப் பிடுங்குகிற மாதிரி வலி. இடுப்பை சுற்றி பின்னிப் பிசைகிற ரண வேதனை.

"ஆ... ஹம்மா!" என்று வீரிட்டாள், முப்பிடாதி.

வீடு பூராவிலும், பக்கத்து வீட்டுப் பெண்கள். ஈர மனத்துடிப்போடு பரபரத்துப் பக்குவம் செய்கிற பெண்கள்.

தெருவெல்லாம் செய்தி காட்டுத் தீயாய்ப் பரவிற்று.

"சொள்ளமுத்து பொண்டாட்டிக்கு இடுப்புவலி கண்டுடுச்சாம்."

"யாருக்கு, முப்பிடாதிக்கா?"

"ஆமா! என்ன புள்ளை பெறக்கப் போகுதோ, தெரியலை. வவுறு இருந்த இருப்பைப் பாத்தா... பொட்டைதா பெறக்கும்."

"அடக்கிரககாரமே! சும்மாவே ரெண்டும் பொட்டைக!... மூணாவது அப்படியா? பாவம், நம்ம மூப்பிடாதி!..."

"தலையெழுத்து அப்படியிருந்தா... அதை யாராலே மாத்த முடியும்?"

"ஏம் முடியாது? எருக்கலம் பால் இல்லே?"

"புள்ளையச் சொமந்த கொடுமை வேற. கொல்ற பாவம் வேற. மூப்பிடாதிக்கா... இந்தப் பாதரவு?"

"முப்பிடாதிக்கு மட்டுமா? பொம்பள ஜெம்மமே பாவ ஜெம்மந்தான். அதுகளுக்கு எப்பவும் தும்பந்தான்."

தெருவெல்லாம் அங்கே இங்கே பெண்களின் கிசுகிசு வென்கிற பேச்சு. மனித ஈரமும் உலகச்சோகமுமாய்ப் பெருமூச்சுகள்.

நன்றாக இருட்டி விட்டது. கருகருவென்று முன்னிருட்டு. நார்க்கட்டிலில் வேதனை தாளாமல் துடிக்கிற முப்பிடாதி. கத்தலும் கதறலுமாய் உடம்பை முறுக்கிக் கொண்டு தவிக்கிறாள். சுற்றிலும் பலத் தவிப்புகளோடு பரபரக்கிற பெண்கள். ஆறுதலும், அதட்டலுமாய்ச் சத்தம் கொடுக்கிற மூதாட்டிகள். வீடு பூராவும் மனிதக் கசகசப்பு.

ஏழு மணிக்குமேல்... ஒரு புதிய ஜீவனின் 'முதல்' வீரிடல்!...

அந்த வீரிடலைக் கேட்ட கணத்தில், அத்தனை கொடிய ரண வேதனையிலும், கழுத்தைச் சாய்த்துப் பிள்ளையைப் பார்த்தாள், முப்பிடாதி. பெண் குழந்தை!

அவளுக்குள் கத்தி செருகிய மாதிரியிருந்தது.

படபடப்பும் புழுக்கமுமாய் வந்தது. மல்லிக் காபி கொடுத்தார்கள். அதில் ஏதோ வேற்றுவாசம். எதையும்

உணரும் நிலையில் முப்பிடாதி இல்லை. அவளுள் ஆழமாய்க் கத்தி...''

அவளுக்கு மல்லிக் காப்பியைப் புகட்டினார்கள். குடித்தாள். உறக்கம் கண்ணைச் சுழற்றிக் கொண்டு அமுக்கியது.

அவள் மனசுக்குள் ஒரு திமிறல். தவிப்பு. ''ஐயோ, ஐயோ...!'' என்கிற பதைப்பு.

ஐயோ... குழந்தை, வீறிடுகிற குழந்தை. எருக்கலம் பால் புகட்டப்பட்ட குழந்தை. வீறிடலின் சுருதி குறைந்து, அடங்கிப் போகிற குழந்தை.

ஆங்காரமாய்க் கத்த வேண்டும் என்று ஆவேசமாய் வாயைத் திறக்கிறாள். ஆழ்மனக் கொதிப்போடு அலற முயல்கிறாள். வாய்வரவில்லை. சத்தம் தொண்டையை விட்டு வரமாட்டேன் என்கிறது. அவள் உயிர் துடிக்கத் துடிக்க, தவித்துத் தவித்து...

உடம்பு அப்படியே உறங்கிப் போயிற்று.

மறுநாள். விடியற்காலம். கட்டிலில் அடித்துப் போட்ட மாதிரி கிடக்கிறாள், முப்பிடாதி கட்டிலின் சட்டத்தில் கலக்கத்தோடு சொள்ளமுத்து. வீடு முழுக்க பிரசவ நெடி.

அவள் முகத்தின் மேல் நங்கூரமிடுகிற அவன் பார்வை. அவனுள் பதைப்பு. குற்ற உணர்வு, பூரானாக ஊர்கிறது.

அவள் முகத்தில் மெல்லிசாய் ஒரு சலனம். உயிர்ச் சலனம். இன்னும் கண் விழிக்கவில்லை. வலது கை மட்டும் அசைகிறது. கட்டிலில் பரவி, எதையோ தேடுகிறது. கையின் வெறுமை. எதுவும் தட்டுப்படாத சூன்யம்.

படக்கென்று முழிக்கிறாள். விருட்டென்று எழுந்து உட்கார்ந்தாள். பதற்றத்தோடு பக்கத்தில் புருசன்.

''எங்க? எம் புள்ளை எங்க? எங்க?'' வெறிபிடித்த கத்தலாய்க் கத்தினாள்.

''செத்துத்தான் பொறந்துச்சு...''

''பொய்யி... பொய்யி... புள்ளை அழுத சத்தம் எனக்குக் கேட்டுச்சு. காதுலே கேட்டேன். கொன்னுட் டீங்களா, கொன்னுட்டீங்களா...? எம் புள்ளையைக் கொன்னுட்டீங்களா?'' ரணகாளியாய் கோபக் கதறலாய்- காட்டுக்கூப்பாடாய் வீரிட்டாள்.

அப்புறம்—

வேறு வார்த்தையேயில்லை. ''கொன்னுட்டீங்களா, கொன்னுட்டீங்களா'' என்று திரும்பத் திரும்ப... சுருதி குறையக் குறைய... கடைசியில் முணுமுணுப்பாய்— அதே, 'கொன்னுட்டீங்களா' தான்...!

மாராப்புச் சேலை நழுவிக் கிடந்தது. பச்சை ஜாக் கெட்டில் மஞ்சள் திட்டுகள். அதை நனைத்துக்கொண்டு அமிர்தப்பால்.

மாராப்புச் சேலையை எடுத்துப் போட்டுக் கொள்ள வில்லை. போடணும் என்கிற உணர்வுமில்லை. உதடு களின் ஒரு சீரான முணுமுணுப்பாய். அதே 'கொன்னுட் டீங்களா...!'

இப்போது—

பார்வை சம்பந்தமற்று எங்கோ வெறிக்கிறது.

''ஐயோ... முப்பிடாதிக்கு மூளை பிசகிருச்சா?''

அவளையே பயத்தோடும், பதைப்போடும்; பார்த்துக் கொண்டிருந்த சொள்ளமுத்துவுக்குள் ஒரு திகில். உள்ளுக்குள் ஓடிய ஒரு கிலி உணர்ச்சி.

"'முப்பிடாதி' முப்பு... ஏய் முப்பு" உயிரில்லாமல் கூப்பிட்டுப் பார்த்தான். அவளுள் சலனமில்லை. அதே 'கொன்னுட்டீங்களா?' முணுமுணுப்பு. அதே வெறுப்பு.

"ஐயய்யோ... ஐடய்யோ... எம் முப்புடாதியையும் சேத்துக் கொன்னுட்டீங்களே?... ஐயய்யோ... கொன்னு போட்டீகளே!..." என்று தலையிலும், நெஞ்சிலும் அடித்துக் கொண்டு கதறுகிற ஆத்மநாயகனை அதே மலர்ச் சிரிப்போடு வெறிக்கிறாள், முப்பிடாதி.

அவள் ஜாக்கட்டில்—

சிந்துவாரில்லாமல் பரவி, நனைந்து, சொட்டடிக் கிறது அமிர்தப்பால்— வாழ்க்கையைப்போல!... □

# 2. மதிப்பீடு

கம்பம் பயிர் முழங்கால் அளவுக்கு இருந்தது. பசலியும் புல்லுமாய் மண்டிக்கிடக்கிற களைகள். நிரை பிடித்து வேகமும் வேர்வையுமாய்க் களை வெட்டிக் கொண்டிருந்த கூலிப் பெண்களுடன், பொட்டுவும் வெட்டிக்கொண்டிருந்தாள்.

பொட்டுவுக்கு மனசு எங்கோ கிடந்தது. கண்கள் தூக்கமற்று நெறுநெறுத்தன. போதாக்குறைக்கு மண்டையிடி வேறு. மனசின் குழப்பம், கையில் இறங்க களை சுரண்டி தடுமாறியது. பயிர்களும் தவறுதலாக வெட்டுப்பட்டன.

பக்கத்து நிரையில் வெட்டிக்கொண்டு போன மாடத்தி பொட்டைப் பார்த்தாள். அவள் மூக்கு நுனியில் வேர்வைத்துளி ஆடிக் குலுங்குகிறது. முந்தானையை எடுத்து முதுகில் விரிப்பாகப் போட்டு தலையில் கட்டியிருந்தாள். ஜாக்கட்டு முழுக்க வேர்வை உப்பு, வெள்ளை வெள்ளைக் கோடுகளாய்...

''ஏய் பொட்டு, பாத்து வெட்டு, பயிரு வெட்டு விழுது. வெட்டுன பயிரை புழுதிக்குள்ளே அமுக்கு''

''ஆட்டும்மா...''

''புஞ்சைக்காரி கண்ணுல பட்டதுன்னா... வசவு நாறிப்போகும்''

''அதுவுஞ் செரிதான். என்ன எழவோ... கை தவறுது''

''ராத்திரி ஒறங்கலியா?''

"ம், கண்ணு மூடலை"

மாடத்தி உதட்டில் குறுஞ்சிரிப்பு பூத்தது.

கண்களில் ஒரு கேலியான மின்வெட்டு.

"ஏண்டி? வீட்டுக்காரன் வெளையாட்டா?"

பொட்டு உதட்டிலும் சிரிப்பு. ஆனால், வேதனைத் தீயில் வெந்து கருகிய சிரிப்பு. புண்பட்டுப்போன மனசின் வாடல் சிரிப்பு.

மாடத்திக்கு என்னவோ போலாகி விட்டது.

"ஏம்... பொட்டு, என்ன விஷயம்?"

"பகல்பூரா வெயில்லே வெறகு வெட்டுன மனுஷர, ராத்திரி முழுக்க உஷ்ணக்கடுப்பு தாங்க மாட்டாம தவிச்சு வந்தாரு. பார்க்க பரிதாபமா இருந்துச்சு"

"ஏண்டி, உள்ளங்கால்லேயும், கொப்புள்லேயும் வெளக்கெண்ணெய் போடலாம்லே? உஷ்ணக் கடுப்பு விட்டுரும்லே?"

"எங்க ஊர்லே ஏது கடை? சாமக்காட்லே எண்ணெய்க்கு எங்க போக?"

"அடக் கிரகச்சாரமே! அப்புறம்?"

"என்ன செய்ய...? நீச்சுத்தண்ணியை மோந்து மோந்து குடுத்தேன். அதோடுதான் இன்னைக்கும் வெறகு வெட்டப்போயிருக்காரு"

"அடக் கொடுமையே!"

"அதான்... மனசு, ஒரு மனசாயில்லே"

அழுத்திக்கொண்டிருந்த பாரம் பகிரப்பட்டதில், பொட்டு மனசு லேசாகியிருந்தது. சுலபமாய் மூச்சுவிட முடிந்தது.

வைகாசி மாதத்து வெயில் சுள்ளென்று அறைகிறது. கடுங்கோடை, கோடை மழை அருந்தலாகிவிட்டது. அழுக்கு மேகம் திரண்டு திரண்டு ஜனங்களை ஏங்கவைத்து விட்டு, மாயமாகிவிட்டது.

அங்கொன்றும் இங்கொன்றுமாக சாரல் மழை தூறல் போட்டது. ஊரின் முற்றம் தெளித்துவிட்டு ஓடிப் போனது.

பூமிச்சூடு வெக்கை வாசனையோடு கிளம்பிவிட்டது. ஊரில், சில வீடுகளில், வைசூரி. பூமி கொதிப்பு ஆகிவிட்டதால், செம்மறியாடுகள் 'வெதுப்பு' நோய் கண்டு, செத்து செத்து விழுந்தன.

கிணற்றுத் தண்ணீர் பார்த்திருக்க வற்றி உருண்டது. கரிசல்காட்டு சம்சாரிகள் மனம் பேதலித்துப்போய்த் திரிந்தனர். வெள்ளாமைக்கு நீர் பாய்ச்ச வழியில்லை. தவித்தனர்.

மழை செழித்த நாளிலேயே சம்சாரித்தனம் கட்டுபடியாகாது. வறட்சியானால் சொல்லவா வேண்டும்?

சம்சாரித்தனமே அரண்டு கிடந்தது. நிறைய புஞ்சைகள் உழுத நிலையிலேயே சும்மா கிடந்தன.

வெள்ளாமை இல்லாமல் கூலி ஜனங்களுக்கு வேலை ஏது? கூலி வேலை கிடைக்காமல் ஆலாய்ப் பறந்தனர்.

சுற்றுப்பட்டி மூன்று ஊர் ஜனங்களும் வேலை, வேலை என்று இந்த ஊரில் அலைபாய்ந்தனர். அன்றாடங் காய்ச்சிகளான கூலி ஜனங்களின் உலை காய்ந்தாகணுமே, வயிறு நனைந்தாகணுமே!

பன்னிரண்டு ரூபாயாக இருந்த கூலி அரவமில்லாமல் பத்து ரூபாய்க்கு வந்துவிட்டது.

நாலரை ரூபாயாக இருந்த அரிசி இப்போது ஆறரை ரூபாய். அரை ரூபாய்க்கு சீரகம் கேட்டால், கடைக்காரர் புழுவைப் பார்த்த மாதிரி பார்க்கிறார்.

எல்லா விலைவாசியும் தீயாக இருக்கிறது. இந்த லட்சணத்தில் இந்தக் கூலியை வைத்துக்கொண்டு என்னத்தை வாங்குறது? எப்படிக் காய்ச்சுறது? எப்படித் தான் பிள்ளை குட்டிகளைக் காப்பாற்றி ஜீவனம் பண்றது?

இந்த அற்பக்கூலியையும் அன்றாடம் கொடுத்துத் தொலைக்கிறார்களா? அதுவுமில்லை. ஆறு நாளாய் சம்பளம் தரவில்லை.

புஞ்சைக்காரர் மிளகாய் வற்றல் விற்க சங்கரன் கோவில் போயிருக்கிறார். பணத்தோடு வந்தால்தான், இன்றைக்கும் கூலி.

வேலை குதிரைக்கொம்பாய் இருக்கிற கொடுமை. உழைத்த கூலியைக்கூட கண்டிஷன் பண்ணிக் கேட்க முடிகிறதில்லை. புஞ்சைக்காரர் சொன்னதுதான் சட்டம். மறு பேச்சு பேச ஏது ஞாயம்?

கடைக்காரரிடம் நேற்றே பதிமூன்று ரூபாய் பாக்கி. சரக்கு வாங்கி முடித்துவிட்டு தயக்கமாய் சொன்னவுடன், கடைக்காரர் கண்ணில் கோபம். முகத்தில் தாட்சண்யம் மற்ற வெறுப்பு.

"கடனா...?" என்று கேட்டுவிட்டு அவர் பார்த்த அந்தப் பார்வை. பொட்டுவுக்குச் சாகலாம் போலிருந்தது. அவமானத்தில் மனசு கிடந்து கூசியது. பக்கத்தில் சரக்கு வாங்கக் காத்திருந்தவர்கள் கண்ணில் ஒரு ஏளன மின்னல்.

பொட்டுவுக்கு நாக்கு எழ மறுத்தது. உள்ளுக்குள் தவிப்பு. வார்த்தைகிடைக்காமல் மறுகினாள். எப்படியோ சமாளித்து திணறித் திணறிச் சொன்னாள்.

"அஞ்சு நாளா சம்பளம் தரலைண்ணாச்சி. நாளைக்கு வந்துரும். சேத்துத் தந்துருதேன்."

"பாக்கி குடுத்தா... திரும்ப வரமாட்டேங்குதே..."

"நாங்க என்ன, ஊரைவிட்டா ஓடிப் போயிருதோம்?"

"ஊரைவிட்டு ஓடமாட்டீங்க. அடுத்த கடைக்குப் போயிருவீக"

"அப்படியெல்லாம் எங்களை நெனைக்காதீங்கண்ணாச்சி. சோத்தைவிட மானத்தைப் பெருசா நெனைக்கிறவுக"

"சரி சரி... நாளைக்குக் கரெக்டா குடுத்துரனும். பெறகு, நாளைக்கும் வந்து வாய்தா சொல்லிக்கிட்டு நிக்கக் கூடாது. தெரிஞ்சுதா?"

கடைக்காரர் குரலில் கண்டிஷன் இருந்தது. அந்தக் கண்டிப்பு உள்ளுக்குள் மிரட்டலாய் ஒலித்தது.

"சரிண்ணாச்சி..." என்பதற்குள் பொட்டு தவித்துப் போனாள். ஏதோ ஒரு பெரிய இக்கட்டிலிருந்து தப்பிப் பிழைத்த மாதிரியிருந்தது.

...இன்றைக்கு சாயங்காலம் சம்பளம் வாங்கியவுடன் முதல் வேலையாக கடைப்பாக்கியை வரவு வைக்கணும். கடைக்காரரிடம் நாணயத்தைக் காட்டணும். அரிசி சாமான் வாங்கணும். ஞாபகமாய் விளக்கெண்ணெய் வாங்கிட்டுப் போகணும். அதோடு ரெண்டு எலுமிச்சம் பழமும்...

எலுமிச்சச்சாறு உஷ்ணக் கடுப்பைக் கண்டிக்கும். கண்ணங்கமாய் கேட்கும்.

மனசுக்குள் நினைவுக்கோலங்கள். நீண்டு, வளைந்து சித்திரமாய் நெளிகிற கோலங்கள். கணக்குகளும் கனவுகளுமாய்ப் படர்கிற கோலங்கள்.

கோலத்தின்மேல் 'சளப்'பென்று வாளித் தண்ணீரை ஊற்றிய மாதிரி... மனதுக்குள் ஓர் அதிர்வு.

'பணத்தோட புஞ்சைக்காரர் வரலேன்னா? இன்னைக்கும் சம்பளம் இல்லேன்னு சொல்லிட்டா...'

உள் நரம்பு அறுந்துபோன மாதிரி இருந்தது. சட்டென்று பரவி நிறைந்த ஒரு சூன்யம். மனசுக்குள் பிடிபட்ட குருவியின் சிறகாக- படபடப்பு.

கடைக்காரரின் வெறுப்பும் கோபமுமான பார்வை. பிள்ளைகளின் தவிப்பும் தாகமுமான முகங்கள். தூக்கமின்மையால் சிவந்த கண்களோடு வாடிய முகத்தோடு விறகு வெட்டச் சென்ற கிருஷ்ணன்.

என்னத்தை வாங்குறது...? எப்படி உலை வைக்கிறது? பிள்ளைகளுக்கு என்ன பதில் சொல்றது?

பெற்ற மனசு அலைபாய்ந்தது. இன்றைய பொழுதே கேள்விக்குறியாகி இருட்டிக்கொண்டு வந்தது.

பொட்டுவுக்கு மனசின் நடுக்கம், கைகளில்வியர்த்தது. நெற்றியிலிருந்து வழிந்து இறங்கிய வியர்வைத்துளி கண்ணில் விழுந்து காந்தலெடுத்தது. மறு கண்ணில் ரோமக்கற்றை விழுந்து மறைத்தது.

களைவெட்டு யந்திர கதியில் நடந்துகொண்டிருந்தது. மறு நிரை பிடித்து வெட்டி வந்தனர்.

பொட்டு, அம்மன் சாமியை மனசுக்குள் வரவழைத்துக்கொண்டாள். அத்துடன் ஊரில் அகப்பட்ட சாமிகளையெல்லாம் நினைத்துக்கொண்டாள்.

"எந்தத் தடங்கலுமில்லாம புஞ்சைக்காரரு பணத்தோட வந்துசேரணும், என் வயித்துலே பாலை வார்க்கணும். சாமி, நீதான் அதுக்குப் பொறுப்பு."

அவள் கும்பிட்ட சாமிகள் எதுவும் துணைக்கு வரவில்லை. ஏறிட்டும் பார்க்கவில்லை. மூன்று மணிக்கு வேலை முடிந்தது. ஐந்து மணியாகியும்... இன்னும் புஞ்சைக்காரர் வந்து சேரவில்லை.

வீட்டுச்சுவர் நிழலில் இருப்புக் கொள்ளாமல் தவித்தாள் பொட்டு. நேரம் போகப் போக அவளுள் ஒரு பதைப்பு. பிள்ளைகள் வீட்டுக்கு வந்திருக்கும். அம்மாவைத் தேடும். அம்மாவைக் காணாத ஏக்கத்திலும், கோபத்திலும் அதுகள் ஒன்றோடு ஒன்று சண்டைபோடும். 'அழுவாதீக' என்று சொல்லக்கூட வழியில்லாமல்... பொட்டு இங்கே கிடக்கிறாளே...

கோடை வெயிலில் காலையிலிருந்து களைவெட்டிய அலுப்பைவிட... இந்தத் தவிப்புதான் அவளை வாட்டி வதைத்தது.

புஞ்சைக்காரி எந்தச் சிரமமுமில்லாமல்- சமையல் வேலையில் இருந்தாள்.

நேரம், பொட்டுவுக்குள் பூரானாக ஊர்ந்தது. அவளுக்குள் ஒரு பிசைவு. கண்ணுக்குள் வந்து முட்டி உறுத்துகிற மனக்கசிவு.

எப்படி உலை வைக்கிறது... கடைக்காரர் முகத்தை எப்படிப் பார்க்கிறது?

பொட்டுவுக்கு முள்ளின்மேல் உட்கார்ந்திருக்கிற மாதிரி இருந்தது. மூச்சுத் திணறியது. எதையும் நினைக்கவே பயமாக இருந்தது. படபடத்து வந்தது.

'அடப்பாதரவே... ஏழைபாழை பொழைப்பு இப்படியா ஆகணும்? ஒழைச்ச கூலியைக்கூட உரைச்சுக் கேக்க முடியாம... புழுவா தவிக்கணும்?'

வெயில் மஞ்சளாகிவிட்டது. தெருவில் நடக்கிற ஆள்களின் நிழல் நீளம் நீளமாய் நகர்கிறது. வெளியே வந்து எட்டிப் பார்த்தாள், வீட்டுக்காரி. வாடி வதங்கிப் போய்... பொட்டு.

''சரி பொட்டு, நீ ஊருக்குப் போ. நாளைக்கு வந்து ஏழுநாள் சம்பளத்தையும் சேதது வாங்கிட்டுப் போ''

வெகு சாதாரணமாய்ச் சொல்கிற அவள் முகத்தைக் ஏறிட்டாள், பொட்டு. பொட்டு கண்கள் கலங்கி கிடந்தன.

''இல்லேம்மா... சோத்துக்கு என்னமாச்சும் வாங்கிட்டுப் போகணும்மா''

''சரி தெரியுது, வாஸ்தவந்தா. இன்னும் ஐயா வரலைல்லே? நா என்ன செய்ய?''

''யார்கிட்டயாக்சும் வாங்கிக் குடுங்கம்மா. அன்னா டங்காய்ச்சிக நாங்க. ஆறு நா சம்பளத்தை நிறுத்திக் கிட்டா... என்னத்தைக் காய்ச்சிக்குடிக்க?''

''நா யார்கிட்டே போய்க் கேக்குறது? ஐயாவுக்குத் தெரிஞ்சா கொன்னுபோடுவாரு...''

''அப்புறம்மா... எனக்கு வழி?''

''நேத்து என்ன செஞ்சே?''

''கடையிலே கடன் சொல்லி வாங்கிட்டுப் போனேன்.''

''இன்னிக்கும் வாங்கிட்டுப்போ''

''ஐயய்யோ...! கடைக்காரரு நேத்தே தரமாட் டேன்னு சொன்னாரு. இன்னிக்கும் போய் கடன்னு கேட்டா... அம்புட்டுத்தான்''

''சரி... அதுக்கு என்னை என்ன செய்யச் சொல்லுதே? எப்படியும் சமாளி. நாளைக்கு வந்து எல்லாச் சம்பளத் தையும் வாங்கிட்டுப்போ...''

வீட்டுக்காரி விட்டாற்றியாக சொன்ன தோரணை. இவளுடைய சிரமத்தை நினைத்துக்கூடப் பார்க்காமல், உதடு ஒட்டாமல் பேசிய அலட்சியம்.

பொட்டுவுக்குள் சுறுசுறுவென்று வந்தது. மனசின் கொதிப்பு கண்ணுக்கு வர விரியப் பார்த்தாள்.

தருமமா கேட்டு நிக்கேன்? நாக்குலே பல்படாம பேசுதீகளே... உழைச்ச கூலியை கேக்குறதுக்கு எதுக்குப் பயப்படணும்? எதுக்குபட்டினியா கிடக்கணும்? எதுக்குக் கடையிலே நின்னு கேவலப்படணும்?

மழையில்லாக் கொடுமை... வேலையற்ற நிலைமை, கூலி வேலை கிடைக்கிறதே குதிரைக்கொம்பாக இருக்குது. 'அப்ப நாளைக்கு நீ வரவேண்டாம்' என்று சொல்லிவிட்டால்...

மனசின் இயல்பான சூடு, வறட்சியில் நனைந்து ஈரச் சாம்பலானது. கண்களைத் தாழ்த்தினாள்...

"என்னடி அப்படி முழிக்கே?" சினந்து கேட்டாள், வீட்டுக்காரி.

"ஒண்ணுமில்லேம்மா..." என்று குரலைத் தாழ்த்து கிறபோது... மனசு உடைந்தது. உள்ளுக்குள் முடங்கிய உணர்ச்சி, கீழுதட்டில் அறுபட்ட பல்லி வாலாகத் துடித்தது.

'ஈரமத்துப் போன இந்தப் பூமியிலே உசுர வச்சு இருக்கிறதே... பாவம்' என்று புலம்பிக் கொண்டே கடைக்கு வந்தாள்.

நல்ல வேளை, கடையில் வேறு ஆள்கள் இல்லை, கடைக்காரர் மட்டும் ஏதோ கணக்குப் பார்த்துக்கொண் டிருந்தார்.

முன்கூட்டியே நிலைமையைச் சொல்லிக் கேட்டாள்.

"நம்பிக் குடுக்கறதுன்னா...குடுங்க, இல்லேன்னா போறேன். விதிப்படி இருக்கட்டும்" என்று விரக்தியில் வெறுத்துப் போய்ச் சொன்னாள்.

பொட்டு கேட்ட தோரணையும், தர்மசங்கட உணர் வில் தவித்த அவள் முகமும் கடைக்காரர் மனசை என்ன வோ செய்தது. "சரி, வாங்கிட்டுப்போ"

அரிசி வாங்கினாள். எல்லாச் சாமான்களும் வாங்கினாள். பிள்ளைகளுக்கு காராச்சேவு வாங்கிக் கொண்டாள்.

பழைய பாக்கியோடு சேர்த்து... மொத்தம் இருபத்தொன்பது ரூபாய் பற்று.

கடைக்காரரின் மன ஈரம், அவளுக்குள் என்னவோ மாதிரி இருந்தது.

பொழுதுக்கால் மலைமுகட்டுக்கு இறங்கிவிட்டது. வேக வேகமாக நடையை எட்டிப் போட்டாள். அவள் ஊர், ஒரு மைல் இருக்கும். பிள்ளைகள் நினைப்பு காலுக்குச் சக்கரம் கட்டி விட்டது.

வீடு போய்ப் பார்த்தால்... ஒரே அலங்கோலம். கிருஷ்ணன் அரை உயிராய்த் துவண்டு கிடந்தான். உடம்பு முழுக்க பொடிப் பொடியாய் வேலி இலைகள் ஒட்டியிருந்தன.

விறகு வெட்டுகிற வேலையின் பாதியில் வந்திருக்கிற அடையாளம். கண்ணுக்குள் ஜீவனாய்ச் சுருண்டு கிடந்தான்.

இவளுக்குள் பதற்றம், பதைப்பு.

''என்ன... என்னாச்சு!''

''வேலைக்குப் போனதுலேருந்து விடாத வயித்துக் கடுப்பு, அடிவயித்துலே பிசைஞ்சு பிசைஞ்சு வலி, இப்பா ரத்தம் ரத்தமா போகுது''

அவளுக்குக் குலை கிடந்து ஆடியது. உள் மனசின் ஆழம் வரை நடுக்கத்தின் அதிர்வு. வெறி கொண்டவளைப் போல சாமான்களைக் கீழே போட்டுவிட்டு, தலையில் 'மடேர்' மடேரென்று அடித்துக்கொண்டு கதறினாள்.

"ஐயய்யோ பாதரவே. இப்ப நா என்ன செய்யட்டும்? வெறுங் கழுதையா வந்து நிக்கேனே... ஆஸ்பத்திரி போறதுக்கு சல்லிக் காசு கூட இல்லியே!..."

மயிர்க் கற்றை அலங்கோலமாய் குலைந்து கிடக்க அழுது அரற்றும் அம்மாவைப் பார்த்து அரண்டு போய்க் கிடந்ததுகள், பிள்ளைகள்.

வாடிய முகத்தோடு மனைவியைப் பார்த்துவிட்டு, சையறு நிலையில் கதியற்று சுவரை வெறித்தான்.

"எத்தனை தடவை... போச்சு"

"பத்துப் பாஞ்சு தடவை போயிருக்கும்"

"ரத்தம் ரொம்பப் போவுதா?"

"மதியத்துக்குப் பெறகு... ரத்தம் மட்டும்தான் போவுது"

"ஐயய்யோ..."

"எதுக்கு இப்படி அழுகிற? பாவம், பிள்ளைக பதறுது"

"கைப்பக்குவத்துக்கு இனிமே கட்டுப்படாதே... ஆஸ்பத்திரி போய் ஊசி போட்டு, மாத்திரை தின்னாத் தானே கட்டுப்படும்?"

"ம்"

"எப்படிப் பாத்தாலும் முப்பது ரூவாயாச்சும் வேணுமே..."

"ம். நீ கூலி வாங்கிட்டு வரல்லியா?"

"பாவிக, இல்லேன்னுட்டாகளே... நா என்ன செய்ய? உங்க சம்பளத்தையும் வாங்க முடியாதே, ஆடு வாங்கிக் குடுத்த பாக்கியிலே உங்க சம்பளத்தை கழிச்சுக்கிட்டு வாராகளே..."

"சரி, விட்டுத்தள்ளு, அழாதே, நடக்குறபடி நடக்கட்டும். அடிவயிறு வலிக்கு. ஓடைக்குப் போய்ட்டு வாரேன்."

தோலிருக்க சுளை பறித்த மாதிரி...வறுற்றுக் கடுப்பு அவனை மிகவும் சோர்வுபடுத்தியிருக்கிறது, ரொம்பத் தள்ளாடினான். சுவரைப் பிடித்து பலவீனமாய் நகர்ந்தான்.

அவளுக்குள் எதுவோ கிடந்து துடித்தது. நிலை கொண்டு நிற்க முடியாமல் தவித்தாள். விழுந்தடித்துக் கொண்டு வடக்குத் தெரு நோக்கி ஓடினாள், பொட்டு.

நல்ல வேளை. குப்புசாமி இருந்தான். கண்ணீரும் கதறலுமாய் இவள் சொன்னவுடன், சரியென்றான்.

"நா வேணும்னா... சைக்கிள்லே வச்சு திருவேங்கடம் கொண்டு போய்ட்டு கொண்டு வர்றேன். ஆஸ்பத்திரிலே ஒரு ஊசி போட்டா...எல்லாம் சரியாய்ப் போகும். நீ ரூவா மட்டும் ரெடி பண்ணு."

"இதோ... ஒரு நொடியிலே"

ஒரு புயலைப் போல பொட்டு நடையை எட்டிப் போட்டாள். புஞ்சைக்காரியிடம் சண்டை போட்டாவது ரூபாயை வாங்கி வருவது என்று வெறியோடு புறப்பட்டாள்.

"வேலைக்கு வேண்டாம்னு சொன்னாலும் சொல்லிட்டுப் போகட்டும். அதைப் பத்தி இப்ப நினைச்சு

பயந்துக்கிட்டிருக்க முடியாது...'' என்று உள்ளுக்குள் ஒரு உறுதியோடு முணுமுணுத்துக் கொண்டாள்.

∴ ∴ ∴

மறு வாரம். அந்தப் புஞ்சைக்காரி தெருவில் சக பெண்களுடன் பேசிக் கொண்டிருந்தாள்.

''பொட்டா...? அவள் பெரீ...ய்ய வாயாடியாச்சே! மரியாதை தெரியாத கழுதை. தாறுமாறா சண்டைக்கு வருவாளே! அவளை வைச்சு வேலை வாங்க முடியாது'' □

# 3. சொந்த வீடு

எப்போது விடியும் என்று கொட்டக் கொட்டக் விழித்திருந்தாள், சுப்புத்தாய். வீம்பிலும் வேதனையிலும் மனசெல்லாம் நைந்து கிடந்தது. புருஷன் போட்டு ராத்திரி அடித்த அடியில்... முதுகெல்லாம் பிசைகிற வலி. சுற்றையாய்ப் பற்றி இழுத்த இழுப்பில், கூந்தல் கலைந்து அலங்கோலமாய்...

ரோமக்கால் பூராவும் இன்னும் வலிக்கிறது.

உப்புக் கல்லுக்குப் பெறாத காரியம். அதனால் வந்த சத்தம், சூடேறி, சண்டையாகி... அடிதடியில் முடிந்தது.

காட்டு வேலை முடிந்து வீடு வந்து சேர சுப்புத்தாய்க்கு நேரமாகி விட்டது. உஸ்ஸென்று ஓய்ந்து உட்காரப் பொழுதில்லை. உடம்பெல்லாம் குத்திக் குடைகிற உளைச்சல். 'உட்கார்' என்று கெஞ்சுகிற முதுகுத்தண்டு.

ஊஹூம், பொழுதில்லை.

'அவக், தொவக்'கென்று பெட்டியை எடுத்துக் கொண்டு தெருவில் பாய்ந்தாள். கடை கண்ணிக்குப் போய், சரக்கு வாங்கிக்கொண்டு வந்து அவசரமாய் அடுப்பை மூட்டினாள்.

ஈர விறகு. வீடு முழுக்கப் புகை மண்டலம். கண்ணெல்லாம் எரிகிறது. விடாமல் இவளும் மல்லுக்கட்டி, அடுப்பு வேலை செய்து கொண்டிருந்தாள்.

திடுமென்று மனசுக்குள் ஒரு உதைப்பு. 'அடக் கொடுமையே! பால் வாங்காம இருந்துட்டேனே... அயத்துப் போச்சே'

பரபரப்பானாள். சூறாவளியாய்ப் பறந்தாள். இவள் ஓடிப் போய் நிற்பதற்குள் எல்லாம் முடிந்து விட்டது. கணக்கு முடித்து, பால் கேனை லாரியில் ஏற்றி விட்டார்கள்.

என்ன செய்ய?

பொழுது அடைகிற நேரம். வறண்ட வெயில். நிலையில்லாமல் சுழன்று சுழன்று வீசுகிற கீழ்க்காற்று.

வேலை முடிந்த கையோடு குளித்து விட்டு, ஈர வேட்டியும் வயிற்றுப் பசியுமாய் வந்து சேர்ந்தான், சரவணன் அவசரமாய்த் துணிமணியை மாற்றினான். கைப் பனியனைப் போட்டுக் கொண்டான். ஈரம் உலர்ந்த தலையில் எண்ணெய் வைத்துக் கொண்டே... பசியின் தொல்லை பொறுக்காமல் கேட்டான்.

"சுப்பு..."

"ம்?"

"காப்பியிருக்கா?"

"இருக்கு. கடுங்காப்பிதான்."

"ஏன்? பால் வாங்கலியா?"

"இல்லே."

"இல்லேன்னா...?"

"வாங்கப் போறதுக்குள்ளே... முடிச்சிட்டாக"

தோலை எரிக்கும் கோடை வெயிலில் உழைத்த அலுப்பு. வயிற்றுக்குள் பிடுங்குகிற பசி. உடம்பின் அயர்ச்சி. எல்லாம் அவனுள் கைகோத்துக் கொண்டன.

இந்தச் சின்ன ஏமாற்றத்தைக் கூட சகித்துக்கொள்ள முடியவில்லை. கோபத்தில் அவளை வெறித்தான்.

புகை மூட்டத்திற்குள் அவள், மங்கலாய்த் தெரிகிற முகத்தில் பொடிப் பொடியாய் வியர்வைத் துளிகள். குற்ற உணர்வின் உறுத்தலில்லாமல், விட்டேற்றியாக அவள் சொன்ன பதில். பொறுப்பற்ற அலட்சியம்.

இவனுள் ஏதோ ஒரு பிசாசு. உசுப்பி விடப்பட்ட பிசாசு.

இறுகிப் போன குரலில் கேட்டான்.

''நேரத்தோட பால் வாங்காம, என்ன செஞ்சுக்கிட்டிருந்தே?''

''ம்ம்'' என்று கோபமாய் அவள் உறுமினாள். அவனது கேள்வியே அர்த்தமற்றது என்கிற காட்டமான கண்டனம். எகத்தாளமாய்ச் சொன்னாள்.

''நீங்க கட்டிப் போட்டிருந்த ஊஞ்சல்லே ஆடிக்கிட்டிருந்தேன்...

அந்தப் பதிலும்... அது வந்த தொனியும்...

அவன் செருப்படியாய் உணர்ந்தான். ஆத்திரத்தில் நெற்றி நரம்பு விண்ணென்றது. நாசி காந்தலோடு விடைத்தது. மட்டியைக் கடித்துக்கொண்டு அடிக்கப் பாய்ந்தவன், அவள் பார்வையைப்பார்த்தான். திகைத்துத் தேங்கினான்.

அவளது நிலைத்த பார்வை, பயமில்லாமல். இமை தட்டாத நேர்ப் பார்வை. 'என் மேல் என்ன தப்பு?' என்று தைர்யமாய்க் கேட்கிற துணிச்சலான பார்வை.

அவனுள் குழப்பம். பாய்ச்சலை நிறுத்தினான். ஓங்கிய வலது காலை கோபத்தில் தரையில் சத்தமாய் வைத்தான். எரிச்சலான பார்வையிலேயே அவளைப் பஸ்பமாக்கினான்.

''ச்சேய்! மனுசப் பய இருப்பானா, இந்த வீட்லே?'' குமைந்த உணர்ச்சிகள் கோபத்தில் வெடிக்க... விருட்டென்று வெளியேறி விட்டான்.

இருவர் மனத்திலும் வெவ்வேறு விதமான ரணம். கொதிப்பு. புண்படுத்தப்பட்ட சீற்றம். குமைச்சல்.

அதுதான், ராத்திரியில் விகார வடிவமெடுத்து, வார்த்தைகள் சத்தமாகி... சண்டையும் அடிதடியுமாய் முடிந்தது.

பட்ட அடியில் அவள் உடம்பெல்லாம் புண்ணாகிப் போயிற்று.

காட்டிலும் உயிரை வற்றடித்து விட்டு, வீட்டிலும் வந்து அடுப்படிப் புகையில் அல்லாடிச் சீரழிகிற கொடுமைக்கு...கிரீடம் சூட்ட வேண்டாம். இரக்கமும் காட்ட வேண்டாம். பொம்பளைக்கு விதிச்ச விதி. அனுபவிச்சிட்டுப் போறோம்... எதுக்குக் கோபமும் சாபமுமாய்ச் சீறணும்? ஆம்பளைன்னா... அடிக்கிறதா? உதைக்கிறதா? முடியைப் பிடிச்சு இழுத்து நாசக்காடு பண்றதா?

இதுவும் ஒரு மனுச செம்மமா? இதுவோட கூடி மாரடிக்கிறதும் ஒரு வாழ்க்கையா? த்தூ!

இந்தத் துப்புக்கெட்ட மனுசனோட இனி ஒரு நிமிஷமாச்சும் வாழலாமா? மானமுள்ள மனுசி இருந்து வாழ்வாளா?

அடப்பாவி! என்னையா அடிக்குறே? யார்னு நெனைச்சே, என்ன? நாதியத்தவள்னு நெனைச்சிட்டியா? பார்... விடிஞ்சவுடனே போறேன். ஊர்லே என்னைத் தலையிலே வச்சுக் கொண்டாட, அம்மா அய்யா இருக்காக...

அய்யா என்னை ஒரு பூப்போல வளர்த்தாரே. ஒரு நாளாச்சும் கைநீட்டி அடிச்சிருப்பாரா, என்னை? கடிஞ்சி ஒரு வார்த்தையாச்சும் பேசியிருப்பாரா? சுப்புத்தாய்னு பேர் சொல்லிக் கூட கூப்புட மாட்டாரே, அய்யா.

'அம்மா கண்ணு'ம்பார். 'செல்லம்'ம்பார். மறு பேச்சு கிடையாது. அப்பேர்ப்பட்ட பாசமுள்ள அய்யா வயித்துலே பொறந்த சாதிமான் கன்று, நான். என்னையா அடிக்கிறே? இரு இரு... நா போறேன். பத்து நாளுக்காச்சும் ஒன்னைக் காயப் போட்டு எடுத்தாத் தான்... ஒனக்கு என்னோட அருமை தெரியும்.

இன்னும் சரியாக விடியவில்லை. ஆனால் இருட்டு உடைந்து விட்டது. திண்ணையில் படுத்துக் கிடக்கிற சரவணனுக்குத் தெரியாமல் கிளம்பிவிட்டாள், சுப்புத் தாய். கையில் ஒன்றும் எடுத்துக் கொள்ளவில்லை.

இங்கிருந்து ஒன்றரை மைல். மெட்டல் ரோடு. நடந்து போனால்... தார் ரோடு. பஸ் வரும். டவுன் பஸ்ஸில் ஏறி உட்கார்ந்தால், ரெண்டு ரூபாய் முப்பது பைசா டிக்கெட்.

இறங்கினால்... கரிசல் காட்டுக்குள் ஒற்றையடிப் பாதை ரெண்டு மைல். அரை மணி நேரமாகும்.

ஒன்பது மணிக்குள் சொந்த வீட்டில் போய் விழுந்து விடலாம். அம்மா மடியில் முகம் புதைக்கலாம். அன்பில் பதைக்கிற அம்மா, தலையைப் பாசத்துடன் வருடுவாள். தேம்பித் தேம்பி அழலாம். மனசுக்குள் கட்டையாய்க் கிடந்து அழுத்தும் கசப்பையெல்லாம் கொட்டியழலாம். ஆறுதலில் மனசு லேசாகும்.

அய்யாவுக்கு இவள் என்றால், உயிர். மூன்று பிள்ளைகளில் கடைக்குட்டி. இவள் பிறந்த பிறகுதான், புஞ்சை நன்றாக விளைந்ததாம்! கிணற்றில் கரண்ட் மோட்டார் போட முடிந்ததாம்! பிரிந்து கிடந்த கூரை வீட்டை இடித்து விட்டு ஓட்டு வீடாக ஆக்க முடிந்ததாம்!

சஞ்சலப்பட்ட சம்சாரி வீட்டில் குட்டி வசந்தமாய் இவள்.

''ஏங்கண்ணு, தங்கமான புள்ளை. அவள் கால்பட்ட இடமெல்லாம் பொன் விளையும்'' என்பார் அய்யா. அதில் அவருக்கொரு பெருமிதம். பூரிப்பு.

அம்மா அதற்கும் மேல். இவளுக்குப் பிறகு வேறு பிள்ளை இல்லை. அம்மாவின் மனசில் ஊறிய பாச மெல்லாம் சுப்புத்தாயின் மேல்.

இந்த உப்புக் கல் பெறாத மனுசர், இந்தப் பாடு படுத்துகிறார். இதை நினைக்க நினைக்க மனசு கிடந்து வேகிறது.

மெட்டல் ரோட்டில் நடந்து கொண்டிருந்தாள். கீழ் வானம் சிவந்து கிடந்தது. இரவெல்லாம் அழுது கன்றிப் போன இவள் கண்களைப் போல.

பங்குனி மாதக் காலைப் பொழுது. வறண்ட கூந்தல், லேசான வெக்கை கலந்த கதகதப்பு.

...போன வருஷம் ஒரு தடவை.

இப்படித்தான் கோபித்துக் கொண்டு வந்து சேர்ந் தாள், சுப்புத்தாய். பதறிப் பதைத்துப் போனாள், அம்மா.

''என்ன ஏது'' என்று துடித்துப் போய் விசாரித்தாள். அவள் தேகமெல்லாம் நடுங்கியது. இவள் நடந்ததை யெல்லாம் சொல்லியழுதாள்.

அம்மா கொதித்துப் போனாள். மருமகனாய் வந்து வாய்த்த குரங்குப் பயலை ஒரு பாட்டம் வைது தீர்த்தாள். 'குலை கொதிக்குதே' என்று வாய்க்கும் கைக்கும் புலம்பி னாள்.

''பூப்போல எம்புள்ளே. இதையும் கை நீட்டியடிக்க ஒரு ஆம்பளைக்கு மனசு வருமா? அவனுக்கு எம்புட்டு

ராங்கி இருக்கணும்? வரட்டும், பேசிக்கிடுதேன்'' என்று வன்மம் கூறினாள்.

அய்யாவும் மகளிடம் விசாரித்தார். கேட்க அவர் முகம் இறுகியது. கண்கள் இடுங்கின. பல்லைக் கடிப்பது தாடையின் புடைப்பில் தெரிந்தது. தாளாத கோபத்தில் அடி உதட்டை அழுந்தக் கடித்தார்.

கடைசியாக—

''சரி இருக்கட்டும், நீ கவலைப்படாதே. அய்யா இருக்கேன். நீ ராசாத்தி கணக்கா இங்கே இரு. ஒன்னைக் கூப்புடுறதுக்கு எப்படியும் வருவான்லே? அப்ப பேசிக்கிடு தேன்.''

சுப்புத்தாய்க்குள் ஓர் ஆறுதல். ஒரு பலம். அய்யா அம்மா இருக்கிறார்கள். கதகதப்பான பாதுகாப்பாக—கவசமாக—ஒரு கௌரவமாக...

அவளுக்குள் ஒரு பூரிப்பு. பெருமிதம். புது மனுசியாகி விட்டாள். கல்யாணத்திற்கு முந்தியிருந்த மாதிரி சொந்த வீட்டில் சுதந்திரமாய்... சிட்டுக் குருவியாய்...

நாலாவது நாள். சரவணன் வந்து பயத்தோடும் வெட்கத்தோடும் நின்றான். பூனைபோல பம்மிப் போயிருந்தான்.

அய்யா சாமி வந்தவரைப் போல ஆடினார். 'தங்கு, புங்கு' என்று குதித்தார். 'தாட்டு, பூட்'டென்று கத்தினார். ஊரைக் கூட்டினார்.

அம்மாதான் குறுக்கே விழுந்து, அய்யாவைச் சமாதானப்படுத்தினாள். ''வீடு தேடி வந்த மருமவனை ரொம்பக் கேவலமாப் பேசக்கூடாது. நம்ம பல்லைக் குத்தி நாம மோந்து பாக்கவா? நமக்குத்தான் அது கௌரவக் கொறவு'' என்று அய்யாவைச் சாந்தப்படுத்தினாள்.

மறுநாள்—

உளுந்து, பாசிப் பயறு, ஒட்டுக் கம்பு, ரெண்டு கோழி யோடு—எல்லாம் அம்மா தந்த சீதனம்தான்—ராசாத்தி மாதிரி இவள்முன் நடக்க, ஆட்டுக் குட்டியாய்ப் பின்னால் வந்தான், ஒற்றையடிப் பாதையில்.

...இந்த மாதிரி ரெண்டு மூணு தடவை நடந்து விட்டது...

மெட்டல் ரோடு கிடங்கும் மேடுமாய்க் குதறிக் கிடந்தது, நாய் கிழித்து விளையாடிய பழைய சாக்குத் துணி போல. பெரிய பெரிய கருங்கல் சல்லி பெயர்ந்து கிடந்தது.

ஒரு கல், இவள் காலைப் பதம் பார்த்துவிட்டது ஊசியைச் சொருகின மாதிரி... உயிர் போகிற வலி.

வந்து தார் ரோட்டில் நின்றாள். பத்து நிமிஷம் ஆகி யிருக்கும். மேற்கிலிருந்து வருகிற வெள்ளைப் பஸ். அதன் முகப்புக் கண்ணாடியில், காலைச் சூரியனின் சந்தன ஒளிபட்டு எதிரொளிக்கிறது.

கையைக் காட்டி, ஏறிக் கொண்டாள். காற்றாடிப் போய் வந்த பஸ்ஸுக்குள் நாலைந்து பேர்தான். இவளும் ஒரு சீட்டில் உட்கார்ந்தாள். வெறும் பஸ்—குறைகுட மாய்க் கூத்தாடியது. டக்கர் மாதிரி கர்ணகடூரமாய் தட தடத்தது. ஒற்றைப் பெண்ணாய், இவள் மட்டும்.

டிக்கெட் தர சாவகாசமாய் வந்த கண்டக்டர் முகத்தில் ஒரு தொனி. பார்வையில் ஒரு சந்தேகம். 'நீ ஒரு குடும்பப் பெண்ணா, ஊர் மேய்கிறவளா?"

இவளுக்குள் பூரான் ஊர்கிற மாதிரி ஒரு கூச்ச உணர்வு. யாரோ மூஞ்சியில் காறித் துப்பின மாதிரி ஒரு உள் வதைப்பு. ரண அவஸ்தை.

முந்தியில் முடிந்து வைத்திருந்த சில்லறையை அவிழ்த் தாள் அவிழ்க்க முடியாமல் விரலில் ஒரு நடுக்கம். கண்டக் டரின் முகத்தைப் பார்க்க ஒரு பயம்.

அரைப் பார்வையில் மனத்தத்தளிப்போடு டிக்கெட் வாங்கிக் கொண்டாள்.

தலைநிமிராமல் ஜன்னல் வழியே வெளியே வெறித்தாள். விருட் விருட்டென்று சுழன்றோடுகிற மரங்கள். வட்டமடித்து ஓடுகின்ற புஞ்சைகள். புஞ்சைகளில் ஒரு வெறுமை. பச்சை எதுவுமில்லாத அமங்கலம். தீப்பிடித்த காடாய் உயிரற்றுக் கிடக்கும் கரிசல் கடல்.

இறங்கினாள். இவள் தரையில் கால் வைத்தவுடன் நகர்கிற டஸ். சளுக்சென்று சிரிக்கிற ஒரு பயணி. கூசாமல் இவளை ஜாடை காட்டி, சத்தம் போட்டுச் சிரிக்கிற சிரிப்பாணிச் சத்தம்.

இவளுக்குள் என்னவோ போலிருந்தது. அவளே, அவளுக்கொரு அசிங்கமாய்-அருவருப்பான பொருளாய்... கரிசல் காட்டை வகிர்ந்து கொண்டு செல்லும் ஒற்றையடிப் பாதையில் நடந்தாள். அத்துவானக்காடு. ஒரு சுடு குஞ்சு கூட கிடையாது. வந்து மோதுகிற தனிமை உணர்ச்சி...

மானாவாரிக் கரிசல் பின்வாங்கிக் கொள்ள, கிணற்றி றவைப் பாசன நிலங்கள் வந்தன. ஒவ்வொரு தோட்டத்தின் மையத்திலும் கிணறு. பூமியின் புடைப்பாக ஒரு டம்ப்ஷெட் ரூம். கிணற்றின் பக்கத்தில் குன்றாகச் சரளைக் குவியல்.

எங்கு பார்த்தாலும் வறட்சியின் குரூரம். மிளகாய்ச் செடிகள் இயல்பற்றுக் கிடந்தன. அடுக்கு இலை நோயும், இலைச் சுருட்டை நோயுமாய், என்றோ செத்த சவமாய் நின்றன. ஒரு பூவோ பிஞ்சோ கண்ணில் படவில்லை.

கோடை மழை ஒரு சொட்டு கூட விழவில்லை. வஞ்சகம் டண்ணின வானத்தின் தீச்கூத்து.

பருத்திச் செடிகளும் இலை கருகிப்போய், தேன் நோயில் நிறம் மாறிக் கிடந்தன. கற்றாழை கூட காய்ந்து ஒடிந்து தொங்கியது. சீமைக் கருவேல் மரங்களும் நீர்ப் பசையற்று, சாம்பல் பூத்துக் கிடந்தன.

போகிற வழியில்தான் இவளது புஞ்சையும். பூவரச மரத்துப் புஞ்சை. கிணற்றில் சும்மாவே தட்டுப்பாடு. கோடை மழையற்றுப் போச்சா? சுத்தமாய்க் காய்ந்து கிடக்கும்.

இவளுக்குள் என்னவோ போலிருந்தது. தான் உருண்டு புரண்ட புஞ்சை. வேலை பார்த்து விளையாடிய புஞ்சை. இன்றைக்கு...? அவளுக்குக் கண்ணீர் முட்டிக் கொண்டு வந்தது.

நடந்து நடந்து காலெல்லாம் வலித்தது. நா வறட்சி வேறு. பச்சைத் தண்ணீர் பல்லில் ஊற்றவில்லை.

வீடு போய்ச் சேர்ந்தாள். முற்றத்தில் அம்மா. எங்கோ கிளம்பிக் கொண்டிருந்தாள். முகம் மாறுகிற அம்மா. அவள் முகத்தில் ஒரு கிலி. கிலிக்குள் புதைந்து கிடந்த ஒரு வெறுப்பு.

சுப்புத்தாயுக்குள் நறுக்கென்றது.

நெருங்கி வந்த சுப்புத்தாயை வாவென்று வரவேற்க வில்லை. எப்ப வந்தே என்று கேட்கவில்லை. என்னாச்சு என்று பதைக்கவில்லை. வெறுமையாய் அம்மா. வெறிக்கிற அவள் கண்கள்.

அம்மா ரொம்பக் கிழவியாகியிருந்தாள். பஞ்சத்தில் அடிபட்டுப் போய் முகத்தில் நிறைய சுருக்கங்கள். குழிக்குள் ஜீவனாய் ஒடுங்கிப் போயிருந்தாள்.

"என்னம்மா?" சுப்புத்தாய்தான் கிட்டத்தில் வந்து வலியக் கேட்டாள்.

''ம்... நீயும் வந்துட்டீயா?'' என்கிற அம்மா. ''நீயும் கோவிச்சுக்கிட்டுத்தான் வந்துருக்கியா?''

''ம்...''

''சண்டையா?''

''ம்...''

''மூத்தவ வந்து பத்து நா இருந்துட்டு நேத்துத்தான் போயிருக்கா இன்னைக்கு...''

''நா வந்துட்டனா?''

''சரி சரி... வீட்லே இரு. நா வேலைக்குப் போறேன்.''

''அய்யா?''

''கூலி வேலைக்குப் போயிருக்காரு. பாவம், வயசான. காலத்துலே. கெணறு வெட்ட...''

''நம்ம அய்யாவா?''

''பெரிய பெரிய சம்சாரியெல்லாம் வேர் அத்துப் போய்க் கிடக்கான். லேசுப்பட்ட வறட்சின்னு பாத்தியா?''

''கூலி வேலைக்கு நம்ம அய்யாவுமா?''

''சரி சரி... ரொம்பப் பொளக்காதே. எனக்குப் பொழுதாகுது. நீ வீட்லே இரு.''

அம்மா போய் விட்டாள். அவள் முதுகையே வெறித்தாள், சுப்புத்தாய். அம்மா தூரம் தூரமாய் போய்க் கொண்டிருந்தாள், அந்நியமாகி...

சுப்புத்தாயை ஒரு சூன்யம் வந்து அப்பிக்கொண்டது. அவளுக்குள்ளிருந்து வந்த கசப்பு, மனமெல்லாம் கிடந்து கசந்து அழறியது.

வீட்டுக்குள் நுழைந்தாள். ஜெயில் மாதிரி தோன்றியது அவளுக்கு என்னவோ போலிருந்தது.

அவளே அவளுக்கொரு சுமையாய் அசிங்கமான பிறவியாய்...

அம்மாதான் இப்படி. அய்யா இப்படியல்ல. அவர் தங்கம். மகள் மேல் உயிராய்க் கிடப்பவர். பேர் கூட உச்சரிக்காதவர். 'செல்லம்', 'கண்ணு' என்று பாசமாய்க் குழைகிற அய்யா. கடைக் குட்டியை-ராசியான மகளை கண்ணுக்குள் உயிராய் வைத்துப் போற்றுகிற அய்யா.

மெல்லிய நம்பிக்கை. அந்த நம்பிக்கையின் பலத்தில் கஞ்சியை ஊற்றினாள். முதல் மடக்கு உள்ளே போகிற போது, நெஞ்சுக்குள் சரவணன் வந்தான்.

இந் நேரம் அவர் என்ன செய்வார்! இவளைக் காணாமல் தேடியிருப்பானா! சாப்பிட்டிருப்பானா? மனைவியை இழந்த வேதனையில் குன்றிப் போயிருப் பானா? வாடியிருப்பானா...

அடுத்த மடக்கைக் குடிக்க முடியவில்லை. மனசு வர வில்லை. தொண்டைக்குள் வந்து நின்று கொண்டான்.

கல்யாணம் முடிந்து நாலு வருஷத்திற்கும் மேலாகி விட்டது இந்த வைகாசி வந்தால், நாலு முடிந்து, அஞ்சா வது வருஷம் ஆரம்பம். இன்னும் ஒரு பிள்ளைகூட பிறக்க வில்லை. அறுபது நாள், எழுபது நாள் என்று இருந்து கழிந்தது என்று கூட கிடையாது.

அதைப் பற்றி ஒரு வார்த்தைக்கூட கிளறவே மாட் டான். இலை மறைகாய் மறையாகக்கூட அதைப் பற்றி உச்சரிக்க மாட்டான், இவள் மனசு புண்பட்டு விடுமே என்று பதறுவான்.

அவளுக்கு மதியமும் சாப்பிடத் தோன்றவில்லை. வாய், மனசெல்லாம் கசந்தது. அய்யா... அய்யா... அய்யா...

பொழுதடைந்து இருட்டிய பிறகுதான் அய்யா வந்து சேர்ந்தார். ஆவலோடு வெளியே ஓடி வந்தாள்.

அய்யாவைப் பார்க்கணும். அய்யாவாவது அய்யாவாக இருக்கிறாரா?

அய்யா கண்ணிலும் ஒரு பயம். ஒரு இறுக்கம். பதைப்போ துடிப்போ தெரியவில்லை. உதட்டைப் பிதுக்கினார். அதில் ஒரு அயர்ச்சி. சலிப்பு.

''எப்ப வந்தே?'' உயிர் ஒட்டாத உச்சரிப்பு.

இவளுக்குள்ளும் ஏதோ சிதைவுகள். சவமாய்ச் சொன்னாள்.

''விடியக் காலம் வந்தேன்.''

''என்ன... கோவமா?''

''ம்...''

''மழையுமில்லே தண்ணியுமில்லே. வெள்ளாமை வெளைச்சலுமில்லே. பொழுதை ஓட்டுறதே பெரும்பாடா யிருக்கு. நாங்க கோவிச்சுக்கிட்டு எங்க போறது? யாரு சோறு போடுவாக?''

கசந்த சிரிப்போடு அய்யா தலைத் துண்டை அவிழ்த்து உதறிவிட்டு வீட்டுக்குள் நுழைகிறார்.

அய்யாவுமா... இப்படி? பாசமும் அன்புமாய்க் குழைகிற அய்யாவுமா? வறட்சியும் பஞ்சமும் வந்து காடுகளை மட்டுமா காயவைக்கிறது? ரத்த பந்தத்தையும்தான். ஆதிக்கும் ஆதியான தாய்மை உறவையும்தான்.

வெலவெலத்துப்போன சுப்புத்தாய்க்கு அந்த அதிர்ச்சியிலிருந்து மீளவே முடியவில்லை. விட்ட அந்நியப்பட்ட மாதிரியோர் உணர்வு. முள் மேல் கிடக்கிற காயம் பட்ட குருவியாய்த் தவித்தாள்.

எப்போது விடியும் என்று கொட்டக் கொட்ட விழித்திருந்தாள், மான மரியாதையோடு சொந்த வீடு போய்ச் சேர வேண்டுமென்று.

# 4. காட்டு ருசி

அன்றைக்குக் கடைசி ஆடி. ஊர் முழுக்க தோசை வாசனை கம்மென்று முறுகல் மணம். ஆட்டுரல்களில் சட்னி ஆட்டுகிற கட கடா சப்தம்.

வழக்கத்துக்கு மாறாக... காலில் சக்கரம் கட்டிக் கொண்டு பறக்கிறான், சீனிவாசன். ஒரே பரபரப்பு, அங்கேயும் இங்கேயுமாய்ப் பாய்கிறான். ஆளைக் கையில் பிடிக்க முடியவில்லை. மூக்கின் மேல் நின்ற கோபம், நாலா பக்கமும் சிதறித் தெறிக்கிறது. இன்னார் மீது என்று கணக்கில்லை. சகட்டு மேனிக்கு 'சள்-சள்' ளென்று சீறுகிறான்.

மண்ணடிக்க டக்கர் போயிருக்கிறது. வேலை செய்யாமல் கூலியாட்கள் ஏய்த்து விடுவார்களே என்கிற பதற்றம், அவனுக்குள். சம்பளம் வாங்கத் தீயாய் வருகிற ஆட்கள். பாடுபடாமல், தேங்கின தண்ணீராகத் தேய்ந்து போகிற வஞ்சகம். ச்சே! நினைத்தாலே மனசு கிடந்து கொதிக்கிறது.

என்றைக்குமில்லாத அதிசயமாக விடிவதற்கு முன்பே விழித்து விட்டான், சீனிவாசன். டீக்கடை போய், ஓடைக்குப் போய், பல்லையும் தேய்த்து விட்டு—

''என்ன ரெடியா?'' என்று காலில் கொதி நீரை ஊற்றிக் கொண்டு நிற்கிறான்.

வேணித்தாய்க்கு எரிச்சலாக இருக்கிறது.

...வழக்கம் இப்படியல்ல. இந்நேரம் படுத்துக் கிடப்பார். நீட்டி நிமிர்ந்து எழுந்து டீக்கடைக்குப் போனால், ரெண்டு டீக்கடைகளிலும் டீ குடித்து, பேப்பர் பார்த்து, ஊர்க்கதைகள் பேசி...

ஆள் தட்டுப்படவே மாட்டார், ஒன்பது மணி வரைக்கும்.

இன்றைக்கு என்ன அதிசயமோ...சரியாய் விடிவதற்குள் 'ரெடியா' என்கிறான். என்ன கூத்தோ...? கேட்க முடியாது. கேட்டால்... வள்ளென்று விழுவான்.

இப்போதுதான் முற்றம் தெளித்திருக்கிறாள். வெல்லம், தேயிலை போட்டு, 'காப்பி' போட்டுவிட்டு... அடுப்பில் இட்லிச் சட்டியை தூக்கி வைத்திருக்கிறாள்.

வழக்கம் போல... சோறு என்றாலாவது, சட்டு புட்டென்று வேலை முடியும். கடைசி ஆடி. ஊரெல்லாம் தோசை விசேஷம்.

தோசை என்றாலாவது...சட்டி காய்ந்தவுடன் மாவை சர்ர் சர்ரென்று ஊற்றிப் புரட்டி எடுத்து விடலாம்.

இந்த ராசாவுக்குத் தோசை என்றால் தொண்டையில் இறங்காது. ஆவியே ஆகாது என்பார். தோசையில் எண்ணெய் வாடை வருமாம். சாப்பிட்டால்...நாவறட்சி எடுக்குமாம். நெஞ்சுக் கரிப்பு ஆளைக் கொல்லும் என்று பயப்படுவார். தோசை என்றால், மூஞ்சி முந்நூறு கோணலாகும்.

இட்லிக்கு மாவை ஊற்றி வைத்தால்...வெந்து முடிய ரொம்ப நேரமாகும். சொய்ங்யென்று விசிலடிக்கிற புகைச் சீறல், வேணித்தாய்க்கு எரிச்சல் எரிச்சலாய் வரும்.

அவசர அவசரமாய் அம்மியில் சட்னிக்கு அரைத்தாள்.

சீனிவாசன் பறந்து கொண்டு வருகிறான்.

''சாப்புடலாமா?''

''சித்தெ பொறுங்க.''

''டக்கர் போயிருச்சு, மண்ணடிக்க...''

''ஆளுக போய்ட்டாகளா?''

''ம்.''

''மண்ணை புஞ்சைக்குள்ளே தட்டவா, வெளியே தட்டவா?''

''புஞ்சைக்குள்ளே தான்.''

''சக்கரை தேயிலை வாங்கிக் குடுத்தனுப்பிச் சிட்டீகளா?''

''ம். தண்ணிக்கொடம், காப்பிச்சட்டி, கிளாஸ் எல்லாம் குடுத்தனுப்பியாச்சு.''

''கலிங்கப்பட்டி கம்மாயிலே தண்ணியில்லியா?''

''ம்.''

''பாதை நல்லாயிருக்கா?''

''என்ன... தொணதொணன்னு பேசியே உயிரை வாங்குறே?''

சிரித்தாள் வேணி. காத்திருத்தலைக் தோன்றவிடாமல் மறக்கடிக்கத்தான் பேச்சை ரப்பராய் இழுத்தாள்.

''என்ன சிரிப்பாணி?''

''கேக்குறதுமா குத்தம்?''

''அப்படியில்லே. டக்கருக்கு நானூத்தைம்பது ரூவா வாடகை. கூலியாளுகளுக்கு எற நூத்தம்பது. இம்புட்டு செலவழிச்சு மண்ணடிக்கிறப்ப, நா போய் நிக்க வேண்டாமா? ரெண்டு நடை மண்ணு கொறைஞ்சிட்டாக்கூட... நூத்திநாப்பது நட்டம் வரும்.''

''இப்ப யாரு...உங்களைப் போகவேண்டாம்னது?''

''சாப்புடாம எப்படிப் போக?''

''உக்காருங்க. இதோ—சட்னியைத் தாளிச்சிடுறேன்.''

'அந்தா, இந்தா' வென்று கால்மணி நேரம் ஆகிவிட்டது.

முள்ளின்மேல் நிற்பவனைப்போல பொறுமையற்று நெளிந்துகொண்டு உட்கார்ந்திருக்கிற சீனிவாசன் முன்னால்... வட்டில். ஆவிபறக்க இட்லிகள். கருகிப்போன கடுகும், கருவேப்பிலையும் சட்னிக்கு ஒரு லட்சணத்தையும் வாசத்தையும் தந்தது.

பறக்கப் பறக்க சாப்பிடுகிறான்.

''சட்னி இன்னைக்கு அம்சமா அமைஞ்சிருக்கு. தாளிச்ச வாசம் ஆளைத் தூக்குது.''

நிலாக் குளிர்ச்சியான அந்தப் பனிப் பூ வார்த்தையில் வேணியின் எரிச்சல், கோபம் எல்லாம் மாயமாகி மறைகிறது. வியர்வைக்குரிய கிரீடம் கிட்டிவிட்ட மனத்தும்பல், அவளுக்கு. அவள் குரலில் ஒரு மென்மையும் குழைவும்...

''நல்லாவாயிருக்கு? அவசர அவசரமா அரைச்சேன்... உப்புக் கூடப் பாக்கலே.''

''கச்சிதமாயிருக்கு வேணி. நெசந்தா.''

''இன்னும் ரெண்டு இட்லி போட்டுக்கங்க.''

அந்தக்கணத்தில்—

அவள் அவளாகியிருக்கிறாள். உள்ளும் புறமும் மிருதுவாகி, அன்பால் நெஞ்சு ததும்ப...புருஷனை புதிய வாஞ்சையோடு பார்க்கிறாள். உள்ளுக்குள் உவகைப் பெருக்கு. பீறிடுகிற பரிவுணர்ச்சி. கண்ணோரங்களில் நீர்த்துளிகளாய் மனப்பரவசம்.

காய்ந்து கனல் பறக்கிற லௌகீக வாழ்வை ஜீவிதப் படுத்துகிற மனச்சங்கமம். மானுட ஈரத்தில் வேர்விட்டு உயிர் வளர்க்கிற-முகம் கழுவிக் கொள்கிற-புது வாழ்க்கையின் கணங்கள்.

கையைக் கழுவினான். சட்டையை மாட்டிக் கொண்டான். சிகரெட். தீப்பெட்டி, செருப்பு, பரபரப்பு.

''வேணி, நீ புஞ்சைக்குப் போவணுமா?''

''மேலப் புஞ்சையிலே பருத்தி வெடிச்சு பூத்துக் கெடக்கு.''

''போ. சரி...மதியத்துக்கு?''

''கம்மாயிலேதானே இருப்பீக?''

''ம். சின்னவன் கிட்டே குடுத்து, தெக்குப் புஞ்சைக்கு அனுப்பிவை. மண்ணைத் தட்ட வர்ற டக்கர்லே கம்மாய்க்கு வந்துருவான்.''

''ஆட்டும்...''

''என்ன குடுத்துவிடப் போறே? மதியம் தோசை தானே சுடுவே?''

''உங்களுக்குத்தான் தோசை ஒவ்வாதுல்லே? அவிக்கிற இட்லியிலே மிச்சம் வச்சிருந்து... புதுச்சட்னியோட குடுத்துவுடட்டா?''

''ம்.''

''ஆறின இட்லின்னு கோவிக்கக் கூடாது?''

''ம்.''

அவன் முகத்தில் மெல்லிய பூஞ் சிரிப்பு. உள்ளுக்குள் பௌர்ணமி வெளிச்ச மகிழ்ச்சி. இங்கிதம் அறிந்து பேசுகிற வேணியின் மன அண்மையில் விளைந்த தண்மை.

தெருவில் இறங்கினான்.

சீனிவாசன் ஓடியாடிப் பாடுபடுகிறவனில்லை. ப்ளஸ் டூ முடித்து, கல்லூரியிலும் ரெண்டு வருஷம் குப்பை கொட்டினான். பாதியில் படிப்பை நிறுத்திவிட்டு, விவசாயத்தைக் கவனிக்க வேண்டிய நிர்ப்பந்தம்.

நாலா பக்கமும் காடுகரைகள். இறவைத் தோட்டங்கள், மானாவாரிக் கரிசல்காடு, கண்மாய்ப் பாசனத்தில் கொஞ்சம் வயல்காடு. பெரிய பண்ணைப் பிரபு இடையாது. மத்திய தர விவசாயி.

வரவு செலவு வருஷா வருஷம் இழுபறிதான். விளைச்சல் சரியாக இருக்காது. விளைந்த வருஷத்தில் விலை கிடைக்காது. ரெண்டும் கைகூடி வருகிற மாதிரியிருந்தால்... கல் மழை மாதிரி இயற்கை உற்பாதம் வந்து நாசக்காடு பண்ணிவிடும்.

விரல் நகத்தில் அழுக்குப் படாமல் மேற்பார்வை பார்ப்பான். உடலுழைப்புக்கு இயலாது, சில்லான் மாதிரி ஒல்லியான உடம்பு. மம்பட்டி பிடித்து ஒரு வாய்க்கால் வரப்பைக்கூட செதுக்க முடியாது.

எல்லாவற்றுக்கும் சம்பள ஆள்தான். தண்ணீர் பாய்ச்ச, பாத்திகட்ட, மூலை முக்கு கொத்த... எல்லாமே கூலியாட்கள்தான்.

வேணித்தாய் ஓயாமல் பொருமுவாள்.

"வெளையுற வெள்ளாமை சம்பளம் குடுத்தே சாம்பலாயிரும்."

"அதுக்கு என்ன செய்யச் சொல்றே?"

"உங்களாலே தண்ணி பாய்ச்சவுமா முடியாது? பொம்பளகூட பாய்ச்சுதாளே?"

"நமக்கு அதெல்லாம் சரிப்பட்டு வராது."

"படிப்பு படிச்சவுகளாம்! படிச்சிருந்தா... மம்பட்டியை தொடக் கூடாதுன்னு சட்டமா? கிரீடம் எறங்கிருமாக்கும்?"

"நொய் நொய்ன்னு நச்சரியாதே..."

"வேர்வை சிந்தப் பாடுபட்டாத்தான்... அதோட அருமையும் அழகும் தெரியும்."

"ஒழைக்கிறதுலே என்ன அழகு இருக்கு?"

"ஒழைச்சுப் பாத்தாத் தெரியும். பசியெடுக்கும். கல்லை முழுங்கினாலும் செமிக்கும். ஒடம்பு வலுப்படும். மனசுலே ஒரு தைர்யம் வரும். வேர்வை சிந்தி ஒழைச்சுப் பார்த்தாத்தான்... மனுசருக்கு மனுசக் குணமே வரும்."

"வேணி... அஞ்சுலே வளையாத ஒடம்பு. முப்பத்தைஞ்சுலே வளைக்கணும்னு ஆசைப்படாதே."

"இதுவே ஒரு பெருமையாக்கும்?"

விளையாட்டான வெறுப்பாக உதட்டைப் பிதுக்கினாள், வேணி. ஆனாலும் விளையாட்டல்ல. வெளிப்படுகிற ஏளனம். ரொம்ப ஆழத்திலிருந்து கூர்மையாக வருவதாய்... உணர்வான். ஆயினும் சீனிவாசன் அசையவில்லை. அப்படியே தான் இருந்தான்.

புஞ்சையில் கூலியாட்கள் பாத்தி கட்டிக் கொண்டிருந்தால்... இவன் பாட்டுக்கு, டீக்கடையில் பேப்பர் பார்த்துக் கொண்டிருப்பான். சாயங்காலம் போய்ப் பார்த்துவிட்டு வயிறெரிவான். காட்டுக் கத்தலாய்க் கத்துவான்.

"வாங்குற காசுக்கு வஞ்சகமில்லாம ஒழைக்க வேண்டாம்? ஆள் இருந்தா, ஒரு மாதிரி, இல்லேன்னா ஒரு மாதிரி. மோசக்காரப் பாவிக. பாத்தி கட்டியிருக்குற லட்சணமா, இது? வரட்டும், பேசிக்கிடுதேன்."

சம்பளம் வாங்க வருகிறவர்களிடம் ஓரே சண்டைக்காடுதான். வருஷம் பூராவும் வம்பு வழக்குத்தான், தகராறுகள். கூலியாட்களைக் குறை சொல்லிச் சண்டை போடுவது... அவனது சுபாவமாகிவிட்டது.

வேலைத் தளத்துக்குப் போக முடியாமலும் ஜோலிகள் வந்துவிடும். மேற்பார்வை ஜோலிகள். பேங்குக்கு நகை அடகு வைக்க, கடன் வாங்க, கொடுக்க, உரம் வாங்க... பூச்சி மருந்து வாங்க என்று ஜோலிகள்.

...போன வருஷம் மண்ணடிக்கிறபோது இப்படித்தான். எல்லாச் சம்சாரிக்கும் டக்கர் பன்னிரண்டு நடை கொண்டு வந்து கொட்டியது. இவனுக்குப் பத்து நடை மட்டும்.

கேட்டால்...கண்மாயிலிருந்து புஞ்சை ரொம்பத் தூரம்தான்கிற சால்ஜாப்பு. ஏமாளியாகிப் போய்ட்டோமே என்கிற மனக் கொதிப்பு, ரொம்ப நாளைக்கிருந்தது.

இந்தத் தடவை விடாக்கூடாது என்ற முடிவு. கண்மாயிலிருந்து கடைசிவரைக்கும் வேலை நடக்கிற லட்சணத்தைக் கண்காணிப்பது என்கிற வைராக்யம்.

...வந்தாயிற்று, தெற்குப் புஞ்சை. அதோ...தூரத்தில் சிவப்பாய் வருகிற டக்கர். கோபுரங்குத்தியாய் மண். நல்ல வண்டல். புஞ்சைக்குள் ரெண்டாவது குமி தட்டி முடித்துவிட்டுத் திரும்பிய டக்கரில் ஏறிக்கொண்டான். வெறும் டிரெய்லர், லோடு இல்லாமல், வண்டி போகிற வேகத்துக்கு 'பேய்க்குதி' குதித்து அதிர்ந்தது. தடதட சத்தம் காதைக் குடைந்தது. பேய்க் கூப்பாடு.

கலிங்கப்பட்டியை தாண்டிப் போகணும். இங்கிருந்து கண்மாய் மூன்று மைல் இருக்கும். கண்மாயின் உள்வாய்ப் பகுதி முழுக்கக் கருவேல மரங்கள். ஒன்றையொன்று

உரசிக்கொண்டு, பின்னிக்கொண்டு, அடர்த்தி என்றால் அடர்த்தி, கற்றை அடர்த்தி. ஆள் போக முடியாது.

கரையை ஒட்டிய மடைகள். மடைகள் இருக்கிற உட்பகுதிகளில் கொஞ்ச தூரம் மரங்களில்லை. கன்னங்கரேலென்று இருள் மாதிரியான கரிசல் மண். ஈரல் கட்டி மாதிரி. ஆள் உயரத்திற்கு வெட்டுக் கிடங்குகள். அங்குதான் கூலியாட்கள்.

டக்கர் போய் வட்டமடித்து நின்றவுடன்...

அள்ளி வைத்திருந்த அறுபது கூடை மண்ணையும் சடபுடவென்று தூக்கித் தட்டினார்கள். அள்ளிவிட, தூக்கிவிட என்று புயல் சுறுசுறுப்பாய் வேலைகள், பரஸ்பரம் அதட்டுகிற...ஏவுகிற... உசுப்புகிற சப்த அதிர்வுகள்.

''மம்பட்டியை ஓங்கிப்போடு!''

''கூடையை விருட்டுன்னு தூக்கிப்போடு.''

''நடுவுலே எட்டி எறி.''

''வெட்டி அள்ளு.''

''ஏய், கையிலே உசுர் இல்லியா? ஓங்கிக் குத்து,''

கண்மூடி முழிப்பதற்குள் வண்டி லோடாகிவிட, பீடியை சுண்டியெறிந்துவிட்டு டிரைவர் ஏறி... டக்கரை உயிர்ப்பித்தார்.

வண்டி போனவுடன் அவரவர் மரத்தடிகளில் போய்ச் சாயவில்லை. மாறாக... வேலைகள் சுறுசுறுப்புக் குன்றாத வேக வேலைகள். கடப்பாறையால் ஓங்கி ஓங்கிக் குத்தி மண்ணை நெகிழ்த்து விடுகிற இருவர். நெகிழ்ந்து புரளும் கட்டிகளை உடைத்து இழுத்துக் குவியலாக்குகிற நால்வர். அறுபது கூடைகளிலும் மண்ணை அள்ளி அடுக்குகிற நால்வர். றெக்கைகட்டிப் பறக்கிற வேலைகள்.

வியர்வை வரி வரியாய். துடைக்க நேரமில்லை. கரிசல் மண்ணைப்போல கறுத்த உடம்புகளில் வியர்வைக் கசகசப்பில் அடை அடையாய் கரிசல் தூசி.

கருவேல மரத்தடி நிழலில் உட்கார்ந்தான், சீனிவாசன். நிழலும் பொய் நிழல், வெக்கையான நிழல். செருப்பைப் போட்டு அதன் மேல்தான் உட்கார முடிகிறது.

வெயில் என்றால் வெயில், அப்படி வெயில். தீவெயில், நிமிர்ந்து பார்க்க முடியவில்லை, கண்ணெல்லாம் காந்து கிறது. அலை அலையாய் அந்தரத்தில் நெளிந்தோடுகிற கானற்சங்கிலிகள்.

சீனிவாசனைப் பார்த்து அன்போடு சொன்னார்கள்.

''நீங்க எதுக்கு வெயில்லே சீரழியணும்? வீட்டைப் பார்த்துப் போங்க.''

''எள்ளு காஞ்சதுன்னு... கூடவே எலிப் புழுக்கையும் காய்ஞ்சதாம்...''

''அதானே? நாங்க காய்றது சரிதான். தலை விதி. வயித்துப் பாடு. நீங்க எதுக்குக் காயணும்?''

எல்லாருக்கும் பொதுவாக மெல்லிசாகச் சிரித்துப் பதில் சொன்னான். ''இல்லே... நா இருக்கேன்.''

''அப்ப... இருங்க. எங்க தோள்லேயா இருக்கீக? ராசாப் போல இருங்க.''

வியர்வையைப் போலவே அவர்களுக்குள் வற்றாத கேலிகள், கிண்டல்கள், பரஸ்பர நையாண்டிகள். தாறு மாறான கெட்டவார்த்தை வசவுகள். சண்டை போடுகிற மாதிரி காட்டமான கோபப் பேச்சுகள். எல்லாமே வேடிக்கை விளையாட்டுகள்தான். அலுப்புத் தெரியாமலிருக்க உணர்ச்சி வடிகால்கள்.

பேச்சு பேச்சாக இருந்தாலும்... சீனிவாசன் அடிக்கடி மணியைப் பார்த்தான். போயிருக்கிற நடைகளை எண்ணி

மனசுக்குள் கணக்குப் போட்டான். பத்து நடைபோய்ச் சேருமா என்பதே சந்தேகம்தான்.

அவர்கள் சொல்லச் சொல்லக் கேட்காமல்... அவனும் 'கூடமாட' வேலைகள் செய்கிறான். சும்மாவே இருப்பதில் ஒரு குற்ற உணர்வு. உள் உறுத்தல். அதற்காகவே அவனும் உழைப்பில் பங்கெடுத்துக் கொண்டான்.

கடப்பாறையால் ஓங்கி ஓங்கிப் போட்டு அசைத்தான். மண் உருண்டைகளைப் பெயர்த்து உருட்டினான். கருவேலச் சல்லி வேர்களை அறுத்துக்கொண்டு மண் பெயர்கிறபோது... இவனுள் மழலைத்தனமான மகிழ்ச்சி. வெற்றி கண்ட மனப்பூரிப்பு. உழைப்பின் விளைவாய் நிகழும் மாறுதல்கள், அவனுள் ஒரு லாகிரியாய்...

நிழல் காலடியில் சுருண்டது. மதியமாகிவிட்டது. டக்கர் வந்து லோடு ஏற்றிப் போனவுடன்... லேசுமாசாய் கையைக் கழுவினர். தூக்குச் சட்டிகளை எடுத்து, வெட்ட வெயிலில் வட்டமாய் உட்கார்ந்தனர். திறந்தால்... ஒவ்வொரு சட்டியிலும் பத்துத்தோசை... பன்னிரண்டு தோசை. சட்னியில் நனைந்து கிடந்தது.

சீனிவாசன் அசந்து போனான். ஒரு மனுசனுக்கு இம்புட்டுத் தோசையா! சாப்பிட முடியுமா? அதுவும் தோசையா!

இவனையும் சாப்பிடச் சொல்லி ஆள் ஆளுக்கு உபசரித்தனர். மறுத்துவிட்டான். "தோசை... ஒடம்புக்கு ஒத்துக்காது."

அவர்கள் சாப்பிட்ட வேகம். மறைத்துக்கொள்ளாத ஆசையோடு தின்கிற ஆர்வம். ருசி பற்றிய பேச்சுகள், அதிலேயே கேலிகளும் கிண்டல்களும்... வாழ்வின் அவலமும்...

"தின்னுங்க தோசையை. விடாதீக."

''ஆமா... நாளையிலேயிருந்து புளிச்ச கஞ்சிதான்.''

''ஆம்பா... புரட்டாசி மொதச் சனிக்குத்தான் தோசையைக் கண்ணாலே பாக்கமுடியும் நம்மாலே!''

''கூலிக்காரன் தெனம் தோசைக்கு ஆசைப்பட முடியுமா?''

''நடக்குற காரியமா?''

''தட்டுக்காரன் வீட்லே தெனம் தெனம் கடைசி ஆடிதான். தோசை மணந்தான்.''

''தோசைன்னா... தனி ருசிதான்.''

''ஆசைதோசை, அப்பள வடைன்னு சும்மாவா சொல்லுதாக.''

''அதுலேயும் காட்டு ருசியிருக்கே... அது ஒரு தனி ருசி.''

''கஞ்சின்னா... குடிச்ச மாத்திரத்துலே பசிச்சிரும். தோசைன்னா... கம்முன்னு கெடக்கும்.''

''கல்லு மாதிரி.''

வினோதப்பிறவிகளைப் பார்க்கிற மாதிரி ஆச்சர்யமாய்ப் பார்த்தான், சீனிவாசன்.

'ராட்சஸங்கதான். தோசையையே இந்தப் போடு போடுறாங்களே, பாவிக, நம்மாலே ரெண்டு தோசையைக்கூட சாப்பிட முடியாதே!'

இவனுக்கு இது ரொம்பப் புதுசு. ஆச்சர்ய அனுபவம். இவனுக்குள் சம்மணம் போட்டு உட்கார்ந்துகொண்ட மலைப்பும், வியப்பும்.

பசி லேசாக வயிற்றைக் கிள்ளியது.

வேலையால் வழிகிற வியர்வை. சட்டையைக் கழற்றி வைத்துவிட்டான்.

தட தடவென்று பேயிரைச்சலாய்த் திரும்ப வந்த டக்கரில் சின்னவன் உட்கார்ந்திருப்பது தெரிகிறது. அவன் கையில் எவர்சில்வர் தூக்குச் சட்டி. அந்தரத்தில் ஏந்திப் பிடித்திருந்தான், குலுங்காமலிருப்பதற்காக.

கடப்பாறையை மண்ணில் குத்தி நிறுத்தினான். உள்ளங் கைகளைப் பார்த்தான். பிசு பிசுத்த கரம்பை மண். அதையும் தாண்டித் தெரிகிற கன்றிப் போன சிவப்பு. காந்தலான வலி.

குடத்துத் தண்ணீரில் கையை லேசாகக் கழுவினான்.

ஆட்கள் டக்கருக்கு நிமிஷத்தில் லோடு பண்ணி முடித்தார்கள். திரும்பிப் போன டக்கரில் கோபுரங்குத்தியாக மண். தேர் அசைந்து நகர்கிற மாதிரியான தோற்றம்.

மரத்தடிக்கு வந்தான். அடர்த்தியான பெருமூச்சு. உட்கார்ந்தான்.

''என்னடா... அம்மா குடுத்துவிட்டாளா?''

''ஆம்ப்பா...''

''நீ சாப்பிட்டுட்டியாடா?''

''சாப்ட்டுட்டேன்ப்பா.''

''இங்கேயும் சாப்புடுதியா?''

''வேண்டாம்ப்பா.''

''அம்மா இட்லிதா குடுத்துவிட்டாளா?''

''இல்லேப்பா...''

சின்னவன் குரலில் மெல்லிய அச்சம். பூகம்பத்தை முன்னுணர்ந்த நடுக்கம்.

சீனிவாசனுக்குள் சுள்ளென்று வருகிற கோபம்.

''பெறகு?''

''தோசை.''

சட்டென்று நிமிர்கிற சீனிவாசன். விரிகிற கண்களில் ஒரு விறைப்பு. மூக்கு நுனியில் மெல்லிய துடிப்பு. கன்னக் கதுப்புகளில் பற்கடிப்பின் புடைப்பு.

''தோ... சை... யா?''

அவனுள் சண்டாளமாய்ப் பீறிட்ட வெறி. பிடிக்காது என்று தெரிந்தும் தோசை கொடுத்தனுப்பினால்... அத்தனை அலட்சியமா? சின்னவன் முகத்தில் ஒரு மிரட்சி.

''இல்லேப்பா... காலையிலே ஒரு விருந்தாளி வந்துருச்சு. எடுத்து வைச்சிருந்த இட்லியை அவுகளுக்கு அம்மா வைச்சிட்டாக...''

''ம்'' அதில் ஒரு இறுக்கம்.

''தோசையை குடுத்தனுப்புறப்பவே... அம்மா சொன்னாக.''

''என்னன்னு?''

''உங்கப்பா என்னை வையத்தான் போறாரு. வாங்கிக் கட்டிக்கிட வேண்டியதுதான்னு சொன்னாக.''

வேணித்தாய் சொன்ன சொற்கள் குளிர் நீராக் கொதித்துக் கொண்டிருந்த அவன் மனசை ஆசுவாசப் படுத்தியது. சமாதானப்படுத்தியது.

அலட்சியம் செய்யவில்லை. மதிக்கிறாள் என்பதை உணர்ந்த மனத்திருப்தி. உள்ளே புதைந்து கிடந்த பெருந் தன்மை யுணர்ச்சியை உசுப்பிவிட்டது.

பெருமூச்சோடு சட்டியைத் திறந்தான். நாலு தோசை. ஒரு கிண்ணத்தில் சட்னி. அலம்பி விழுந்து தோசை நனைந்திருந்தது.

ஒரு தோசையை மட்டும் சாப்பிடுவது என்று உள்ளுக்குள் வைராக்யமான முடிவு. சகிப்புத் தன்மையை மீறிக்கொண்டு கசிகிற முணுமுணுப்போடு சாப்பிட்டான்.

சின்னவன் அவனது அம்மாவைப் போல, ரொம்பத் துறுதுறுப்பு. ஓடியாடி வேலை செய்கிற ஆர்வம். உழைப்பில் நாட்டம். ஓடி ஓடி மண்கட்டிகளைத் தூக்கிக் கூடைகளில் வைத்தான். பெரிய பெரிய கட்டிகளாய்க் கிடந்ததை மம்பட்டியால் உடைத்தான். ஓங்கி ஓங்கிப் போட்டான்.

அந்தப் பிஞ்சுப்பயல் வேலை செய்கிற நேர்த்தியை— அழகை— சுறுசுறுப்பையே பார்த்துக் கொண்டிருந்த சீனிவாசன்.

குனிந்து தூக்குச் சட்டியைப் பார்த்தான். அதிர்ந்தே போனான்.

நாலு தோசையும் காலி. நான்தான் சாப்பிட்டேனா என்கிற மலைப்பு. ஆச்சர்யம். இன்னும்கூட ஒரு தோசை சாப்பிடலாம் போல வயிற்றுக்குள் இடம்.

எண்ணெய் வாடை ஒத்துக்கொள்ளாது. நிஜம்தான். ஆனால், இப்போது ருசியாகவே இருந்ததாய் நினைவு. எப்படி? நாலு தோசை விழுங்க முடிந்ததே... அது எப்படி?

காட்டு ருசியே தனிருசி என்பது இதுதானா? காட்டு ருசி என்றால்... உழைப்புக்குப் பிறகு வருகிற பசியா?

''வியர்வை சிந்தப் பாடுபட்டாத்தான்... அதோட அருமையும் அழகும் தெரியும்.''

''ஒழைச்சுப் பாத்தாத் தெரியும். பசியெடுக்கும். கல்லை முழுங்கினாலும் செமிக்கும்.''

வேணி அடிக்கடி சொல்கிற வேதம், நிஜம்தானோ?

ராட்சஸமாய் உழைப்பதால்தான்... இவர்கள் பத்துத் தோசை என்று ராட்சஸத்தனமாய்ச் சாப்பிடுகிறார்களோ...

அவனுக்குள் ஆச்சர்யமான வெளிச்சம். சுபாவத்தையே அலசிக் காயப்போடுகிற அனுபவ வெளிச்சம். உள்ளுக்குள் துருவேறிக் கிடந்த சாளரங்கள் திறந்து கொண்ட உணர்வு.

சாயங்காலம்...

சம்பளம், வாங்க வந்த கூலிக்காரர்களோடு சண்டை போடவில்லை, சீனிவாசன். அன்றைக்கு மட்டுமல்ல...

# 5. அவனாகி...

சின்னாண்டிக்கு கண்ணுக்குள் முள்ளைச் சொருகின மாதிரியிருந்தது. உறக்கம் வந்து ஒட்டவே மாட்டேனென்கிறது. சாமத்திற்கு மேலாகி விட்டது.

புரண்டு புரண்டு படுத்துப் பார்த்தான். அப்படியும் இப்படியுமாய் புரண்டு, வளைந்து பார்த்தான். ஊஹூம்!

ஈரத்துணியாய் வந்து அப்புகிற தைமாசப் பனி. உள் நரம்பெல்லாம் நனைந்து வெடவெடக்கிறது, இழுத்து மூடிய இடுப்பு வேட்டியும் குளிரில் நனைந்து. 'தொப், தொப்' பென்றாகி விட்டது.

மாரி மூலைக் காற்று சுழன்று சுழன்று அடிக்கிறது. சனியன் பிடித்த இந்த ஊளைக் காற்று, உள்சதைவரை ஊடுருவிப் பாய்ந்து... கூதல் நடுங்குகிறது.

மனுச மக்கள் இந்தப் பனிக் கொடுமையில் வெளியே படுப்பார்களா? எல்லாரும் வீட்டுக்குள் கதகதப்பாய்...

இவன் மட்டும் வெளியில் — மண் திண்ணையில்.

திண்ணைக்கு அடியில் கூடு. கூட்டுக்குள் பன்றிகளின் உறுமலும் இரைச்சலும், கோபமும் சீறலுமாய் பன்றிகளின் கதறல். கடிபட்டு கூச்சலிடுகிற குட்டிகள்.

அதுகளின் பீதியான வீறிடல்.

மின் கம்பத்தில் பின்னங்கால் கட்டிக்கிடகிற சினைப் பன்றி. அதன் உப்பிய அடிவயிறு. கயிறை அறுத்துக் கொண்டு ஓட எத்தனிக்கிற அதன் ரணக்கதறல்.

பக்கத்தில் ஒரு தொழுவம். அதில் படுக்காமல் அசை போடாமல் 'தறியமுறிய' தத்தளிக்கிற எருமை. அடிவயிறு எக்கி எக்கி... விட்டு விட்டு, முடிவில்லாமல் கனைக்கிற சத்தம். இடி முழக்கம் மாதிரி — உயரத்திலிருந்து உருண்டு வருகிற பாறை மாதிரி... ஒரு கர்ணகொடூரமான கனைப்புச் சத்தம்.

பாவம், அதற்கு ஏதோ உபாதை. வலியின் அவஸ்தை. கனைப்பின் தொனியிலேயே அதன் வேதனை...

நாய்களின் குரைப்புச் சத்தம், சின்ன அரவம் கேட்டால் கூட குபீரென்று சீறிப்பாய்கிற நாய்கள். ஆவேசக் குரைப்பு.

அப்புறம் அரவம் அடையாள மற்றுப் போக... நாய்களும் குருட்டுக் குரைப்பாகக் குரைத்து விட்டு அடங்கும்.

சின்னாண்டி உறங்க முடியாமல் அலை பாய்ந்து வருவதற்குக் காரணம், இந்தச் சத்தங்களல்ல. அவன் மனசுக்குள் 'நொய் நொய்'யென்று நச்சரிக்கிற நினைவுச் சத்தங்கள். மனச்சாட்சிக்குள்ளிருந்து உருண்டு உருண்டு வருகிற நினைவலைகளின் இரைச்சல்.

இந்த இரைச்சலையெல்லாம் தாண்டி அமுக்கிக் கொண்டு குடிசைக்குள்ளிருந்து மெல்லிசாய் வெடித்துச் சிதறுகிற விசும்பல். மனசின் அடியாழத்தில் இடி முழக்கமாக அதிர வைக்கிற அந்த விசும்பல். அவனது ஆத்மாவின் விசும்பல். ஆத்ம பங்காளியின் சோக விசும்பல்.

இன்று முழுக்க சின்னாண்டிக்குச் சாராயம் கிடைக்காமலேயே போய் விட்டது. ஆன மட்டும் எம்புட்டோ முயற்சி பண்ணிப் பார்த்தான். கடைசி வரைக்கும்... ஒரு கிளாஸ் சாராயத்துக்கு வழியேயில்லாமல் போயிற்று.

சின்னாண்டிக்கு நாய்க்கர் புஞ்சையில் பதிவு வேலை. அன்றாடக் கூலிதான். ஆனாலும்... நிரந்தரமாய் வேலை.

காலைக் கரண்டு. விடிந்தவுடன் பம்ப்செட் மோட்டாரைத் தட்டி விட்டான். கற்றையாக தண்ணீர் சீறிப் பாய்ந்தது. வாய்க்காலில் நுரைத் தலைகளோடு ஊர்ந்து வந்த நீர்ப் பாம்பு. எல்.ஆர்.ஏ. பருத்திக்குள் பாய்ந்து பரவியது. இவன் ஓடி ஓடி வாய்க்கால் புல்லைச் செதுக்குகிறான்.

பருத்திச் செடியில் தேன் நோய். பச்சையை தின்று தீர்த்து விட்டது. தீப்பிடித்து வெந்து முடிந்த காடாய்... நிறம் கெட்டிக் கிடந்தது. காய்த்த இலைச் சருகுகளை நீர் சத்தமாய் இழுத்துச் சென்றது.

ஓடைக்கு வந்த நாயக்கர், அப்படியே புஞ்சைப் பக்கம் வந்தார்.

''ஆண்டி, மதியம் வரைக்கும் தண்ணி இருக்குமா?''

''கரண்டு இருக்கிற வரைக்கும் தண்ணியிருக்கும் சாமி''

''சரி... பாய்ச்சி முடிச்சிரு''

''ஆட்டும் சாமி''

''கரண்டு நின்ன பிறகு... களத்துலே எள்ளுப்பொதி இருக்கு. அதைப் பிரிச்சு, காய வைச்சுரு''

''சரி சாமி...''

இவனுக்குள் 'சாமி'யிடம் ஒரு பத்து ரூபாய் கேட்க ஆசை. தர மாட்டேன் என்பார். முன் கூட்டியே குடும்பச் செலவுக்கு அவர் தந்திருக்கிற இருநூறு ரூபாயில் சம்பளத்தைக் கழிக்க வேண்டும் என்பார். கெஞ்சிக் கூத்தாடணும். மருகி மன்றாடணும். கனிஞ்ச சொல் சொல்லி... மனசைக் கரைக்கணும். எப்படியாச்சும் பத்து ரூபாய் வாங்கியாகணும்.

வாங்கினால்தான்... சாயங்காலம் தண்ணி போட முடியும். ரெண்டு கிளாஸ் உள்ளே தள்ளலாம்.

பொழியில் நகர்ந்து கொண்டிருந்த நாயக்கரிடம் மெதுவாகக் கிசுகிசுத்தான்.

''சாமி...''

''என்ன?''

''சாமியவுக கிட்டே ஒரு சின்னக் காரியம் ஆகணும்''

நின்று அவனைப் பார்த்தார். காலை நேர மஞ்சள் வெயில் அவன் முகத்தில். அவனை நிதானமாய்ப் பார்த்தார். அவனது உள் மன ஓட்டத்தை அளக்கிற நிதானம். அவர், உதட்டில் மெல்லிசான சிரிப்பு.

''என்ன காரியம்னாலும் சரி... சாயங்காலம் பார்ப்போம். இப்ப எனக்கு ஜோலியிருக்கு. அர்ஜெண்ட்''

விடுவிடுவென்று போய்விட்டார். முற்றுப் புள்ளியாய் முடித்து விட்டுப் போய் விட்டார், நாயக்கர். வேறு என்ன பேசமுடியும், இவனால்?

வாயை வாயை மென்றான்.

யோசித்துப் பார்த்தால்... அவர் இல்லையென்றும் சொல்லவில்லை. அவனுள் அரும்பிய நம்பிக்கை...

'சரி... வீட்லே போய் பாத்துக்கிடலாம்' என்று தெம்பாக முணுமுணுத்துக் கொண்டான்.

எள்ளுப் பொதி வட்டமாய், ரெண்டாள் உயரத்துக்கு இருந்தது. பிரித்தான். ஆவி வந்தது. அழுகிக் கிடந்தது.

நாலு நாலு கட்டாய் கூட்டி நிறுத்தினான். உதிர்ந்து கிடந்த எள்ளைக் கூட்டி ஒதுக்கினான். காய்ந்து கிடந்த

எருக்கிலையையும், வேம்புக் கொப்புகளையும் தூரப் போட்டு விட்டு... நாயக்கர் வீட்டுக்குப் போகிற போது... மணி மூன்றாகி விட்டது. காலடி நிழல்... கிழக்காக மண்ணில் ஊர்ந்தது.

''அம்மோ...வ்''

''என்ன ஆண்டி?''

''வேலைக முடிச்சாச்சும்மா...''

''சரி... உக்காரு கஞ்சியை குடி''

மாடு கட்டுகிற தொழுவத்தில் உட்கார்ந்தான். நாய்க்கரம்மா சட்டியில் கொண்டு வந்து கஞ்சி ஊற்றினாள். இவன் பார்வை. உள்ளுக்குள் அலைந்தது. சாமியவுகளைத் தேடியது.

இவனுள் சாராய நமைச்சல். அதன் காந்தலுக்கு ஆவலாய்ப் பறக்கிற மனசு. பத்து ரூபாய் வேணும்.

''அம்மோ...வ்''

''என்ன ஆண்டி?''

''சாமியவுக இல்லியா?''

''இல்லே''

இவனுள் பக்கென்று.

''எங்கே இருக்காகம்மா...?''

''சங்கரங்கோயில் போயிருக்காக. கமிஷன் கடையிலே கடன் கேக்க...''

கரும்புள்ளியாய் வந்து விழுந்த சொற்கள். கஞ்சிக்குள் அலைந்த விரல்கள் உயிரற்றுப் போயிற்று. மனசுக்குள் அறைகிற ஏமாற்றத்தை எதிர்கொள்ள முடியாத நடுக்கத் தளர்வோடு கேட்டான்.

''சாமியவுக... சாயங்காலம் வந்துருவாகளா?''

''இல்லே. நாளைக்குத்தான் வருவாக''

அவனுக்குள் உயிர் நரம்பு அறுபட்டுத் தெறிக்கிற மாதிரியோர் அதிர்வு. அரை உயிராய் கஞ்சியைக் குடித்தான்.

''ஏய் ஆண்டி''

''என்னம்யா...''

''போறப்ப... காளை மாட்டுக்கு தண்ணி காட்டிட்டு, கூளம் போட்டுட்டுப் போயிரு''

''ஆட்டும்மா...'' என்று முணங்கிய போது. உள்ளுக்குள் தளதளக்கிற கொதிப்பு. இனம் புரியாத குருட்டுக் கோபம். ஏமாற்றத்தின் அறை. சாராயம் குடிக்க முடியாமற் போய் விடுமோ... என்கிற பதைப்பு.

''விடிஞ்சு எந்திச்சவுடனே... எந்த வெறுவாய் கட்டை மூஞ்சியிலே முழிச்சேனோ...'' என்று உள்ளடங்கிய கோபத்தோடு அந்த மூஞ்சியை மனசுக்குள் தேடினான். அப்புறம், சகட்டு மேனிக்கு சகலரையும் திட்டித் தீர்த்தான்.

ரெண்டு கிளாஸ் தண்ணி வேணுமே... ரூபா வேணுமே... யார்கிட்டே போய் கேக்குறது? மடியிலே கனமில்லாமல், வழியிலே தெளிவிருக்காதே.

அவனுள் குழப்பமான தேடல். யாரிடம் போய் காலில் விழலாம்? யார் காலில் விழுந்தால், காரியம் நடக்கும்?

டீக்கடைக்குப் போனான். யாரையோ எதிர்பார்த்து நின்றவர், இவனைக் கண்டதும் திருப்தியாக சிரித்தார்.

''ஏய்... சின்னாண்டி, ஒரு சின்ன வேலை, செய்றியா?''

"சொல்லுங்க முதலாளி..."

"வேலித்தூரு ஒன்னு கெடக்கு. ஒடைச்சுக் குடு. ஏதாச்சும் தாரேன்"

சின்னாண்டிக்குள் கும்மென்று எழுகிற தெம்மாங்கு. தேடிப்போன மூலிகை, காலடியிலே வந்து விழுந்த மாதிரி... ஒரு வாய்ப்பு.

வேலித்தூர் கிடந்த இடத்துக்குப் போனான். புடைத்த சாக்குமூட்டை கனத்தில் வேலித்தூர். சாக்கு நிறத்திலேயே முடிச்சி முடிச்சாக ஓடிக் கிடந்தது. வைரம் பாய்ந்த கட்டை. உடைக்க முடியுமா? லேசில் வாய் பிளக்குமா?

மலைப்பாக இருந்தது.

குடித்த கஞ்சியின் தைர்யம். குடிக்கப் போகிற சாராயத்தின் காந்தலான ஈர்ப்பு. உள்ளுக்குள் ஒரு சிலிர்ப்பு. ஆர்வக்கிளுகிளுப்பு, பரவசம்.

மலைப்பைக் கடந்தான். கோடாரியை தலைக்கு மேலாக ஓங்கினான்.

உடைத்து முடிக்க... மணி நாலரையாகி விட்டது. தலையில் கட்டியிருந்த துண்டை அவிழ்த்து உதறி, உடம்பெல்லாம் வரி வரியாய் ஓடிய வேர்வையை துடைத்துக் கொண்டே மூச்சிரைக்க கடை முதலாளி முன் நின்றான்.

"மோலாளி வேலை முடிஞ்சது"

"ஒடைச்சிட்டியா?"

"சிறாய் சிறாயா ஆக்கியாச்சு..."

"சரி... நல்லதாப் போச்சு"

''ஏதாச்சும் குடுங்க முதலாளி''

சின்னாண்டிக்குள் ஆர்வம். பரபரப்பு. காந்தலான தண்ணியின் ருசி, மனசுக்குள் தொண்டைக்குள் அந்த நமைச்சல்.

''துட்டு தரமாட்டேன்''

''ஏன் மோலாளி?''

''துட்டு குடுத்தா... சாராயத்துக்குத்தான் ஓடுவே. தண்ணி போடுற ஆளுகளைக் கண்டாலே... எனக்குப் பிடிக்காது''

''ஐயய்யோ... அப்படிச் சொல்லாதீங்க மோலாளி... இன்னிக்கு ஒரு நா மட்டும்... தண்ணிக்கு வழி பண்ணிருங்க''

''அந்தப் பேச்சே இங்க வேண்டாம். தண்ணி போட நா துட்டு தர மாட்டேன். சத்தியமா. பத்து ரூவாய்க்கு ஏதாச்சும் பலகாரம் வாங்கிட்டுப் போ. புள்ளைகளுக்கு ஆகும்''

எம்புட்டோ மன்றாடிப் பார்த்தான். கெஞ்சிக் கூத்தாடினான். கதையாகவில்லை. அவர் ரொம்ப வைராக்கியமாக நின்று விட்டார்.

சின்னாண்டிக்கு ஒன்றும் செய்ய முடியவில்லை.

உதறிப் பேசி விடலாம். சண்டை போட்டு சம்பளத்தை வாங்கிடவும் செய்யலாம். நாளைப் பின்னே அவரது தயவு வேணுமே... உறவு வேணுமே...

எளிய சாதிக்காரன். கட்டுப்படாமல் இருக்க முடியாதே...

மனசுக்குள் மூர்க்கம். மூர்க்கமான மிருக உறுமல்கள். சாதிக் கூண்டுக்குள் கட்டுப்பட்ட மலட்டு உறுமல்.

கடைக்காரரை வாய்க்கு வந்தபடி திட்டித் தீர்த்தான். மனசுக்குள் தான். வெளிப்படையாக வைய முடியுமா? எளியவன். ஆளும் பேரும் கூடி தோலை உரித்துத் தொங்கப் போட்டு விடுவார்களே...

குருட்டுக் கோபத்தில் ஒன்றும் வாங்காமல் வெறும் கையோடு போய் விட்டான். பின்னால் ஏளனச் சிரிப்புச் சத்தம் கேட்டது.

சின்னாண்டிக்கு கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை. கட்டிப்போட்டு நெருப்புக்குள் தூக்கிப் போட்ட மாதிரியிருந்தது.

இப்ப... தண்ணிக்கு வழி பண்ணியாகணுமே... என்ன செய்றது? யார் காலில் போய் விழுறது? யாரிடம் போய் கெஞ்சுறது?

ஒன்னும் புரியவில்லை. சும்மாவும் இருக்க முடியவில்லை. சாராய தாகம். நெஞ்சுக்குள் நமைச்சல். தாக அவஸ்தை...

ஊருக்கு மேற்கே... ஓடை, ஓடைக் கரைகளில் பெரிய பெரிய வேலிச் செடிகள். நீள நீள முட் கிளைகள். அடர்த்தியான புதர்கள்.

அங்குதான்... சாராய ஏவாரம். கறுப்புக் கேனும் கண்ணாடிக் கிளாஸுமாய் உட்கார்ந்திருப்பான், ஏவாரி. கடன் தரமாட்டான். சிடுமூஞ்சி. முதலில் காசு தந்த பிறகு தான், கண்ணாடி கிளாஸில் சரக்கை ஊற்றுவான்.

குருட்டு நப்பாசையில்... பக்கத்தில் போய் உட்கார்ந்தான்.

துட்டு உள்ள புண்ணியவான்கள் அரவமில்லாமல் வருகிறார்கள். பணத்தை நீட்ட... கிளாஸில் வாங்கி அண்ணாக்க ஊற்றி விட்டு அரக்க பறக்க ஓடுகிறார்கள்.

திங்கிற பிள்ளைகளைப் பார்த்து, ஏங்குகிற சிறுவனைப் போல சின்னாண்டியின் பார்வை, மனசு.

ஏவாரி இவனை கடுப்புடன் பார்த்தான். அவனது அனாவசியமான இருப்பு... எரிச்சலாக இருந்தது.

''ஏய்... ஒனக்கு சரக்கு வேணுமா?''

''துட்டு இல்லே''

''அப்ப எடத்தைக் காலி பண்ணு''

''ஒரு கிளாஸ் குடுக்கக் கூடாதா?''

''ஓசியா? எங்க பொண்டாட்டி புள்ளைகளை யாரு காப்பாத்துறது?''

''ம்...''

''அப்ப... கௌம்பு''

''சும்மா உக்கார்ந்திருக்கக்கூடாதா?''

''சும்மா உக்காந்துருக்க... இது என்ன டீக்கடையா? துட்டு இருந்தா... குடி. இல்லே, நடையை கட்டு''

தாட்சண்யமில்லாமல் துரத்துகிற ஏவாரியை பரிதாபமாய்ப் பார்த்தான்.

குடிக்க வந்தவர்களிடமெல்லாம் 'ஐயா, சாமி' என்று மன்றாடினான். ஒரு கிளாஸ் சாராயத்துக்காக எவன் எவனுக்கோ கொழை அடித்துப் பார்த்தான். உப்புக் கல்லுக்குப் பெறதா பயல்களைக்கூட, ''மகராசா... புண்ணிய மூர்த்தி'' என்றெல்லாம் சொல்லிப் பார்த்தான்.

பருப்பு வேகிற மாதிரி தெரியவில்லை.

பொழுது சிவந்து விட்டது. மேற்கு மலைத் தொடரின் முதுகை உரசிக் கொண்டிருந்தது. வெயில், சந்தன நிறமாகி விட்டது.

சின்னாண்டிக்கு பார்க்கப் பார்க்க மனசுக்குள் உன்மத்தம். வெறி.

செந்தாமரை நாடார் வந்தார். எழுதப் படிக்கத் தெரியாத ஆள். வியாபாரம். கையில் நாலு சில்லரை. வட்டிக் கொடை வாங்கல் உண்டு. 'அஞ்சு வட்டி செந் தாமரை' என்றுதான் பட்டப் பெயர்.

அவரை 'ஆஹோ, ஓஹோ...' என்று பாடிப் பார்த் தான். அப்பேற்பட்ட அறிவாளி, இப்பேற்பட்ட கெட்டிக் காரர் என்றெல்லாம் அள்ளி வீசினான்.

அவன் அளந்து விட அளந்து விட... அவர் பெரு மையில் பூரித்துப் போனார். நின்றவாறே ரெண்டு கிளாஸை வாங்கி ஊற்றிக் கொண்டார். மூன்றாவது கிளாஸுக்காக கையேந்திய போது—

''மோலாளி...''

''ம்''

''உங்க பகடைக்கு ஒரு கிளாஸ் ஊத்தச் சொல் லுங்க''

''ம்''

''ஏண்டா ஆண்டி... எங்கிட்டேயா சாராயம் கேக்கே... நீ? நா ஒனக்கு வாங்கித்தரணும். ஊம்? வாங்கி வாயிலே ஊத்திட்டு, எங்க தோள்லே கை போடுவே. ஊம்? ராஸ்கல், எங்க சாதியை போதையில கொறைச்சுப் பேசுவே. இல்லே?''

''மோலாளி... நா... அப்படிச் செய்வேனா? உங்க கால் செருப்புக்குச் சமானம், நா. போட்டு மிதிச் சாலும்... உங்களைச் சொமப்பேன் மோலாளி. ஒரே கிளாஸ் மோலாளி, ஒன்னே ஒன்னு. உத்தரவாகட்டும்''

நின்ற நிலையில் இவனைப் பார்த்தார். பார்வையில் கத்தியாய்ப் பாய்கிற ஏளனம்.

''உங்களையெல்லாம் ஒதுக்கி வைச்சு, வைக்க வேண்டிய எடத்துலே வைச்சாத்தான்... வசத்துக்கு வருவீக. சாராயம் வேணுமாம் சாராயம். உங்க சகவாசமே வேண்டாம்... போடா... போ''

மூன்றாவது கிளாஸையும் ஊற்றிக் கொண்டு, ஓடைக்குள் இறங்கி விட்டார்.

சின்னாண்டிக்கு செருப்படி பட்ட மாதிரியிருந்தது. அவமானமாய் உணர்ந்தான். சாராயம் கிடைக்காதது மட்டுமல்ல... சாதியைச் சொல்லி எத்தனை இழிவாகப் பேசி விட்டுப் போகிறார்!

அவனுள் ஊசி பாய்ந்த மாதிரி வலித்தது. இங்குட்டு குத்தி, அங்குட்டு ஊசியை பிடுங்கிய மாதிரி... மனசின் இரு பக்கத்திலும் வழிகிற ரத்தம். தெளிந்த ரத்தம்.

அவனுள் திகுதிகுவென்று எரிகிற தீ.

விருட்டென்று எழுந்தான். விறுவிறுவென்று வீட்டுக்கு ஓடினான்.

கூலி வேலைக்குப் போய்விட்டு வந்திருந்த முத்தக்கா, ரசத்துக்கு புளியை கரைத்துக் கொண்டிருநதாள். சட்டியில், அடுப்பில் சோறு கொதித்துக் கொண்டிருந்தது.

புயலாய் வந்து சேர்ந்தான் சின்னாண்டி.

''ஏய்... துட்டு இருக்கா?''

''எதுக்கு? தண்ணிக்கா?''

''ஆமா''

"அடிப்பாவி மனுசா! கொழும்புக்கு வழியில்லாம... நானே ரசத்தை வைச்சுக்கிட்டிருக்கிறேன். பாவம் புள்ளைக. வாங்கித் திங்க துட்டுக்கேட்டு... அடி வாங்கிட்டு அழுதுக்கிட்டுப் போயிருக்குக. ஒனக்கு சாராயம் கேக்கோ?"

"பாடுபட்ட மனுசன் சாராயம் குடிச்சா... என்ன தப்பு?"

"மடியிலே துட்டை வைச்சுக்கிட்டு குடி. வேண்டாம்னு குறுக்கே வந்து விழவா போறேன்? ஏங்கிட்டே வந்து துட்டு கேக்கலாமா? அறிவு இருக்கா, ஒனக்கு? வெக்கமில்லே?"

அவ்வளவுதான்.

நாயக்கர், டீக்கடைக்காரர், ஏவாரி, செந்தாமரை எல்லாரும் அவனுள் மிதித்த மிதிகள்... அடித்த அடிகள்... செய்த இழிவுகள், கொடுமைகள் எல்லாம் அவனுள் ஒன்று சேர்ந்து...

அவன் அவனாக இல்லாமல் வேறொரு பிசாசாக நிறம் மாறி... வெறி கொள்ள...

ஓங்கி ஒரு மிதி மிதித்தான். மல்லாக்க விழுந்த முத்தக்கா தலை முடியை கற்றையாகப் பற்றி இழுத்துப் போட்டு... 'நழுக் நழுக்' கென்று மிதித்தான். ஆங்காரமாய் மிதித்தான்.

"ஐயய்யோ ஆத்தா... இந்தப் பாவி இப்படிப் போட்டுக் கொல்லுதானே... நாசமாய்ப் போற பாவி"

என்று முத்தக்கா அலறிய அலறலில், தெருவே திரண்டு வர... வந்தவர்கள் எல்லாம் இவனை சத்தம் போட்டு அதட்டி வெளியே தள்ள... பெண்கள் அவனைக் கண்டித்து சமாதானம் பண்ண... ரணகளப் பட்ட வீடு, சண்டை ஓய்ந்து... சுமுகமாயிற்று.

அழுகையும் புலம்பலுமாய் புள்ளைகளுக்கு சோறு போட்டு உறங்கப் போட்டு விட்டு... குலைப் பட்டினியாய் கிடந்தாள் முத்தக்கா, குடிசைக்குள்.

சின்னாண்டியும் சாப்பிடவில்லை, நாயக்கரம்மா மதியம் ஊற்றிய கஞ்சி. அப்புறம், பச்சைத் தண்ணீர் பல்லில் விழவில்லை. வயிற்றில் ஊசிக் குத்தலாய், பசி. உடம்பில் ஊசிக் குத்தலாய், பனி. மனசில் ஊசிக்குத்தலாய் அவளின் விசும்பல்.

ஆயினும், அவனுள் ஒரு வீராப்பு. 'பாடுபட்ட மனுசனை சாப்புடுன்னு ஒரு வார்த்தை சொல்லக் கூடாதா என்று ஒரு கோபம்.

எப்படி 'இறங்கிப் போய்' சோறு கேட்பது? மனசுக்குள் விம்மிப் போயிருக்கிற வீம்பு.

முத்தக்காவை மிதித்த மிதிகளை நினைத்தான். வலது உள்ளங்காலில் ஒரு நமைச்சல்!

பாவம் அவள்! பொழுதுக்கும் காட்டில் பாடுபட்டு வந்தவள். அடுப்பில் வேலை பார்த்து மாய்ந்தவள். ஒரு தப்பும் செய்யாத மகராசி. புண்ணியவதி. என்னிடம் வாழ்க்கைப்பட்டு 'சீ'ப்படுகிறாள்.

ஏங்கிட்டே மிதிப்பட்டுச் சாகிறாள். யார் யார் மேலேயோ உள்ள கோபத்தை—தண்ணிக்கு வழி பண்ண முடியாத ஏலாமையை அவள் கிட்டே வந்து காட்டிட் டேன்... நா ஒரு கூறு கெட்ட நாய்.

மனசின் மிருதுவான இடத்தில் ஓர் அதிர்வு. ஓர் இளக்கம்.

ஆயினும், ஆண் வீராப்பு.

உள்ளிருந்து வருகிற விசும்பல். ஆத்ம பங்காளியின் விசும்பல்.

மனக்கொதிப்போடு அவள் தலையில் 'மடேர், மடேரெ'ன்று அடித்துக் கொள்கிற சத்தம். அவளது அவலமான சோகப் புலம்பல். மனசின் ஆழத்தைக் கீறிக் கிழிக்கிற சோகம்.

ஆம்பளைகிட்டே அடியும் மிதியும் பட்டுச் சாகிற கொடுமை, பொம்பளைக்கு எப்பத்தான் தீருமோ...? ஆம்பளைக்கென்ன கொம்பா மொளைச்சிருக்கு? ஊருக்கெல்லாம் மிதிபடுற அடிமை, ஆம்பளைக. அந்த ஆம்பளைகிட்டே மிதிபடுற அடிமையா, பொம்பளைக. பெண் ஜென்மத்துக்கு எப்பத்தான் விடிவு காலமோ...?

அவளது புலம்பல் சத்தம். தலையிலும் மார்பிலும் அறைந்து கொள்கிற சத்தம். மனச்சாட்சியை பற்றிக் குலுக்குகிற சத்தம்.

இவனுள் அதிர்வில் பரவல். மனுச ஈரக்கசிவு. அவன் அவனாகி... மிருதுவாகி... முத்தக்காவின் ஆத்ம பங்காளியாகி...

ஆண் வீராப்பு கரைந்து வழிய...

குடிசையின் கதவை தள்ளிக் கொண்டு நுழைந்தான் சின்னாண்டி.

நிமிர்ந்து பார்த்த முத்தக்காவை கனிவுடன் பார்த்தான்.

இவனைப் பார்த்தவுடன் கண்ணிலிருந்து வழிகிற நீர்க்கோடு.

"அழாதே முத்து... சாப்பிடாம கெடந்து, என்னைக் கொல்லாதே..." என்று கிசுகிசுத்தான்.

"நீயும் சாப்புடலேல்லே?" என்றாள், முத்தக்கா. அவள் காய்ந்த உதடுகளில் மெல்லிய வெடிப்பு.

"ம்"

நடுச்சாமத்திற்கும் பிந்தைய அந்த நேரத் தனிமையில் —மன அண்மையோடு— சாப்பிட்டார்கள், இருவரும்... ஒருவரையொருவர்.

மே, 1993 சிறுகதை கதிர்.

# 6. உயர்ந்தவன்?

தாழை முத்து நாடாருக்கு சகித்துக் கொண்டிருக்க முடியவில்லை. முள்முள்ளாய் குத்துகிற நச்சரிப்பு.

விடிந்ததிலிருந்து புஞ்சையில் ஓயாத வேலை, மதியக் கஞ்சியை இப்போதுதான் குடித்தார். ஆயாசமும் அயற்சியுமாய் வந்தது.

இனி, சாயங்காலம்தான் வேலை. பருத்திக்கு மருந்தடிக்கணும். அதுவரை சற்று கட்டையைச் சாய்க்கலாம் என்ற நினைப்பில், திண்ணையில் துண்டை விரித்தார்.

மூட்டுக்கு மூட்டு வலி. சதைகளைக் கவ்வி இறுக்குகிற வேதனை. உபாதை பூராவையும் அள்ளிக் கூட்டி வெளியேற்றுவதைப்போல... நீளமாய் ஒரு பெருமூச்சு விட்டார். மனசின் ஆழத்திலிருந்து குலதெய்வத்தை நினைத்து முணுமுணுத்துக் கொண்டார்.

''தாழையடி அய்யனாரே, அய்யா. நீருதான் தொணை'' என்று மெல்லத் தலை சாய்த்தார். அப்போது—

சம்முகவடிவு எரிச்சலோடு புலம்பத் தொடங்கி விட்டாள். புலம்பலோடு சேர்ந்து... அதை நியாயப் படுத்த விசும்பல் வேறு.

''வீடு வீடாகவா இருக்கு? புள்ளைச் சத்தம் இல்லாம. வெறும் வீடா கிடக்கு மலடி வீடு மாதிரி, ஒத்தைப் புள்ளை, வீட்லே தங்கவிடலை. விரட்டித் தொலைச்

சுட்டீகளே... பாவி" என்று ஆரம்பித்துவிட்டாள். இனி... ஒரே அங்கலாய்ப்புதான். வசவுகள். அனல் துண்டுகள் தெறிக்கும்.

பெற்ற மனதின் குலை கொதிப்பு. சுமந்து பெற்ற வயிற்றின் மனப் பிசைவு.

"ஒத்தைப் புள்ளையையும் தொலைச்சுட்டு. குத்துக் கல்லு மாதிரி சாய்ஞ்சி கிடக்குறதுக்கு எப்படித்தான் மனசு வருதோ... அடப்பாதரவே! இதுவும் ஒரு மனுச சென்மமா?"

நாடாருக்குள் தகப்பனுக்குரிய பாசத்தவிப்பு. மன உளைச்சல். கனவுகளைக் குழைத்து வடிவமெடுத்த வாரிசு. தனது ரத்த நிழல். பரம்பரைத் தொடர். தனது மறு உயிர்.

எங்கோ... எங்கே என்று இனம் புரியாத எங்கோ...

அடப்பாவி. ஒரு கடுதாசி கூடவா போடக்கூடாது? நாலு வருஷமாச்சே. எப்படியெல்லாம் சங்கடப் படுறானோ... எங்கே கிடந்து சீரழியுறானோ... ஒரு தாக்கலும் இல்லியே.

நொந்து கிடக்கிற தகப்ப மனசுக்குள்— சம்முக வடிவின் முள் வார்த்தைகள். ஊசிப் பாய்ச்சல்கள். அவரால் சகிக்க முடியவில்லை.

பக்கத்தில்தான் உட்கார்ந்திருக்கிறாள். 'இப்படியே ஓங்கி ஒரு மிதி மிதிச்சிடலாமா...' என்று கொந்தளிக்கிற உணர்வு.

"அடச்சீ! மனுசனை நிம்மதியா இருக்கவிட மாட்டியா?"

"நிம்மதியா? அடப்பாவி! வளர்ந்த புள்ளையை தொலைச்சுட்டு... ஒமக்கு நிம்மதி கேக்காக்கும்?"

விருட்டென்று எழுந்தார். வேகமாய்ப் பாய்ந்தார். அசைப்பு ஸ்பிரேயரைத் தூக்கி முதுகில் மாட்டிக் கொண்டு, வடிவை எரித்து விடுவதைப் போலப் பார்த்தார்.

ஊருக்கு வெளியே ஒரு வெட்ட வெளி. பஸ். நிலையம் என்று பெயர். டீக்கடை இருந்தது, டீக்கடை முன் நெத்தி மட்டக் கம்புகளோடு பத்து இளவட்டங்கள் ஆவேசமாய் இருந்தனர். கொதி நிலை.

"நம்ம சாதி குறிச்சு பேசுன பயலை அடிச்சுச் சாய்க்காம வரவே வராது" என்று ஒரு இளவட்டம் தீயாய்ச் சீறினான். ஆள் ஆளுக்கு அந்த இளவட்டங்களைச் சமாதானம் செய்தனர். கட்டுப்படவில்லை.

கடைசியில், ஞானப்பிரகாச நாடார் வந்தார் "ஏலேய்... கம்புகளைப் போட்டுட்டு ஜோலிகளைப் பார்த்துப் போங்கடா" என்று பெரிதாய்ச் சீறினார்.

"ஏலேய்... கம்பு தூக்கி, கௌரவம் வராதுடா. இழிவும் அழிவும்தான் வரும், காலத்தோட சேர்ந்து படிச்சு பாடுபட்டு முன்னேறிக் காட்டுங்கடா. அதுலே தான் கௌரவம் வரும். அப்படித்தான் வந்துருக்கு."

அவர் போட்ட சத்தத்தில்தான் கம்புகள் மடங்கின. கசகசப்போடு கலைந்தனர்.

டீக்கடைத் திண்ணையில் வந்து உட்கார்ந்தார். ஸ்பிரேயரோடு உட்கார்ந்திருந்த தாழைமுத்து நாடாரிடம் கேட்டார்.

"என்ன... மருந்தடிக்கவா?"

"ஆமா... தாத்தா."

"பருத்திக்கா?"

''ம்''

''காய்ப்புழு சாகுதா?''

''அது சாகுற மாதிரித் தெரியலே. மருந்தடிச்சு மருந்தடிச்சு நாமதான் சாகணும். பூ, பலன் பூரா உதுருது.''

வெறுப்போடு பார்த்தார் தாத்தா.

''போங்கடா நீங்களும். உங்க சம்சாரித்தனமும்.''

தாத்தா... நல்ல பழுத்த கட்டை வயசு. தொண்ணூறுக்கும் மேலே. தேன் நிறத் திரேகம். அனுபவங்களைப் போல, நிறையச் சுருக்கங்கள். இடுங்கிக் கொண்டு பார்க்கிற கண்ணிமைகளிலும் பளீர் நரை.

'...முந்தியெல்லாம், நாடாக்கமார் தண்ணிகேட்டா, சிரட்டையிலே தான் தருவாக. இல்லேன்னா, ஒழக்குலே ஊத்திக்குடுப்பாக. தெருவுலே செருப்புப் போட்டு நடக்க வுடமாட்டாக இவனை ஒரு மனுசனாக்கூட நெனைக்க மாட்டாக. இவன் என்னிக்கு... படிப்புலேயும் ஏவாரத்துலேயும் மனசை ஊனி, நிமிர்ந்தானோ... அதுக்குப் பெறகுதான், மனுச அந்தஸ்தே கெடைச்சது. இதெல்லாம் தெரிஞ்சுக்கிட்ட பின்னாடியும்... இவன் சாண்நாரையும். மம்பட்டியையும் கட்டிக்கிட்டு மாரடிக்கலாமா? புத்தியிருக்கிற நாடான், கட்டுப்படியாகாத மண்ணைக் கட்டிக்கிட்டு அழுவானா?''

இதுதான் ஞானப்பிரகாச நாடார் கட்சி. பழைய காலச் சமாச்சாரங்களை கதை கதையாகச் சொல்வார். சாதி அடக்குமுறை தாங்க முடியாமல். பாதிரியாரிடம் தஞ்சமடைந்து. ஞானஸ்நானம் பெற்ற கதையை கண் முன்னால் நடக்கிற மாதிரி உணர்ச்சியோடு விவரிப்பார்...

படிப்பால் உயர்ந்தவர்கள். வியாபாரத்துறையால் கோடீஸ்வரர்கள் ஆனவர்கள் கதைகளைப் பற்றி... நிறையச் சொல்வார்.

அக்கதைகளைச் சொல்கிறபோது... தாத்தா முகத்தில் ஒரு தீவிரம் தெரியும். கண்ணில் ஒளிமின்னும்.

தாழைமுத்து நாடாருக்கு தாத்தா பேச்சில் எப்பவும் ஒரு மயக்கம். உணர்ச்சி ததும்பும் அவரது பேச்சில் ஒரு உலகமே தெரியும். வந்த வழி தெரியும். வாழும் வகையே புரிவது போலிருக்கும்.

சுனைக்கனியை பெரிய படிப்பு படிக்க வைக்க வேண்டும் என்கிற வெறியே அதில்தான் பிறந்தது. ரொம்ப அக்கறையெடுத்து படிக்க வைத்தார்.

ஒரு கிராமத்துச் சம்சாரிக்கு. தன் பிள்ளையைப் படிக்க வைப்பதில் இம்புட்டு ஆர்வமா? வெறியா? வாத்தியார்களே ரொம்ப ஆச்சர்யப் பட்டார்கள்.

ஆண்டு விழா ஒன்றில் கூட, தாழைமுத்து நாடார் பெயரைச் சொல்லி தலைமையாசிரியர் பாராட்டினார்.

"இம்மாதிரி ஒவ்வொரு பெற்றோரும் இருந்து விட்டால்... மாணவர்களின் எதிர்காலம் ஒளிமயம் பெற்றே தீரும்."

தாழைமுத்து நாடாருக்கு சந்தோஷம் தாங்க முடியவில்லை. பெருமிதம் ததும்பிப்போய், தத்தளித்தார்.

சுனைக்கனியும் நன்றாகப் படித்தான். அய்யாவின் உள்மனக்கனவை உணர்ந்து கொண்டவனைப் போல, படிப்போடு ஒன்றிப்போனான். பயல் விவரமானவன். துடியான பயல். நல்ல மனசுக்காரன். யாருக்கும் இரக்கப் படுவான். நல்ல மார்க் வாங்கிக் கொண்டே வந்தான்.

தாழைமுத்து நாடாருக்குள் பூப்பூவாய் கனவுகள். விதம் விதமான கற்பனைச் சுகங்கள்.

டீக்கடைகளில்- மடத்தில்- பொது இடங்களில்- மக்கள் கூடுகிற இடங்களில் கலெக்டர்- தாசில்தார் என்று

பெரிய அதிகாரிகளைப் பற்றிப் பேசுகிற போதெல்லாம், இவருக்குள் சுனைக்கனியே தாசில்தாராய், கலெக்டராய்.

அந்த இனிமைக்கரைசல், வெகு சீக்கிரத்தில் வேப்பெண்ணெயாகி விட்டது.

ப்ளஸ் 2 பரீட்சையில் 'தத்திப் புத்திக்' கரையேறினான்.

எதற்கும் லாயக்கில்லாத மார்க். கல்லூரிக்கனவு நீர்க்குமிழியாய் மூச்சுவிட்டது.

இந்தத் தோல்வி, சுனைக்கனியை முதலில் கலங்க வைத்தது. அப்புறம், சமாளித்துக்கொண்டான். அவனுக்கு இயற்கையாகவே விவசாயத்தில் ஓர் ஈர்ப்பு. மம்பட்டியைத் தூக்கிக் கொண்டு புஞ்சைக்குக் கிளம்பி விட்டான்.

ஆனால். தாழைமுத்து நாடாரால் இந்தத் தோல்வியைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. தனது கனவு சிதைந்து போன கொடூரம்.

அவன்மீது காரணகாரிய மில்லாமல் சீறிச் சீறி விழுந்தார். அடைக்கோழி மாதிரி கொத்திப் பிடுங்கினார்.

எந்நேரமும் திட்டித்தீர்த்தார். ஒவ்வொரு கொதிப்பும் இவ்வாறே முடிந்தது: "எங்காச்சும் போய்த் தொலையேன்"

"மம்பட்டி புடிக்கிறதுக்கு இம்புட்டு படிப்பு படிக்கணுமா? நாசமாய்ப் போனவனே!"

சுனைக்கனி தவித்துப் போனான்.

கோபத்தைக் கடந்து... அய்யாவுக்குள் என்ன இருக்கிறது? என்னவாய் தன்னை ஆக்க விரும்புகிறார்?

இதைப் புரிந்துகொண்ட மறுநாளே சுனைக்கனி தொலைந்து போய்விட்டான்.

முழுத்த இளவட்டம் காணாமல் போனான் என்றவுடன் தாழைமுத்து பதறிப்போனார். உள்ளுக்குள் உடைந்து போனார். சம்முகவடிவு ஒப்பாரியே வைக்கத் துவங்கி விட்டாள்.

மறுவாரம் ஒரு கடிதம் வந்தது.

''எங்கே போகிறேன்? எனக்குத் தெரியவில்லை, நான் நினைத்தபடி வாழ முடியவில்லை. நீங்கள் நினைத்த வழியில் நடக்கிறேன். நீங்கள் விரும்பிய மாதிரி ஒரு முன்னேற்றமான நிலைக்கு வந்த பிறகுதான், கடிதம் எழுதுவேன், ஊர் திரும்புவேன்.''

இந்தக் கடிதம், அவரைக் குற்றவாளி என்று பகிரங்கமாக்கி விட்டது.

ஊரெல்லாம் அவரை நாவால் சுழற்றியடித்தது. சுற்றத்தார்கள் காறித்துப்பினர். ''ஒத்தைப் புள்ளையை கொத்திப் புடுங்கி, தொரத்தியடிச்சிட்டானே... பாவி'' தாழைமுத்து நாடாருக்கு ஆறுதல் வார்த்தை சொன்ன ஒரே ஜீவன், இந்த ஞானப்பிரகாச நாடார்தான்.

''போவட்டும்... போய்... நாலா காடு, நாலா மனுச மக்களை பார்த்து அனுபவப்படட்டும், ஆம்பளைப் புள்ளைதானே? எங்க போனாலும்... பொழச்சிக்கிடுவான். மூளையிருந்தா முன்னேறிருவான். கவலைப் படாதே'' என்று தெளிவு சொன்னார்.

பார்க்கிற நேரமெல்லாம் ஞாபகமாய்க் கேட்டார் ''பயகிட்டேயிருந்து ஏதாச்சும் தாக்கல் வந்துச்சா?''

''வரல்லே''

''வரும், வரும். சீக்கிரம் நல்லநிலைக்கு வந்துருவான்''

பொழுது மேற்கே சாய்ந்து விட்டது. உரக்கடைக்குப் போனார். சம்முகவடிவு போட்ட கூப்பாட்டில் பணம் எடுத்துவர வில்லை. தயங்கினார்.

''என்ன பாக்குறீக?''

''பூச்சி மருந்து வேணும்''

''வாங்கிட்டுப் போங்க''

''அவசரத்துலே ரூவா எடுத்துட்டு வரல்லே''

''அதுக்கென்ன? உங்களை நம்பலேன்னா... உலகத்துலே யாரை நம்புறது?''

அவருக்குள் ஒரு சந்தோஷம். வாழ்ந்த வாழ்க்கை வீணாகிப் போய் விடவில்லை என்கிற திருப்தி. தன் மதிப்பை தானே உணர்கிற கணத்தின் பெருமிதம்.

தாழைமுத்து நாடார் ரொம்ப நேர்மையானவர் என்பது ஊரறிந்த விஷயம். சொன்ன சொல் மாற மாட்டார்.

இவரது உறுதிமிக்க நேர்மையால் நஷ்டம் வந்ததுண்டு.

ஊரில் சிலர் அதைச் சொல்லி கேலி பண்ணுவார்கள். ''இந்தக் காலத்துலே இவரை மாதிரியிருந்தாபொழைக்க முடியாது. நேர்மைக்குக் கிரீடமா கிடைக்கப் போவுது? எவனும் தலையிலே மொளகாய் அரைச்சுட்டுப் போயிருவான்.''

பூச்சி மருந்தோடு பருத்திப் புஞ்சைக்குப் போனார். சாயங்காலச் சூரியன் நிறம் மாறியிருந்தது. மார்கழி மாதம். பனியில் நனைந்த வெயில், சுகமாக இருந்தது.

மருந்தடித்துவிட்டு, ஸ்பிரேயரைக் கழுவி முதுகில் போட்டு விட்டு, ஊருக்குள் நுழைகிறபோது, கருகரு வென்று மயங்குகிற நேரமாகி விட்டது.

வீட்டிற்குப் போனார். சம்முக வடிவு ஒரு பதற்றத் தோடு தவித்துக் கொண்டிருந்தாள். இவரைக்கண்டதும் ஆவலாய் ஓடி வந்தாள்.

"என்ன வடிவு, என்ன ஆச்சு?"

அவள் முகத்தில் உணர்ச்சித் தத்தளிப்பு.

"போஸ்டாபீசு ராசமணித் தம்பி, இதைக் குடுத் துட்டுப் போச்சு. எனக்குக் கையும் ஓடலே காலும் ஓடலே."

வாங்கினார். நீலநிற உள்நாட்டுக் கவர்.

அவருக்குள்—

'குபுகுபு'வென்று ஊற்றெடுத்துப் பீறிடுகிற சுனைக் கனி நினைவுகள்.

அவர் கைகளில் ஒரு நடுக்கம். கண்களுக்குள் நீரின் ஈர உறுத்தல். மனதுக்குள் ஒரு படபடப்பு. திக்.திக்.

இரண்டு நாள் ஆயிற்று. நேற்றுத் தான் சுனைக்கனி வந்திருந்தான். கிராமத்தின் புழுதியையெல்லாம் கிளப்பிக் கொண்டு சிமெண்ட் நிற வாடகைக் காரில் ஆரவாரமாய் வந்து இறங்கினான்.

கிராமமே ஆச்சரியத்தில் திணறியது. வியந்தது. தொலைந்து போனவன், ஒரு புதையலாகத் திரும்பியிருக் கிறான்.

ஆள் மாற்றி ஆளாய் வந்து, பார்த்து, சந்தோஷமாய் விசாரித்து விட்டுப் போகிறார்கள். வீடு பரபரப்பாய் இருந்தது.

சுனைக்கனி ரொம்ப மாறிப் போயிருக்கிறான். முகத்தில் ஒரு பளபளப்பான மிருது. கொத்து மீசை, விரல்களில் மோதிரம்.

எல்லா ஆரவாரமும் அடங்கிற்று. இன்றுதான் கொஞ்சம் ஆசுவாசம். தனித்துப் பேசச் சந்தர்ப்பம் ஆயிற்று.

''ஏலேய் கனி, இங்க வாடா''

தாழைமுத்து நாடார் மகனைப் பார்த்தார். மனசில் குழைவு, பார்வையில் கனிவாய்...

வந்து திண்ணையில் உட்கார்ந்தான். அய்யாவைப் பார்த்து அர்த்தத்துடன் சிரித்தான். ''என்ன அய்யா?''

''ம்... போன எடங்கள்லே ரொம்பச் சங்கடப் பட்டுட்டியோ?''

''ஆமா. மொதல்லே ரெண்டு கடைகள்லே சம்பளத்துக்கு இருந்தேன். ரொம்பக் கஷ்டந்தான். குளிக்கக்கூட நேரமிருக்காது. சாப்புடறதே பெரும்பாடு.''

''இப்ப...''

''மெட்ராஸ் மண்ணடியிலே சொந்தமா ஒரு பலசரக்குக் கடை. மூணு பையங்க சம்பளத்துக்கு இருக்காங்க''

''ம்''

''வீட்டடி மனை ஒண்ணு வாங்கிப் போட்டிருக்கேன். ஒரு ஸ்கூட்டர் வாங்கியிருக்கேன். இப்ப ஒரு வேன் வாங்கறதுக்கு அட்வான்ஸ் போட்டுட்டு வந்துருக்கேன்.''

நாடார் கண்கள் இடுங்கின. ஆழ்மனதில் ஒரு சந்தேகதனமச்சல். குரலை ரொம்ப மிருதுவாக்கினார்.

"கொஞ்ச நாள் தானே ஆகுது? அதுக்குள்ளே... இம்புட்டும் எப்படி?"

"'எப்படீன்னா...?' கேள்வியாக எதிரொலித்தான். ஒரு வினோதமான சிரிப்பு உதட்டில். ஏளனமும் கசப்புமாய் ஒரு கலவைச் சிரிப்பு.

"...இல்லை... நேர்மையான முறையிலேதானான்னு கேக்கேன்டா"

லேசாகக் குனிந்த நிலையில் மறுபடியும் அதே புதிர்ச் சிரிப்பு. ஒரு வினாடி யோசித்துவிட்டு, நிமிர்ந்து அய்யாவைப் பார்த்தான்.

"ஏவாரத்துலேதான் இந்தச் சம்பாத்தியம்"

சுனைக்கனி ஒரு புதிராகத் தோன்றுகிறான். புதிராகப் பேசுகிறான். 'நேர்மையான முறையில் தான்' என்று சட்டென்று ஏன் சொல்லமாட்டேன் என்கிறான்!

அவருள் ஒரு குறுகுறுப்பு. பூரான் ஊர்கிற மாதிரியான திகிலான குறுகுறுப்பு.

அவர் மனம் அவர் முகத்தில் வந்து நிற்க. அதை அவனும் உணர்ந்தான். அய்யாவைப் பரிதாபத்துடன் பார்த்தான்.

"அய்யா... ரிஷிமூலம் பாத்தா கும்புடத் தோணாது. நதி மூலம் பாத்தா தண்ணி குடிக்க மனசு வராது. அது மாதிரிதான் ஏவாரத்துலேயும். லாபமூலம் பாத்தா முன்னேற முடியாதுய்யா"

"என்னடா... சொல்றே?"

"மனுசனா வாழ்றது வேற. ஏவாரியா முன்னேறுறது வேற. நேர்மை தர்மங்கிறதெல்லாம் பாடுபடுற மனுசங்ககிட்டே இருக்கும். ஏவாரத்துக்குச் சரிப்பட்டு வராதுன்னு சொல்றேன்"

மகன் சொல்லுக்குள் புதைந்து கிடக்கிற பயங்கரம். அவன் உதடுகளில் உறைந்து நிற்கிற கசந்த சிரிப்பு. அவனுக்கே விருப்பமில்லாத முறையில் அவன் பாதையா?

இந்தச் சம்பாத்திய முயற்சியில்... அருமைமிகுந்த தன்னையே அவன் தொலைத்து விட்டானா? அவன் மனச்சாட்சியின் முன் அவனே குற்றவாளியாக உணர்கிறானா? ஈரமான மகன் தொலைந்து, லாபமான ஏவாரி வந்தான், டும் டும்... என்கிற நரிக்கதைதானா?

நேர்மையான தாழைமுத்து நாடாருக்குள், ஆழத்தில் ஒரு நமைச்சல். ஏதேதோ நினைவுகள்.

சாதனையாளனாக பக்கத்தில் உட்கார்ந்திருக்கிற மகன். தூரம் தூரமாய் நகர்ந்து போவதாய் ஒரு பிரமை.

இதுவரைக்கும் தொலைந்து போயிருந்தது கூட நிஜமில்லை. இப்போதுதான் சுனைக்கனி நிஜமாகவே தொலைந்து கொண்டிருப்பதாக உணர்ந்தார். அவருள் இருள் மூட்டமாய் ஒரு துயரம். இது அமாவாசை இருட்டில்லை. சாஸ்வத இருட்டு.

இது எதைப்பற்றியும் உணராமல், மகன் வந்த சந்தோஷத்தில் 'தோசைக்குப் போட, கோழியடிக்க' என்று புரபரத்துக் கொண்டிருந்தாள் சம்முகவடிவு. லௌகீக வாழ்க்கையைப் போல. □

# 7. பௌர்ணமி

றெக்கை முளைத்த மாதிரியிருந்தது சிந்தாமணிக்கு. சந்தோஷமென்றால் சந்தோஷம்... அம்புட்டுச் சந்தோஷம். உள் நரம்புகளுக்குள் ஓடிப் பரவுகிற பரவசம். உள்மனச் சிலிர்ப்பு. ஒவ்வொரு அணுவிலும் மனத் துள்ளல்.

சிரமப்பட்டு மறைத்தாலும் மீறிக்கொண்டு, முகத்தில் மனசின் மலர்ச்சி. அதன் ஒளி.

சிந்தாமணிக்கு வயது முப்பத்தைந்துக்கும் மேலே. மூன்று பிள்ளைகள். மூத்தவள் ராஜி. ஏழாங்கிளாஸ்.

சிந்தாமணிக்கு சிறகடிப்பு. இப்பத்தான் கல்யாணம் ஆனவளைப்போல குதூகலத்துடிப்பு. மனசுக்குள் குமரிப் பருவக் கொத்தளிப்பு. கும்மாளம்.

எல்லாம்... புருஷனை நினைத்துத்தான். குமரேசனை நினைக்க நினைக்க ஒரே கொண்டாட்டம். அவனிடம் அத்தனை மாற்றம். தலைகீழ் மாற்றம்.

'நாற்பது வயசில் நாய்க் குணம்' என்பார்கள். நாய்க் குண வயசில்தான் அவனிடம் மனிதக்குணம் வந்திருக்கிறது. சூரியக்குணம் — பகலில் இயங்குகிற அக்கறை குணம். லௌகீக குணம்!

முந்தியெல்லாம் குமரேசன் இப்படி இருக்கவில்லை. வேறு மாதிரியாயிருந்தான். 'ஒரு மாதிரி'யாய்...

காடுகரைக்குப் போக மாட்டான். போனாலும், அங்கேயும் புத்தகம் தான் படிப்பான். ஒரு வேலை ஜோலி பார்க்க மாட்டான். பொறுப்பே கிடையாது.

சூரியனைக் கேலி செய்கிற மாதிரி சும்மாவே இருப்பான். அக்கறை கிடையாது. ஆர்வம் கிடையாது.

விருந்தாளி மாதிரிதான் அவனும்! காலநேரம் பார்த்து கரெக்டாக சாப்பிடுவான் காலநேரம் தெரியாமல் வாசிப்பான். கண் பூத்துப்போனால் தெருக்காட்டுக்கு போய்விடுவான்.

டீக்கடையில் உட்கார்ந்து பேசினால், அப்படிப் பேசுவான். பசிதான் ஆளை எழுப்ப முடியும்.

'இப்படி ஆக்கங்கெட்ட ஆம்பளைக்கு வந்து வாக்கப்பட்டுச் சீரழியுறோமே' என்று சிந்தாமணி புலம்பாத மாதமில்லை; வருத்தப்படாத வருஷமில்லை.

...மதியக்கரண்டு. பருத்திக்கு தண்ணீர் பாய்ச்ச கூலியாள் போயிருக்கும். சொந்தப் புஞ்சையில் நடக்கிற வேலை பற்றிய சுரணையேயில்லாமல், ஊர் மடத்தில் அவன் சத்தம் ஓங்கிக் கேட்கும்.

பக்கத்தில் தான் வீடு. சிந்தாமணிக்கு வயிறு எரியும். குலை கொதிக்கும்.

"புஞ்சைவேல நடக்கையிலே பொறுப்பில்லாத இந்த ஆளு இப்படி இருக்கே..." என்று புலம்பி தகிப்பாள்.

"போடி... உங்கப்பனை இழுத்துட்டு வாடி" கோபத்தில் மகளை விரட்டுவாள்.

வந்து நிற்பான். குற்ற உணர்வில்லாமல் வெகு இயல்பாய் இருப்பான். "காபி போட்டுட்டியா?"

வெறுப்பும் கொதிப்புமாய் அனலாய்ச் சினந்து பார்ப்பாள். அவன் அலுங்கவே மாட்டான்.

''இப்படித் திரிஞ்சா எப்படி?''

''என்ன செய்யச் சொல்றே... நீ?''

''புஞ்சைக்கு போகலாம்லே? தண்ணி பாய்ச்சுறவனுக்கு காப்பியைக் கொண்டுபோய்க் குடுத்துட்டு. அங்க உண்டான ஜோலியை பார்க்கலாம்லே?''

''நானா''

''நீங்கதான். ஏன், நீங்க புஞ்சையிலே வேலை பாக்கக் கூடாதா? கிரீடம் எறங்கிடுமா? நீங்க என்ன பெரிய சீமானா?''

புண்பட்டவனைப் போல அவன் முகம் குறாவிப் போகும். கண்ணில் ஒரு வேதனை துடிக்கும், அறுபட்ட பல்லி வாலாக!

''மொதல்லே... எனக்கு காப்பியைக் குடு.''

குடித்து முடித்தவுடன் சின்னவனைப் பார்ப்பான். ''ஏலேய், புஞ்சையிலே போய் நீ காபியைக் குடுத்துரு.''

உத்தரவு போட்டுவிட்டு, சீமைராசா மாதிரி புறப்பட்டு விடுவான். திணுங்காமல் அவன் போகிற லட்சணத்தைப் பார்க்கப் பார்க்க, இவளுள் கிடந்து மனசு தகிக்கும்.

'இப்படியும் ஒரு மனுசரு இருப்பாரா? நாலு பேரைப் போல பாடுபடணும்... நாலு காசு சம்பாதிக்கணுங்கிற அக்கறையில்லாம ஒரு ஆம்பளை இருப்பாகளா? சும்மாவே இருக்கிற இருப்பும் ஒரு இருப்பா? சூரியனுக்கடியில் குருவி கூட சும்மாயிருக்காதே... தெருக்காட்டிலே ஆம்பளை சுத்தினா வீடு விளங்குமா?'

கொதிபானைச் சோறாக அவள் நினைவு... தளதளத்துக் கொதிக்கிற நினைவு... ததும்பிப் பொங்கி, புலம்பலாக வழிகிற நினைவு.

இருக்கிறதே ஒண்ணே முக்கால் குறுக்கம் புஞ்சைதான். இறவைத் தோட்டம் உப்புத்தண்ணீர்க் கிணறு.

இந்தக் குண்டுச்சட்டிக்குள்தான் குடும்பத்தின் குட்டோட்டம், நெட்டோட்டம் எல்லாம். இதில் விளைவதை வைத்துத்தான் அஞ்சு ஜீவன்கள் மூச்சு வாங்க வேண்டும்.

இந்த ஆளுக்கு இந்தக் கவலையெல்லாம் கிடையாது. பெரிய்ய பண்ணையார் நினைப்பு. கைவிரலில் அழுக்குப் படாமல் திரிகிற கித்தாப்பு.

உழவுக்கு மாடு கூப்பிட, பாத்திகட்ட 'ஆள் பார்க்க என்று எல்லா வேலைகளும் இவள் தலையில்தான். தாலியறுத்த பொட்டச்சி மாதிரி தெருத்தெருவாய் அலைந்து காலொடியணும்.

புஞ்சைக்கு வேலைக்கு வருகிறவர்கள், வாயை வைத்துக் கொண்டு சும்மா வேலை பார்ப்பதில்லை. கிண்டிக் கிளறுவார்கள். புண்ணில் சீண்டி பார்ப்பார்கள்.

''அண்ணாச்சி புஞ்சைக்கு வரமாட்டாரா? '

அப்புராணிப் பாவனையில் கேள்வி கேட்பார்கள். ஏளனமும் பரிகாசமும் உட்கார்ந்திருக்கும். அவமானமாய் உணர்வாள் சிந்தாமணி. வெளிக்காட்டிக் கொள்ள முடியாது.

''வருவாரு...''

''இன்னிக்கு வரல்லே?''

''ஊருக்குப் போயிருக்காரு''

''அண்ணாச்சி கவலையத்த ராசா. மகராசி நீங்க எல்லா வேலைகளையும் செஞ்சிடுறீக. அவரு சீமைராசா கணக்கா ஊரு சுத்தறாரு.''

பாராட்டா, கேலியா? தொனியை நிதானிக்க முடியாமல் துடிப்பாள். மனசுக்குள் கொத்திப் பிடுங்கும்

அவமானம். இந்தப் பக்கம் ஊசியால் குத்தி, மறுபக்கம் உருவுவதைப் போல அவளுள் பரவுகிற வேதனை. அணு அணுவாய் அவஸ்தை.

ஒன்றும் பதில் பேச முடியாது சிந்தாமணியால். என்னத்தைப் பேச? என்ன யோக்யதையில் பேச? கூறு கெட்ட ஆம்பளையை வைத்துக் கொண்டு எந்த வாயைத் திறந்து பேச?

அவளுள் குலை கொதிக்கும். ஊரில் அகப்பட்ட சாமி களையெல்லாம் இழுத்துப்போட்டு வைது தீர்ப்பாள்.

''ஈ எறும்புக்குக்கூட தீங்கு நினைக்காத சாதிமான் கன்னு நான். எனக்கா இந்தக் கேவலம்? அட, குருட்டுப் பய தெய்வமே...''

வாழ்வின் வெளி வட்டத்தில்தான் குமரேசன் இப்படி. உள்வட்டத்தில் கதையே வேறு. ரொம்பக் குளிர்ச்சி. பௌர்ணமி நிலாக் குளிர்ச்சி.

பிள்ளைகளுக்கு அருமை அருமையாய்ப் பாடம் சொல்லிக் கொடுப்பான். நல்ல நல்ல கதைகள் போடுவான். குழந்தைகளோடு குழந்தையாய், நிலா வெளிச்சமாய் சிரித்துச் சிரித்து விளையாடுவான். மழலை மனசு.

சாப்பிட உட்கார்ந்துவிட்டான் என்றால்... குமுறிக் கொதித்துப் போயிருக்கிற சிந்தாமணியைக் குளிர வைத்துவிடுவான்.

''கொழம்பு ரொம்ப நல்லாயிருக்கு. தாளிச்ச வாசம் ஆளைத் தூக்குது'' என்பான்.

''சோறு வேக்காடு ரொம்பப் பக்குவம்'' என்பான். குழம்பு எதுவானாலும் நாலு வார்த்தை பாராட்டாமல் அதைத் தொடமாட்டான், வெறும் ரசமும் துவையலும் மட்டும வைத்திருந்தால்கூட முகம் சுளிக்கமாட்டான்.

"ரசத்துலே மல்லிச் செடி வாசம், மனசைக் கொள்ளையடிக்குது" என்று அதற்கும் பூக்களைத் தூவுவான்.

பாராட்டைப் பழிப்பவளைப் போல சிந்தாமணி முகம் சுளிப்பாள். "ஆமா... இந்தச் சொக்குப்பொடிப் பேச்சுக்கு ஒண்ணும் கொறைச்சலில்லே" என்று ஏளன மாய்ச் சொல்வாள்.

ஆனால், உள்ளுக்குள் பௌர்ணமி நிலாக் குளிர்ச்சி பாய்ந்து பரவும். பூப்பூவாய்ப் பூத்து, மனசே பூவனமாய்ச் சிலிர்க்கும்... தைமாச நிலா மிதக்கும் ஆகாயமாய் அவள்...

இரவின் அந்தரங்கத்தில் அவன் தொடுகிற விதம்கூட ஒரு நேர்த்திதான், நேரமறிந்து... மனசறிநது... தாகமும் மோகமுமாய் அவள் கனிந்து நெகிழ்கிற கணத்தில்தான் தொடுவான்... நிலா வெளிச்சமாய்,

மறுக்க வழியிருக்காது

அவனது ஆக்கிரமிப்பின் இங்கிதத்தில், இதத்தில் சுகத்தில் அப்படியே லயித்துத் துவண்டு கிடப்பாள்... தேனில் விழுந்த எறும்பாக,

அப்படியான ஒரு மயக்கப்பொழுதில்தான் சிந்தாமணி அந்தத் தகவலைச் சொன்னாள்.

"உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா?"

"என்னது?"

"தெக்குத் தெரு மாடத்தி மகள் சடங்காயிட்டா..."

"அந்தச் சின்னப் புள்ளையா?"

"ம்..."

"அவ... நம்ம ராஜி வயசுதானே?"

''ம்... ராஜியும் அந்தப் புள்ளையும் ஒரே நாள்லே பொறந்தாக...'

''அந்தப் புள்ளையா சடங்காயிருச்சி? அதுக்குள்ளேயா?''

''ம்...''

அவனது வியப்பில் ஒரு இறுக்கம் இருந்தது, உள் நடுக்கம் தெரிந்தது. பதற்றத்தில் பேசக்கூடப் பயந்து மௌனத்தில் உறைந்து போய்விட்டான். வாழ்க்கையின் மூர்க்கச் சுமையில், அவன் மனசு மூச்சுத் திணறியது.

இந்த ஒரு மாசமாய்த் தலைகீழாய் மாறிவிட்டான், குமரேசன்... வேலை... வேலை... எந்த நேரமும் வேலை தான். சூரியனுக்குப் போட்டியாக அலைச்சல். சூரியோதயம், அஸ்தமனம் ரெண்டையும் புஞ்சையிலிருந்துதான் பார்ப்பான்- அதுக்குப் பிறகும் வேலைகள்...

இப்போதெல்லாம் தண்ணீர் பாய்ச்ச கூலியாள் கிடையாது. அவனேதான்... அசைப்பு பிரேயரைத் தூக்கி முதுகில் போட்டுக் கொண்டு, பருத்திக்கு ஓடி ஓடி மருந்தடிப்பதுவும் அவன்தான்.

சிந்தாமணியுடன் களை வெட்டக்கூட கூச்சப்படாமல் புறப்பட்டுவிடுவான். நிரைபிடித்து குனிந்தால், லேசில் நிமிர மாட்டான்.

இதையெல்லாம் தூசியாக நினைக்கிற மாதிரி, இன்றைக்குப் பெரிய சாதனையைச் சாதித்துக் காட்டி, ஊரையே அசத்திவிட்டான்.

இவர்கள் கிணறு உப்புத் தண்ணீர். புஞ்சையே உவர் பொங்கிக் கிடக்கும். தண்ணீர் பாயப் பாய வெள்ளாமை தேய்பிறையாய்ச் சுருங்கும். மழை பெய்தால்தான் வெள்ளாமை.

உப்புத் தண்ணீர் பாய்ந்து உவர் பொங்கிய மண்ணில், நல்ல தண்ணீர் பாய்ந்தால்... பெரிய உரம் போட்ட மாதிரி. திகிடுமுகுடாக வெள்ளாமை விளையும்.

தூரத்தில்... முந்நூறு அடிக்குள் ஒரு கிணறு. நல்ல தண்ணீர். தேங்காய்ப் பால் மாதிரி தித்திப்பு.

இவன் ஊர் ஊராய் அலைந்து, விசாரித்து, சிரமப் பட்டு நானூறு அடி ரப்பர் டியூப் சுருளைச் சுமந்து கொண்டு வந்து, கிணற்றுக்காரரிடம் கெஞ்சிக் கூத்தாடி, மணிக்கு பதினைந்து ரூபாய் என்று வாடகை பேசி... அந்த நல்ல தண்ணீரைப் பருத்திப் புஞ்சைக்கு இன்றைக்குப் பாய்ச்சிவிட்டான். இது பெரிய சாதனை. துணிச்சலான சாகசம். பெரிய விஷயம்.

சிந்தாமணிக்கு றெக்கை முளைத்த மாதிரியிருக்கிறது. முகத்தில் ஒரு ஒளித்தும்பல். பெருமிதப் பரவல்.

ஊர் அவனைப் பேசி பேசி மாய்கிறது. மூக்கில் விரலை வைத்து அசந்து போகிறது. புருஷனை நினைக்க நினைக்க இவளுள் பூரிப்பு பரவசச் சிலிர்ப்பு. அவனுக்காகத்தான்... பறந்து பறந்து சமையல் செய்கிறாள். புகையோடு மல்லுக்கட்டுகிறாள். அவனுக்கு வாளைக் கருவாடு என்றால் உயிர். குடியிருந்து தின்பான். அதிலும் வெங்காயம், மிளகாய் போட்டு, எண்ணெய் ஊற்றி, கருவாட்டுத் துண்டை வதக்கி வைத்து விட்டால் போதும்... சின்னப்பிள்ளை மாதிரி 'அய்ய்...' யென்று கும்மாளம் போடுவான். ரசித்து ரசித்து பாராட்டுவான்.

அவனிடம் குளிர்ச் சொல்லைக் கேட்கிற வேட்கையோடு, ரொம்பப் பக்குவமாய்... கண்ணும் கருத்துமாய்ச் சமையலை முடித்த கையோடு, மஞ்சளைப் பூசிக் குளித்து முடித்தாள். ஈரக்கூந்தலைத் தளரப் போட்டிருந்தாள்.

என்னமோ... இன்றைக்கு அவள் ரொம்பக் கனிந்து நெகிழ்ந்திருந்தாள். புருஷனை எப்படிப் பாராட்ட,

எப்படிச் சீராட்ட என்கிற மனத்தத்தளிப்பு உள்ளுக்குள் ஓடிச் சிலிர்க்கிற பரவசம்.

இருட்டின பிறகுதான் வந்து சேர்ந்தான். வேகவேகமாய் வந்தான். பரபரப்பாக இருந்தான்.

"எங்கே பொறப்புட்டாச்சு?"

"ட்யூபைக் கொண்டு போய்ச் சேக்கணும்லே?"

"சாப்ட்டுக்கிடுறீகளா?"

"ம்..."

அவசர அவசரமாய்க் கால் கையைக் கழுவிவிட்டு வட்டிலின் முன் நிமிர்ந்தான். பரபரவென்று அள்ளி விழுங்கினான்... யோசனை பூராவும் எங்கோ...

அவன் முகத்தையே பார்த்தாள்.

பரவச வார்த்தைகள் 'அய்ய்... வாளைக் கருவாடா? ரொம்ப மணமாயிருக்கே...' என்கிற குழந்தைத்தனமான சந்தோஷச் சொற்கள்...

எதுவும் வரவேயில்லை. சிந்தாமணிக்கு என்னவோ போலிருந்தது. குமரேசனையே அள்ளி விழுங்கியது அவளது பார்வை. "என்ன... வாளைக் கருவாடு எப்படியிருக்கு?" மெள்ள கிசுகிசுத்தாள். இப்படிக் கேட்பதே புதுசு. கேட்கவேண்டியதே நேராது. அவனே சொல்வான். கேட்க நேர்ந்ததில் அவளுள் ஒரு கூச்சம்... வெட்கத்தை விட்டுக் கேட்டது போலிருந்தது

"ம்... ம் இருக்கு" என்று ஏதோ ஞாபகத்தில் சொன்னதுபோல பற்றில்லாமல் சொன்னான். சட்டென்று, டியூப் சுருளை எப்படிக் கொண்டுபோய் சேர்ப்பது என்பதுபற்றி மளமளவென்று பேச ஆரம்பித்து விட்டான்.

சிந்தாமணிக்குள் பகீர் என்றது. இப்போதும் அடுப்புப் புகைக்குள் அவஸ்தைப்படுகிற உணர்வு. கண்ணோரத்தில் நீர்க்கசிவு...

'என்னாச்சு, இந்த ஆளுக்கு? எங்க போனாரு அந்த ஆளு? 'தாழிச்ச வாடை ஆளைத் தூக்குது' என்று பௌர்ணமி நிலாச் சந்தோஷமாய்... குழந்தைக் குதூகலமாய்ச் சொல்ற அந்த ஆளு... எங்கே?'

சாப்பிட்டுக் கைகழுவிவிட்டு புறப்பட்ட குமரேசனைக் குழந்தைகள் மறித்தனர்.

''அய்யா, கதை சொல்லுங்கய்யா.''

''கதையா? தலைக்கு மேலே வேலை கெடக்கு... உங்க அம்மா கதை போடுவா...''

சொன்ன சொல் உதட்டில் இருக்கும் போதே, ஆள் வெளியே போயாகிவிட்டது. பிள்ளைகளுக்கும் வியப்பான ஏமாற்றம். மலங்க மலங்க விழித்ததுகள். அம்மாவைப் பார்த்ததுகள்.

அவர்களின் விளையாட்டுப் பிள்ளையாக இருந்த அய்யாவைக் காணாமல், அதுகளின் தவிப்பு.

தன் பெண் ராஜியும் சீக்கிரத்திலேயே சடங்காயிடுவாள் என்கிற உண்மை தந்த மாற்றத்தில், லௌகீகம் தெரிந்த... அக்கறையுள்ள ஆளாகிவிட்ட குமரேசன், பௌர்ணமிக் குளிர்ச்சியைத் தொலைத்து விட்டானா? மனுச ஈரத்தையும், குளிர்ச் சிரிப்பையும் மறந்து விட்ட எந்திர மனுசனாகிவிட்டானா?

சிந்தாமணிக்குள் பீறிட்டிக் கொண்டிருந்த மகிழ்ச்சியையும் பரவசத்தையும், ஊமைச் சோகமாக நிறம் மாற்றிக் கொண்டிருந்தது வாழ்க்கை. □

---

1993, பிப்ரவரி — ஆனந்தவிகடன்

# 8. முக்காலும் காலுமாய்...

வேணும் வேணும் என்று பூவனத்தின் மனம் ஏங்க, கைகள் மட்டும் குறுக்கே விழுந்து தடுத்தன. கைகளை பொருட்படுத்தாமல் அவன் ஆவேசமாக அள்ளி... அணைத்து... ஆக்கிரமித்துக் கொண்டிருந்தான்.

உணர்ச்சிகளின் வெறியாட்டம்; உக்ரமமான அலைகளின் தழுவல்கள். அவள் தேகமெல்லாம் சூடேறி நெகிழ்ந்துபோய்த் துவள... மனமெல்லாம் ததும்பித் தவிக்க... அவள் திணறினாள். திணறல். இன்பமான திணறல்... மூச்சுமுட்டிய திணறல்... மயக்க மூட்டிய திணறல்.

கதவைத் தட்டுகிற கூரடிச் சத்தம்...

உடம்பெல்லாம் எரிச்சல் பற்றி எரிய, புருஷனை உதறித்தள்ளி விட்டு எழுந்தாள்...

...நிஜமாகவே எழுந்து விட்டாள். திடுக்கிட்டுப் போய்ப் பார்த்தாள்.

புருஷனைக் காணோம். சற்றுத்தள்ளி மகள் ராஜி தான் படுத்திருந்தாள். சூழ்ந்த வெறுமை சுள்ளென்று சுட்டது. மனசின் சூன்யம் கண்களோரத்தில் துளிகளாக வியர்க்க... கனவின் உஷ்ணம் தேகமெல்லாம் தகித்தது. தாபத்திலும் சோகத்திலும் மனசு அவிந்தது.

நிஜமாகவே கதவு தட்டப் படுகிற சத்தம். இது கனா அல்ல... நிஜம். கதவை ஓரவிழியால் பார்த்தாள். பார்வையில் அம்புபட்ட கிரௌஞ்ச பட்சியின் வேதனை... விரக்தி... அசிரத்தை.

''யம்மா...வ்'' என்ற அழைப்புக் குரல்.

எழுந்து கொண்டாள். கதவைத் திறந்தாள்.

''என்னம்மா... வெள்ளனத்துலேயே ஒறங்கிட்டீ களா?''

''ஆமப்பா...'' உணர்ச்சிகளை கசியவிட்டு விடக் கூடாதே என்கிற ஜாக்கிரதை யுணர்வில் வார்த்தைச் சிக்கனம்.

''இன்னிக்கு பொங்கல் சாட்டப் போறாக. எல்லாரை யும் கோவிலுக்கு வரச் சொன்னாக. அதான்... வீடு வீடா சொல்லிக்கிட்டு வாரேம்மா''

''சரிப்பா''

போய்விட்டான்.

''ஐயாவை சீக்கிரமா வரச்சொல்லுங்கம்மா'' என்று போன வருஷம் இதே நாவிதன் சொல்லிவிட்டுப் போனான். அந்த வார்த்தையை நாசூக்காக தவிர்த்து விட்டுப் போகிறான். மனசறிந்த நாகரீகம்.

அந்தத் தவிர்ப்பு, ஒரு முழுச்சோகமாக நெஞ்சுக்குள் தாக்குகிறது. இழப்பின் பரிமாணம் கனத்துடன் அழுத்து கிறது.

வெடித்துச் சிதறுகிற அழுகையோடு கதவைச் சாத்தினாள்.

ஏதேதோ நினைவுகள் துண்டு துண்டாக, சம்பந்தா சம்பந்த மில்லாமல் நினைவுகள்... ஒன்றின் குறுக்காக ஒன்றாக நினைவுகள்...

அவர்... அவரது அன்பு... நெஞ்சைத் தொடுகிற எத்தனையோ அவரது நிகழ்ச்சிகள்... அவரது நேர்த்திகள்,

அவர் இருக்கிற வரைக்கும் அவரை நிம்மதியா இருக்க நான் விடலை... எந்நேரமும் கொத்திப்

புடுங்கினேன்... குதறியெடுத்தேன். நாறப் பொழப்பா வைச்சுக்கிட்டேன்.

ஓம்மாலே என்ன கண்டேன் ஏது கண்டேன்னு எந்நேரமும் அவரைத் தாளிச்சு எடுத்தேன். அத்தனைக்கும் பொறுமைதான். ஒரு நாளாச்சும் 'சீ கழுத'ன்னு சீறியிருப் பாரா? ம்ஹூம்... அதே சிரிப்பு... அச்சுப்பிறழாத அந்தச் சிரிப்புதான். 'இருக்குறப்ப புரிஞ்சுக்கிட மாட்டே என்னோட அருமையை...'ன்னு ரகசியத்தை பொதிஞ்சு வைச்ச பூடகமான சிரிப்பு.

பாயில் வந்து உட்கார்ந்தவளுக்கு கனா நினைவுக்கு வந்தது. உடம்பெல்லாம் உஷ்ணத்தின் பரவல். காய்ச்சல் கண்டதைப் போல ஒரு தகிப்பு. மனசுக்குள் ஒரு சூன்யத் தாக்குதல்.

தூக்கம் தூரமாயிற்று. மனசுக்குள் மருகி மருகி வருகிற நினைவுகள். இமை மூடிப் படுத்தாலும் எட்டிப் பார்க்க விடாமல் உறக்கத்தைத் துரத்தியடிக்கிற எண்ணங் கள்... காட்சிகள்... கற்பனைகள். உடம்பு தகிக்கிறது.

செப்புப் பானையில் இருந்த பச்சைத் தண்ணீரை யள்ளி மேலுக்குக் குளித்தாள். கண்களில் பொங்கிவருகிற உஷ்ணக் கண்ணீரோடு குளித்து முடித்து, அதே சேலையை உடுத்திக் கொண்டாள்.

படுத்துக் கொண்டாள், போனவருஷம் பொங்கல் சாட்டியது ஞாபகத்திற்கு வந்தது. அன்று—

இவருதான் கட்டாயமாக சினிமா போடணும்னு ஒத்தைக்கால்லெ நின்னார். அதுக்காக மடக்கு வரியா பத்துரூபாய் மேற்கொண்டு போட்டு முடித்தார்கள்.

பட்டிக்காடா பட்டணமா படம் போட்டார். அடேயப்பா...அன்னிக்கு இந்த ஊரில் கொஞ்ச ஜனங்களா! சுத்துப்பட்டி பத்து ஊரு ஜனங்களும் வந்து சேர்ந்துட்டா

களே... உக்காரக்கூட இடமில்லியே... ஊரே திணறித் தவிச்சதே...

இவரு என்னமாய் ஓடியலைஞ்சார்... உள்ளுக்குள் பெருமிதத்தில் பொங்கி வழிந்தேனே... ஆனாலும், "ஊரு ஊருன்னு இப்படி ஓடியலைஞ்சு நமக்கென்ன ஆகப் போகுது?" என்று கோபித்துக் கொள்ளத்தானே செய்தேன்.

அதுக்கும் அதே சிரிப்புதான்! பூடகமான சிரிப்பு... எதையோ பொதிஞ்சு வைச்ச சிரிப்பு.

இந்த வருஷம், 'சினிமாபோடணும்'னு சொல்ல யாரு இருக்காக?

போனவருஷப் பொங்கலுக்கு ஆசை ஆசையாக அவரு எடுத்துக் கொடுத்த நைலக்ஸ் சேலை சாயம் போய்... அதோ கொடியில் கிடக்கு. அதை யாரு கட்ட? எடுத்துத் தந்த மனுசர், உடுத்த விடாத படிக்குப் போய்ச் சேர்ந்துட்டாரே...

மகளுக்கு மஞ்சள்லே பச்சைப் பூவிரிஞ்ச பாலியஸ்டர் துணியிலே 3½ மீட்டர் வாங்கிக்கிட்டு வந்து, என்னே சந்தோஷமா காட்டுனாரு... "இது மட்டும் நூத்தியஞ்சு ரூவா" என்று முகமெல்லாம் பெருமையா பூரிக்கச் சொன்னாரு.

அந்நேரமாச்சும் இந்தப் பாதகத்தி வாயிலேயிருந்து நல்லவார்த்தை நாலு வந்துச்சா? இல்லே.

"பொட்டைக் கழுதைக்கெல்லாம்... இம்புட்டு ஓசத்தி துணி எதுக்கு? சீட்டித்துணி போதாது? துட்டை துட்டுன்னு நினைக்காம... இப்படிக் கரியாக்கிட்டு வந்து நிக்கீகளே... நீங்கள்லாம் ஒரு ஆம்பளை தானா?"

பூவை எதிர் பார்த்த அவர், கத்தி மாதிரி வார்த்தைகளை எறிந்த போது கூட, அவரு முகம் சுருங்க வில்லை. அதே சிரிப்பு...

"போம்மா... ஒனக்கென்ன தெரியும்... இருக்கட்டும் இருக்கட்டும்" என்ற மழுப்பலோடு சிரிப்பு.

"ஆமா! இவருக்கு மட்டுந்தான் எல்லாம் தெரிஞ்ச மாதிரி" என்று ஒரு நொடிப்பு நொடித்து, முகத்தைக் கோணியது... நேற்றுபோல இருக்கிறது, ஒரு வருஷம் மாயமாகிப் போச்சு.

நெசந்தான்... அவருக்கு ஏதோ தெரிஞ்சிருக்கு. அதான்... நாளா இருந்து செய்யவேண்டியதை நாழிகையிலே செஞ்சிருக்காரு. இந்தப் பாவி முண்டைக்கு இது தெரியாமப் போச்சே. தெரிஞ்சிருந்தா... அவரை அப்படியா 'வெடுக், வெடுக்'குன்னு பேசியிருப்பேன்? கொத்தியா பிடுங்கியிருப்பேன்?

குளிர்ந்த வார்த்தை பேசியிருப்பேனே... சிரிச்ச முகத்தைக் காட்டியிருப்பேனே... கனிஞ்ச பார்வை பார்த்திருப்பேனே... இந்தப் பாதகத்திக்கு இது தெரியாமப் போச்சே... எப்பப் பாத்தாலும் நாகப்பாம்பா கொத்திக் கொத்திப் பிடுங்குனேனே... என்னோட பிடுங்கல் பொறுக்கமாட்டாமத்தான்... என்னை இப்படியாக் கிட்டு... அவரு போய்ச் சேர்ந்துட்டாரோ... ஐயோ!

நினைக்க நினைக்க அவளுக்கு அழுகை பொத்துக் கொண்டு வந்தது. கண்கள் குத்தலெடுத்தது. கதறி அழுதால்... அக்கம் பக்கம் எட்டிப் பார்க்கும். அடக்க அடக்க உணர்ச்சிகள் உள்ளுக்குள் குமைந்து குமைந்து பொங்கித் திமிறியது. வெடித்து விடுவதைப் போல நெஞ்சு விம்மியது.

அழுக்குச் சேலையை மூடிக்கொண்டு ஒருக்கழித்துப் படுத்திருந்த ராஜியைப் பார்த்தாள். தோளுக்கு வந்துவிட்டபிள்ளை. நெடு நெடுன்னு வளர்த்தி, சட்டையை முட்டிக்கொண்டு ரெண்டு முடிச்சு. தாவணி போடணும்

பாவாடை தாவணிக்கு எம்புட்டுக் குறைச்சுப் பாத்தாலும் அம்பது ரூபா ஆகும். சின்னப் பயலுக்கு டவுஷர் சட்டைக்கு முப்பது ரூபா ஆகும். பொங்கல் சாட்டிவிட்டால்...வீட்டுக்கு 40 ரூபா தலைக்கட்டுவரி போடுவாக. கோயில் காரியம், குடுக்காமப் போனா, குத்தம் வந்து சேரும். அதுவும் குடுத்தாகணும்.

இம்புட்டு ரூபாக்கு எங்குட்டுப் போவேன்? யாரு கிட்டே கேப்பேன்? கூலி வேலை பாத்து கஞ்சி குடிக்குற இந்த முண்டச்சி (விதவை)யை நம்பி யாரு கடன் கொடுப்பாக...?

நேரம் கெட்ட நேரமாயிருக்கு. மார்கழியிலே பெய்யிற மழை பெய்யலை. கெணத்துகள்லே தண்ணி வரட்டிழுப்பு. இருக்குற தண்ணியை இறைக்குறதுக்கும் கரண்டுல்லே. மொளகாச்செடி காயும் பூவுமாயிருக்கு. களை வெட்டு வேலைக முடிஞ்சுபோச்சு. பழம் பொறுக்குற வேலை இன்னும் வரலை. பொம்பளைகளுக்கு ஒரு வேலை ஜோலியில்லே.

மழை ஒழுங்கா பேய்ஞ்சு, கம்மாய்க்காடு நெறைஞ்சிருந்தா... வயக்காடுக வெளைஞ்சுருக்கும். கதிரறுப்பு வேலையாச்சும் நடக்கும். அதுவும் இல்லை.

கொத்துவேலை கெடைக்காம, வீட்டுக்கும் வழிக்குமாய் வெறும் நடை நடந்துக்கிட்டு... கூறை நிழல்லே பேன் பாத்துக்கிட்டு இருக்குற இந்த நேரத்துலே, கஞ்சி குடிக்குறதே பெரும்பாடு. இதுலே இப்புட்டுச் செலவு வந்து சேர்ந்துருக்கு. என்ன செய்றது?

என்ன சந்தோஷத்துலே கோயில் திருவிழா கொண்டாட? என்ன குதூகலத்துலே புதுசு கட்டி, பலகாரம் சுட்டு, ஊர்மெய்க்க அலையுறது?

அப்படி நினைச்சி ஒதுங்கிடவும் முடியாதே... சந்தோஷமோ சங்கடமோ... ஊர் வழமொறைக்கு ஒத்துப்

போகணுமே... நாலுபேரைப்போல நாமும் இருந்தாகணுமே... இல்லேன்னா... சுத்தியுள்ள பொட்டச்சிக கைகொட்டிச் சிரிச்சிருவாளுகளே...

சரி... நூத்தியம்பது ரூபாயாச்சும் வேணுமே. அம்புட்டுக்கு இப்ப எங்க போறது?

பூவனத்துக்கு கண்ணைக்கட்டி இருட்டுக்குள் விட்ட மாதிரியிருந்தது. நிற்கவும் முடியவில்லை. நடக்கவும் பாதை தெரியவில்லை.

போனவருஷம் இந்தக் கவலையை இவள் அறியவேயில்லை. இதைச் சமாளிச்சு மல்லுக்கட்ட ஒரு மனுசர் இருந்தார். இந்த வருஷம்?

அடப்பாவிப்பய தெய்வமே, உனக்கு நா என்ன கொறை வைச்சேன்? என்னை எதுக்கு இப்படி கோலமழிச்சு கொடுமைப்படுத்திட்டே?

அவளுக்குள் நினைவுகள் 'நா முந்தி, நீ முந்தி' என்று ஓடிப்பிடித்து விளையாட, தூக்கம் கண்ணில் ஒட்டவில்லை. எங்கோ கோழி பீதியுடன் 'கேர், கேர்' ரென்று கத்துகிற சத்தம். கூளம் தின்னுகிற காளைமாட்டின் கழுத்துமணியின் அசைவுச்சத்தம், ஆற்றோரப் பனந்தோப்பில் அடைந்திருக்கிற மயில்கள், எதையோ பார்த்து மிரண்டுபோய் கரகரத்த குரலில் கதறுகிற சத்தம். சுவர்க்கோழியன் 'ங் ங் ங் ஙீ' என்ற இரைச்சல்.

கவலைகளும் திகைப்புகளுமாய் மருகி மருகி மனசு அழுகை அடங்கிய குழந்தையைப் போல அப்படியே உறங்கிப் போய்விட்டது.

காலையில் கண் விழித்த பூவனத்தின் முகத்தில் ஊர்ன் உல்லாசம் மோதியது.

அடுத்த செவ்வாய் கோவில் திருவிழாவாம். வீட்டுக்கு 45 ரூபாய் வரியாம். திருநெல்வேலி கரகாட்டக்காரி வருகி

றாளாம். புல்வாய்ப்பட்டி கணேசன் மேளம். விளாத்தி குளம் வில்லடி. டெக் சினிமா போடுகிற பொறுப்பு ஒரு இளவட்டம் கையில், அவனால் வசூல் பண்ண முடிந்தால், சினிமா. இல்லேன்னா இல்லையாம்.

ஊரெல்லாம் திருவிழாப் பேச்சு. சேலை துணி மணிகள் பேச்சு. சொந்தபந்தத்துக்கு வரச்சொல்லி கடித அழைப்புகள். புதுசா மகளைக் கட்டிக் கொடுத்த வீடு களில, மருமகனுக்கு என்ன மாதிரியான வேட்டி சட்டை எடுப்பது என்பது பற்றிய பேச்சுகள்...

ஒவ்வொரு முகத்திலும் திருவிழா தீபங்கள் சுடர் விட்டுப் பிரகாசித்தன. பூவனம் முகம் மட்டும் வெட்டுப் பட்ட பூங்கொடியாக வாடிக்கிடந்தது. என்ன செய்றது, ஏது செய்றது என்ற கவலை மனசை அரித்துக் கொண்டி ருந்தது.

பூவனம் ஒரு யோசனையோடு அக்காவீட்டுக்குப் போனாள். மச்சானிடமாச்சும் கடன் கேட்டுப் பார்க் கலாம்.

இப்ப இப்பவெல்லாம்... அக்கா புருஷன் பார்வை சரியில்லை. ஒரு தினுசாக இருக்கிறது. கொழுந்தியாளை அன்போட பார்த்த பழைய பார்வை மாதிரியில்லே. உரியை பாக்கிற கள்ளப்பூனை மாதிரி... ஒரு விதமான பார்வை.

இவுககிட்டே கேக்குறது இழிவுதான். அவளுக்கு சுத்தமாக சம்மதமில்லை.

என்ன செய்வது? இவர்களை விட்டால் வேறு சொந்தபந்தம் கிடையாதே... வேற நாதியில்லே...

தெருவை அடைத்துக் கொண்டு வருகிற எருமைகளை விட்டு விலகி, மடத்துவாசலில் உட்கார்ந்திருக்கிற இளவட்டங்களுக்கு மறுபக்கமாய் முகம்திருப்பி, டீக்கடை

அரட்டைக் கூட்டத்தைக் கடந்து... அக்கா வீட்டுக்குள் நுழைந்தாள்.

மச்சான்தான் திண்ணைத் தாழ்வாரத்தில் உட்கார்ந்து வெற்றிலை போட்டுக் கொண்டிருந்தார். அக்கா மகள் தண்ணீர் சுமந்துகொண்டிருந்தாள். பூவனம் தாழ்வார நிழலோரம் ரொம்ப ஒதுங்கி— ஒடுக்கமாய்— நின்றாள்.

''என்ன பூவனம், அக்காளைப் பார்க்க வந்தியா?''

'ஆமா' என்று தலையாட்டிய அவள், ஏறிட்டுப் பார்க்கவில்லை. ஆனாலும் மச்சானின் பார்வை மேனியெங்கும் ஊர்வதை உணர்ந்தாள். உள்ளுக்குள் கூசினாள். தலைநிமிராமல் பேசினாள்.

''அவா... குட்டிகளுக்கு கொழை ஒடிக்கப் போயிருக்கா...''

''நா... உங்ககிட்டேதான் ஒரு விஷயமா வந்தேன்''

''என்ன பூவனம், சொல்லு''

''பொங்கச் சாட்டியிருக்காக''

''ஆமா...''

''எனக்கு வேலையுமில்லே ஜோலியுமில்லே. கைக்கும் மெய்க்கும் காசில்லே. புள்ளைகளுக்காச்சும் ரெண்டு 'புதுசு' எடுத்துக் குடுக்கணும்''

''ஆமா பூவனம். எனக்கும் அதுதான் கவலையாயிருக்கு. எங்க வீட்டுக்கும் எப்படி கொறைச்சுப் பாத்தாலும் ஐநூறு ரூவா ஆகும்.''

''நீங்க எப்படியாச்சும் கடன்கிடன் வாங்குவீக''

''முடியலே. சங்கரன் கோயில் கமிஷன் கடைக்காரங்க மழை போற போக்கைப் பாத்துட்டு, கடன் இல்லேன்னு

கையை விரிச்சிட்டாக. மொளகாச்செடிக்கு ஒரம் போடக்கூட வழி தெரியலே. இந்த நெலையிலே இந்தச் செலவு. என்ன செய்றதுன்னு ஒன்னும் வெளங்கலே... ஒரே முழிப்பாட்டமாயிருக்கு"

''நீங்கள் ஆம்பளை. நாலு எடத்துலே முட்டி மோதி, எங்கனாச்சும் கடன் வாங்குருவீக. நீங்க வாங்குறப்ப... எனக்கும் சேத்து வாங்கிட்டீகன்னா...''

மௌனம் கால் நீட்டிப் படுத்துக் கிடந்தது. மச்சானிடமிருந்து பேச்சு மூச்சே வரவில்லை. ஒரு பெரு மூச்சு விடுகிற சப்தம் மட்டும். அந்தப் பெருமூச்சின் சத்தத்தில் எத்தனையோ உணர்ச்சிகள்... ஏதேதோ செய்திகள்... மொழியில்லாத மனச் சபலங்கள்.

மனசுக்குள் மருண்டாள்.

பூவனம் மெல்ல நிமிர்ந்தாள். அவனது கண்கள் இவளது புஜத்தில் நங்கூரமிட்டிருந்தது. அசைவற்ற அந்தப் பார்வையில் ஆயிரமாய் மன அசைவுகள். நெளியும் புழுக்கள்.

மருட்சி நிஜமாயிற்று. படபடக்கும் மனசை கட்டுப்படுத்திக் கொண்டாள். இயல்பாய் இருக்க முயன்றாள்.

''என்ன மச்சா, பேச்சுமூச்சையே காணலே''

''சாணி வுழுந்தா மண்ணு ஒட்டும். ஒத்தாசைக்குப் பதிலா ஒரு பரயோசனம் இருக்கும். ஒனக்கு நா உதவி செய்ஞ்சா... எனக்கு என்ன பலன்?''

அவளுக்குள் நறுக்கென்று முள் தைத்தது. தெருவில் நிர்வாணமாய் நிறுத்தப்பட்ட அவமான உணர்ச்சி அவளை வதைத்தது. மனசுக்குள் ரத்தம் வடிய... கண்ணுக்குள் குத்தலெடுத்தது.

"அவுக இருந்தா... நா வந்து இப்படி நிக்கவா செய் வேன்? அக்கா வீடு தவிர வேற யாருகிட்டே ஆதரவு தேடிப் போக முடியும்?"

"சரி சரி... கண்ணைக் கசக்காதே. சவடால் சங்கரன் கிட்டே கொஞ்ச ரூவா கேட்டிருந்தேன். இன்னிக்குத் தாரேன்னான். அதை வேணு மின்னா — ஒனக்குத்தாரேன். சாயங்காலமா நீ புல்லுக்கு வருவேயில்லே? நம்ம தெக்குக் கிணத்துப்பக்கமா வா. ரூவா தாரேன். என்ன சரிதானே?"

அதிர்வோடு நிமிர்ந்து பார்த்தாள். மச்சான் முகத்தை தீர்க்கமாய்ப் பார்த்தாள். குத்துண்ட பறவை யின் வேதனை அவள் கண்ணில். தலையசைத்துவிட்டு நகர்ந்து விட்டாள்.

பூவனம் மனசுக்குள் முள்வனம்...

பணம் தர்றதுன்னா அக்கா மூலமா தரவேண்டியது தானே...? தெக்குப் புஞ்சைக்கு வரச்சொல்றாரே? எதுக்கு அங்க? சாணி வுழுந்தா மண்ணு ஒட்டணும்னாரே... அப்படி மண்ணு ஒட்டுறதுக்கா?

மாட்டுக்காரன் கிட்டே விலைபேசி முடிச்சு, பணத் தையும் மாட்டையும் கை மாத்திவிடுகிற தரகன், நாப்பது ஐம்பது தரகு வாங்குவான். இவரு சவடால் சங்கரன் கிட்டே பணம் வாங்கித் தர்றதுக்கு என்ன தரகு கேக்குறாரு? என் உடம்பையா? என்னோட மானம் மரியாதையையா? ச்சே!

பூவனத்துக்கு உடம்பெல்லாம் பற்றியெரிந்தது. ஏதோ அசிங்கத்தை முழுங்கி விட்டதைப் போல மன செல்லாம் குமட்டியது. காறித் துப்பினாள். யார் மீதோ விழ வேண்டிய எச்சில், தெருப்புழுதியில் விழுந்தது.

அந்த மனுசர் இருந்தா... எனக்கு இந்தக் கேவலம் வருமா? நாந்தான் இப்படிப் போய் நிப்பேனா? இவரு

தான் இப்படிக் கேப்பாரா? அந்த ஒழக்கரிசி ஜீவன் இல்லாததாலே... என் தரம் எவ்வளவு தாழ்ந்து போயிருச்சு?

முன் எப்போதும் இல்லாத பிரம்மாண்டமாய் புருஷன் அவளுக்குள் எழுந்தான். இழப்பின் கன பரிமாணம் அவள் நெஞ்சை உறுத்தியது.

மனசுக்குள் நினைவுகளின் கோரத்தாண்டவங்கள். மனத்தெருவை புழுதிக்காடாக்குகிற மூர்த்தண்ய விளையாட்டுகள்.

எருமைமாட்டுக்கு பசும் புல்லையள்ளிப் போட்டுக் கொண்டிருந்த ராஜி "எங்கம்மா போய்ட்டே?" என்றாள். அவசரப்பட்டு உணர்ச்சிகளை உள்ளடக்க பிரயத்தனப்பட்டாள், பூவனம்.

"பெரியம்மை வீட்டுக்குப் போயிருந்தேன்"

"ஏம்மா... ஒரு மாதிரியா யிருக்கே?"

"எனக்கு கொள்ளையா வந்துருக்கு? ஒன்னுமில்லே. நீ கஞ்சியைக்குடி" என்று எரிந்து விழுந்தாள், அம்மாவைப் புதிதாக- புதிராகப்- பார்த்தாள், ராஜி.

அரவமில்லாமல் நான்கு நாட்கள் ஓடிவிட்டன. சனிக்கிழமை வந்து விட்டது. வர்ற செவ்வாய், கோயில் திருவிழா.

நாள் நெருங்க நெருங்க பூவனத்துக்குள் பதைப்பு.

கோயிலுக்கு வெள்ளையடித்து சாயக்கோடுகள் போட்டு விட்டார்கள். ஊர் முழுக்க புத்தம் புதிய உற்சாகத்தில் திளைத்துக் கொண்டிருந்தது. வருஷம் முச்சூடும் வாட்டுகிற வருத்தங்களை— வாழ்க்கைச் சுமைகளை— தாங்குகிற மனோ வீர்யத்தை இந்த ஒரு உல்லாசத்தில்தான் சேகரிப்பதாலோ... என்னவோ...

ஜனங்கள் கண்மண் தெரியாத ஆவேசத்தில் பரபரத்துத் திரிந்தனர்.

பூவனம் துணிமணிக்காக- கோயில் வரிக்காக- எங்கெங்கோ அலைந்தாள். அங்கு இங்கு என்று முட்டிப் பார்த்தாள். எந்த இடத்திலும் சல்லிக்காசு பெயரவில்லை. நேரம் அப்படி. கண்ணு முழி பிதுங்குகிற கோடைநேரம்.

போட்டிருந்த ஏலச்சீட்டை யாச்சும் எடுத்துவிடலாம் என்று ஆனமட்டும் முயற்சித்தாள். போட்டி கடுமை. பலிக்கவில்லை. முட்டிய இடமெல்லாம் ஏமாற்றமும் வேதனையுமே பதிலாகக் கிடைத்தது. மனசு அலுத்துப் போய்விட்டது

ராஜியையும் முத்துவையும் பார்க்கப் பார்க்க மனசு ஏங்கித் தவித்தது. ஊர்முழுக்க பிள்ளைகளெல்லாம் புதுச் சட்டையும் புதுப்பாவாடையுமாய் ஓடித்திரிய... நான் பெத்த பூச்செண்டுக மட்டும் கசக்கி உடுத்துன பழந் துணியோட கொறைக் கோலமா நிக்குமே... அதுக மனசு என்ன பாடுபடும்? ஊரே என்னைப் பாத்து கை கொட்டிச் சிரிச்சிருமே...

என்ன செய்றது? நினைக்க நினைக்க இருட்டிக் கொண்டு வந்தது.

தனிமையில் புழுங்கிப் புழுங்கி அழுதாள். அழுகையில் பொழுதெல்லாம் கரைந்தாள். தெக்குக் கிணத்துப் புஞ்சைக்கு வரச்சொன்ன மச்சானை நினைக்க நினைக்க மனசு கொதித்தது.

எவ்வளவு லேசா நெனைச்சுட்டாரு? வான்னா வர்ற தேவடியான்னு எம்புட்டு எளக்காரமா நெனைச் சுட்டாரு? நா அந்தமாதிரி பல்லையிளிக்குற பலவற் றையா? சரியான சாதிமான்தான்னு

மச்சானைப்பற்றி அக்காளிடம் சொல்லிவிட்டால்... என்ன. அவர்களுக்குள் சண்டை சச்சரவு வருமோ?

வந்தா... வரட்டுமே. அப்பத்தானே அவருக்கும் நெஞ்சுலே பயம் இருக்கும்? பாக்குற பார்வையிலே சுத்தம் வரும்? சொல்லிட வேண்டியது தான்,

அக்காளைத் தேடி வீட்டுக்குப் போனாள்.

வாசலில் தேங்கினாள். தயங்கினாள். மச்சான் குரல் கேட்கிறது. ஏதோ சகஜமாய்— சந்தோஷமாய்- பேசிக் கொண்டிருக்கின்றனர்.

இவளால் உள்ளே தலைகாட்டவும் முடியவில்லை. திரும்பிட போகவும் மனமில்லை. திகைத்தாள், பூவனம்.

''...இந்தா... இதெல்லாம் ஒம்புள்ளைகளுக்கு துணிகள். டெய்லர் கிட்டே தைக்கக்குடுத்துரு. இது ஒனக்குச் சேலை. இது சட்டைக்கு துணி.''

''நீங்க... உங்களுக்கு எடுக்கலியா?''

''ஜனதா வேட்டிக்கும் துண்டுக்கும் சொல்லியிருக் கேன். போதும்''

''இது யாருக்கு?''

''இது ஒந் தங்கச்சி புள்ளைகளுக்கு. இதை நீயே போய் பூவனத்து கையிலே குடுத்துரு''

''ஏன், நீங்களே கொண்டு குடுத்துர வேண்டியது தானே?''

''ப்ள்ச்சூ... நீயே குடுத்துரு''

''ஏன்? உங்களுக் கென்ன?''

''என்னை அவா தப்பா நெனைக்குறா''

''தப்பா? எப்படி தப்பா?''

''நமக்கு புஞ்சையிருக்கு. சில சமயம் வேலைக்கு ஆள் கிடைக்காம திண்டாடித் தெருவுலே திரியுதோம். அவ...

யாரு புஞ்சைக்கோ கூலி வேலைக்குப் போறா. அது நம்ம புஞ்சைக்கு வரலாமில்லியா? வந்தா நமக்கு எம்புட்டுப் பிரயோஜனமாயிருக்கும்?''

''ம்... நெஜந்தான்''

''அவளுக்கும் நம்மை விட்டா வேற யார் இருக்காக? இந்தச் சின்னவயசுலே தாலியறுத்துட்டு நிக்குற அவளைப் பாக்குறப்போ... நமக்கும் சங்கடமாயிருக்கு. இதை யெல்லாம் நெனைச்சு... அன்னிக்கு ஒன்னாலே என்ன பிரயோஜனம்னு கேட்டேன். அதை அவா வேற அர்த்தத் துலே எடுத்துக்கிட்டா போலிருக்கு. முகம் வாடிப் போய் போய்ட்டா, எனக்கே சங்கடமாப் போச்சு. ம்ச்ள்ச் சூ! எதுக்கு வம்பு? நீயே போய் ஒந்தங்கச்சி கிட்டே இதைக் குடுத்துரு. கோயில் வரியும் குடுத் தாச்சுன்னு சொல்லிரு''

பூவனத்துக்குள் ஆயிரம் சாட்டையடிகள் சுளீரிட்டன.

வந்த சுவடு தெரியாமல் திரும்பிவிட்டாள். மனசுக் குள் வெட்கமும் வேதனையும் பிடுங்கித் தின்றன.

வீடுவந்து சேர்ந்தாள். ராஜி எங்கே? தண்ணீர் எடுக்கப்போய் விட்டாளோ. அடுப்பங்கரைக்குள் வந்தாள். அடுப்பில் சோளக் கழி 'டிப், டிப், டிப்' பென்று சத்தமிட்டுக் கொண்டிருந்தது. துடுப்பை உள்ளே போட்டு மவித்தாள்.

மச்சானை நினைத்தாள். கோழிக்குஞ்சை கால்தவறி மிதித்து விட்டால் மனசுக்குள் ஒரு வேதனை வருமே... அந்த வேதனை பூவனத்துக்குள்.

நா ஒரு பாவி. சே! மச்சானை எம்புட்டு மட்டமா நெனைச்சுட்டேன்? தங்கமான மனுசரை தரகுகேக்குற வருன்னு நெனைச்சுட்டேனே... அவருக்குள்ளே இருந்து ருக்குற பாசத்தையும், கருணையையும், நல்ல எண்ணத் தையும் இந்தப் பாவி மனசு புரிஞ்சுக்கிடாமே இருந் துருச்சே...

அழுக்கு எம்மனசுலே தான் இருந்திருக்குமோ...

தன்னைத் தானே வைதுகொள்கிற மனப்புலம்பல். யோசனைகள்.

சட்டென்று யோசனைகள் ஓரிடத்தில் தேங்கித் திகைக்க... மனசுக்குள் ஒரு நெருடல்.

சரி... அக்காகிட்டே அவரு பேசிக்கிட்டிருந்தது நெஜந்தான். அவரோட பாசம், எரக்கம் எல்லாம் நெஜந் தான். ஆனா—

தெக்குப் புஞ்சைக்கு வரச் சொன்னாரே... அதுவும் நெஜந்தானே? பாக்குற பார்வையிலே ஒரு மோகம் இருந்துச்சே. கள்ளப்பூனைப் பார்வை பார்த்தாரே... அதுவும் நெஜந்தானே...

அக்காகிட்டே பேசுனது நெஜமா... பார்வையிலே பேசுனது நெஜமா? ரெண்டுமே நெஜந்தானோ? ஒன்னுக் குள்ளே ஒன்னு பின்னிக்கிடக்குதோ? பாசமும் மோகமும் முக்காலும் காலுமாய் சேர்ந்து கலந்து கிடக்குதோ...

அவளுக்குப் புரியவில்லை. ஏதோ புரிவது போலவு மிருந்தது.

நினைவுகளின் அயற்சியில் சோர்ந்துபோய், புருஷனை நினைத்துப் புலம்பி அழுதுவங்கினாள், பூவனம்.

---

(சிறுகதைக் களஞ்சியம், 1984.)

# 9. நல்ல சாவு

முற்றம் தெளிக்க கதவைத் திறந்து வெளியே வந்த லட்சுமி, திண்ணையில் உட்கார்ந்திருந்த புருஷனைப் பார்த்தாள். பிடரியில் விழுந்து முதுகில் பரந்துகிடந்த முடியை அள்ளிக்கோதி முடிந்துகொண்டிருந்தான் சின்னமாரி. அவனது வாய் வெத்தலையை 'சக் சக்' கென்று மென்று கொண்டிருந்தது.

''சரியாய் விடியறதுக்குள்ளே முழிச்சாச்சா?''

''ஆமா, அதான்... பே(ய்)க் கூச்சல் போட்டுக்கிட்டு தீப்பெட்டியாபீஸ் பஸ் வருதே. ஊரையே உசுப்பிவுட்டு டுதே.''

''இன்னிக்கு செங்கச்சூளைக்கு வேலைக்குத்தானே? லீவா?''

''போவணுமாத்தா, நேத்தே மண்ணைக் கொழைச்சு விரிச்சுக் காயப் போட்டிருக்கு. இன்னிக்குப் போய்...அச்சு அச்சாய் அடுக்கணும். நாளை மறுநாள் சூளை பத்தவச்சாகணும். வெள்ளனத்துலேயே பெறப்படணுமாத்தா... தாமசப்படுத்திராதே.''

''என்னாலே தாமசம் இருக்காதய்யா. நீரு இப்ப வேணும்னாலும் கிளம்பும், கஞ்சி வச்சித்தாரேன்... சரி... சம்பளம் என்னிக்கு?''

''வர்ற சனிக்கிழமை''

முகம் தெரியாத இருட்டு இன்னும் திகைத்து நின்று கொண்டிருக்கிறது. பால் சொஸைட்டிக்கு பீச்சி ஊற்று வதற்காக பத்திக்கொண்டு செல்லப்படுகிற எருமைமாடு களின் அரவம்.

முற்றத்தில் சாணிப்பாலை தெளித்தாள். குப்பை யைக் கூட்டி கூடையில் அள்ளி வைத்துவிட்டு, ஒரு பிடி விறகுடன் வீட்டுக்குள் நுழைந்தாள்.

பெஞ்சாதியின் முந்தானையைப் பிடித்துக் கொண்டு ஊர்ந்த சின்னமாரியின் பார்வை... சைக்கிள் மணிச்சத்தம் கேட்டு, விருட்டென்று திரும்பியது. வைகறை இருட்டில் சரியாகத் தெரியவில்லை. முகம் தெரியவில்லை. பார் வையைக் கூர்மைப்படுத்தினான்.

''ஐயா... நிக்கிறது யாருய்யா?''

''ஆட்டக்காரரு சின்னமாரி வீடு... இதுதானே?''

''ஆமா சாமி... நீங்க எந்த ஊரு?''

''ஆமர் நாடு. ராத்திரியிலே ஒரு பாட்டி 'போய்ச்' சேர்ந்திருச்சு. சாயங்காலந்தான் தூக்க முடியும்.''

''அப்படியா? அதுக்கு நா என்ன செய்யணும்?''

''சாகுறதுக்கு முந்தியே அந்தப் பாட்டி 'சின்னமாரி ஆட்டம் வச்சுத்தான் என்னைக் குழியிலே போடணும்'னு வாய்க்கு வாய் சொல்லிக்கிட்டு இருந்துச்சாம். அதான் கூப்பிட வந்துருக்கேன்.''

சின்னமாரிக்குள் நட்சத்திர ஜொலிப்பாக பூச்சிதறல், குளிர்ச்சியான மல்லிகைச் சிதறல், உடம்பெல்லாம் புல் லரிக்கிறது மனசெல்லாம் பெருமிதத் ததும்பல். சாகப் போகிற வங்கிழடுகூட இவனது பாட்டின் அருமையை- ஆட்டத்தின் அழகை அறிந்திருக்கிறது. பிரியப்பட்டிருக் கிறது. சூரிய வெளிச்சமாய் இவனது புகழ் எங்கெல்லாம் பாய்ந்து பரவியிருக்கிறது!

இவனுள் சகல நரம்புகளிலும் ரத்தமாய்ப் பாய்ந்து பரவுகிற பரவச உணர்ச்சிகள்... விம்மிப் பொங்குகிற பூரிப்பலைகள்.

ஆடுகளை மேய்த்துக்கொண்டு கருவேலங்காட்டில் கானல் நீராக அலைந்து கொண்டிருந்த சின்னமாரிக்கு, பாட்டும் ஆட்டமும் வாங்கித் தந்திருக்கிற பிரபல்யம்... மதிப்பு... மரியாதை.

''ஆடுகளைத் தன் போக்குலே மேயவிட்டுட்டு ஓடைக் காட்லே உட்காந்து பாட்டு படிச்சிட்டிருந்தியாடா? ராஸ்க்கல். ஏண்டா பருத்திக் காட்டுலே ஆட்டைவிட்டு மேய்ச்சே?''

''இல்லை சாமி. நா வுடலை''

''அழிமானம் ஆகிக்கிடக்கே... நா பொய்யா சொல்லுறேன்?''

''இந்த ஊர்லே நா மட்டுமா ஆடு மேய்ச்சேன்? மத்தவுக ஆடுக மேய்ஞ்சிருக்குமோ, என்னமோ...''

''சின்னசாதிப்பய... திமிரைப்பாரு. வாய்க்கு வாயா எதுத்தா பேசுறே?''

கற்றையாய் தலைமயிரைப் பற்றிக்கொண்டு கன்னத்திலும், முதுகிலும் தீச்சூடுகளாய் விழுந்த அடிகள், சிறுவனாக இருந்த சின்னமாரிக்கு உடம்பில் விழுந்த அடிகளை விட, சாதி குறித்த இழிவுச் சொற்கள்தான் முள் முள்ளாகத் தைத்தது, உள் மனசில் சுரீரிடுகிற வலி, அநீதியான அவமானப் பிடுங்கல்... ஆறுதல் சொல்லக் கூட நாதியில்லை. தாழ்ந்த சாதிக்காரனை நாலு வார்த்தை வசவாக வையத்தான் செய்வாக, அதுலே என்ன தப்பு? என்ற சமூக அங்கீகாரம் வேறு!

இம்மாதிரி வலிகள் நிறையத் தடவைகள். அவமான அனுபவங்கள், உள்மனசில் தீக்கோலைச் சொருகித் துடிக்கச் செய்த கொடுமைகள்...

இவையே அவனுள். ஒரு வலிமையை- போர்க் குணத்தை- முறுக்கேற்றியது, காட்டுப்பாடல்களை பாடிக் கொண்டிருந்தவன் ஒப்பாரிப் பாடல்களை மனசுக்குள் தொகுத்தான். மனனம் செய்தான். மாற்றினான். நாக்குக்கேற்ற மாதிரி திருத்தி சிக்கெடுத்தான்.

பிறப்பால் வந்து விழுந்த அவமானச் சேற்றைக் கழுவ வேண்டும். மனுசனுக்குரிய மரியாதையைப் பெற்றாக வேண்டும்.

அதுக்கு வழி...?...?...?

கல்யாணத்திற்காக ஆடுகளை விற்றபோது லட்சுமி மட்டும் வந்து சேரவில்லை. சடங்காபேளம் வாங்கினான். ஒரு பழைய நாதஸ்வரம். மூங்கில் குச்சிகளைக் கீறி, நனையப் போட்டு, வளைத்து, 'குதிரை' செய்து கொண்டான்.

சின்னமாரி 'செட்' அமைந்துவிட்டது. செங்கல்சூளையில் சக உழைப்பாளிகளில் ஆறுபேரைத் தேர்வு செய்தான். ஆட்டம் சொல்லிக் கொடுத்தான். இப்போது—

முப்பது மைல் சுற்றளவில்-சுற்றுப்பட்டுக் கிராமத்திலெல்லாம் இவனது பாட்டும் ஆட்டமும் பிரபல்யம், எங்கே இழவு விழுந்தாலும்... முதல் 'தாக்கல்' இவனுக்குத்தான். முன்னுத்தைம்பது ரூபாய், வாத்தியார் சின்னமாரிக்கு தனியாக ஐம்பது. சாகப் போகிற கிழவிகூட இந்த மனிதனையல்ல எழுத்து வாசனையில்லாத கலைஞனை ரசிக்கிறாள். கடைசி ஆசைக்குரிய உன்னதம் தருகிறாள்.

கைப்பும் கசப்புமான நினைவுகள் கசிந்து உதட்டில் புன்னகையாக வந்து நின்றது. வெற்றிப் பெருமிதத்தில் மனசு விம்மியது.

''சரி... நாம போவமா?''

சைக்கிளில் வந்தவர் சத்தம் கேட்டு எழுந்தான்.

''நாங்க எப்ப வரணும்?''

''இப்பவே''

''சரி... நீங்க போய்க்கிட்டே இருங்க. செங்கச் சூளைக்கு 'தாக்கல்' சொல்லிட்டு, ஆட்களைக் கூட்டிக் கிட்டு பின்னாடி வந்துக்கிட்டேயிருக்கேன்''

''அதெல்லாம் முடியாது. உங்களைக் கையோடு கூட்டிட்டு வரச் சொல்லி ஊர்ப் பெரியாளுக கண்டிசனா கச் சொல்லி விட்டாக.''

''அப்படியா... அப்ப சரி... திண்ணையிலேயே உட்காருங்க''

''இங்க வாய்யா'' வீட்டிற்குள்ளிருந்து லட்சுமியின் குரல்.

''என்ன லட்சுமி'' உள்ளே நுழைந்தான்.

''என்ன லெட்சுமி?'' என்று கம்மிய சத்தத்தில் சீறி னான். நாழி காணம் வறுத்துவிடலாம் அவள் முகத்தில். அவ்வ்...வளவு கடுகடுப்பு, அவன் அதிர்ந்து போய்விட வில்லை. புரிந்து கொண்டான், என்ன சொல்லப் போகி றாள் என்று யூகித்துக் கொண்டான். பதிலுக்கான வார்த் தைகளை மனசுக்குள் தேடினான்.

''ஆட்டத்துக்கு வரல்லேன்னு பட்டுன்னு சொல்லிட வேண்டியதுதானே? ஆளு தேடி வந்தவுடனேயே மனசு கும்மாளம் போடுதோ? டாக்டரு சொன்னதை அயத்துட் டியா?''

''டாக்டரு சொல்றபடியெல்லாம் நடந்துற முடியுமா, நம்மாலே? முழுசா ரெஸ்ட் எடுங்கிறாரு. செங்கச்சூளைக் குப் போய் வேலை செய்யலேன்னா, கஞ்சி குடிச்சிட முடியுமா?''

"அது நமக்கு விதிச்ச கொடுமை. செங்கச் சூளையிலே வெந்தா(ல்)த் தான் உலை கொதிக்கும்ங்கிற நிலைமை, அதுக்கும் மேலே 'ஆட்டத்துக்குப்' போவணுமா?"

"லட்சுமி, சூளையிலே பாக்குற வேலையில வவுறு தான் நனையும்... ஆட்டத்துக்குப் போனா... கேப்பாக... உருகி உருகி ரசிப்பாக...நா என்ன சாதிங்கிறதை மறந்துட்டு எம்புட்டுப் பாராட்டுவாக...?"

"அதுக்கு ஆசைப்பட்டா... டாக்டரு சொன்னது என்ன ஆகுறது? ஒன்று கிடக்க ஒன்று ஆயிப்போச்சுன்னா... எங்க கதி? நம்ம புள்ளைகளும் நானும் உன்னை நம்பித்தானே? சுவரை வச்சித்தானே சித்திரம்?"

"அப்படியெல்லாம் ஒன்னும் ஆயிடாது லட்சுமி வீணா மனசைப் போட்டு அலையவிடாதே."

"அப்ப... போகத்தான் போறீயா?"

மனம் முறிந்தவளாய் அவள் கேட்ட கேள்வி. உடைந்துபோன மனசைக் காட்டுகிற நீர் தளும்புகிற கண்கள். கலங்கி நிறம்மாறித் தெரிந்த கனிவான அவள் முகம்.

இளகுகிற மனசை இறுகிப் பிடித்துக் கொண்டான். கற்றையாய் தலை மயிரைப் பற்றிக் கொண்டு அடித்த அடிகள்... இப்போது மனசுக்குள் வலியாய்- வடுவாய்- ரத்தம் கன்றிய தடமாய்...

'சின்னசாதிப் பயலுக்கு திமிரைப்பாரு...' நெஞ்சுக்குள் இறங்கிய தீக்கோல்... இத்தனை வருடம் கழித்தும் கரீரிடுகிற அவமானம். அவன் செங்கற்சூளை நோக்கி நடந்தான். ஆட்களைக் கூப்பிட... தாக்கல் சொல்ல...

ஆமர் நாட்டை சமீபித்தபோது—

"இந்தா... மோட்டார் பம்ப்ஷெட்லே தண்ணி ஓடுது" தாங்க மூஞ்சி முகரையைக் கழுவி... ஆட்டத்துக்கு ஏத்த

துணிமணி மாத்திட்டு வாரோம். நீங்க முன்னாடி போங்க"

சின்னமாரி சைக்கிள்காரரை அனுப்பி வைத்தான். வேட்டி பனியனைக் கழற்றினான். மழுங்கச் சிரைத்த முகத்தில் வர்ணத்திட்டுகளை வைத்தான். துணிப் பையி லிருந்து ஒரு சேலையை உருவினான், பச்சையில் தங்கக் கோடு ஓடுகிற சின்னாளம் பட்டுச்சேலை, ஜாக்கெட் துணி, காலுக்குச் சலங்கை, கால்விரலில் மிஞ்சி, காதுவளர்த்த கிழவிகள் போடுகிற பாம்படம். அட்டைப் பாம்படம் தான், காதுமடலின் மேல்பக்கம் தொங்குகிற சிறு தொங் கட்டான். கழுத்துக்கு தாலியாய் கறுப்புக்கயிறு. கயிறின் முன்பக்கத்தில் சுற்றுக் கொண்ட பூச்சரம்.

டங்கா மேளக்காரன் திருப்தியோடு நையாண்டி செய்தான். ''ஆங்க்... அசல் மாரியம்மாளே தான்''

ஜாக்கெட்டுக்குள் குப்புற வைத்த தேங்காய்ச் சிரட்டை நெஞ்சுத் தோலை அழுத்துகிறது. காந்துகிறது. அதைக் கையால் அசைத்து... வாகாய் அமைத்துக் கொண்டான்.

மற்றவர்களுக்கு அவ்வளவாக மாற்றமில்லை. வழக்க மான கைலி பனியனுக்குப் பதிலாக வெள்ள வேட்டி, முழுக்கைச் சட்டை. குதிரைக்காரனுக்கு மட்டும் கறுப்புக் கண்ணாடி.

கால்களில் கட்டிய சலங்கைகள் 'கலீர்' கலீரென கூட்டுச் சங்கீதம் எழுப்ப ஊருக்குள் நுழைவதற்கு முன்—

புழுதிப் புயலைக் கிளப்பிக் கொண்டு உற்சாக வெள்ளமாய் ஆவல் பெருக்கோடு ஓடி வந்து வரவேற்ற சிறுவர் சிறுமிகளின் கும்மாளப் பட்டாளம்.

''ஹய்யா...! குருதை வருதுடோய் ரெண்டு காலுக் குருதை"

"இங்க பாருடா... வெத்தலை போட்டு பீடி குடிக்கிற பொம்பளை"

"டங்கா மேளம் டோய்"

குழந்தைகளின் கும்மாளப் படையெடுப்பு குதூகலச் சூறாவளியாய் சுற்றிச் சூழ... இழவு வீட்டுப் பந்தலை நெருங்கிய சின்னமாரியை ஆவலோடு காத்து நின்ற பெரிய வர்கள், வாலிபர்கள் சகலரும் அன்புடன் வரவேற்றனர். அடர்த்தியாய் உபசரித்தனர்.

"வாய்யா... மாரி... வா"

"இப்பத்தான் வாரியா?"

"தாக்கல் எந்நேரம் வந்து சேர்ந்துச்சு? விடியுறதுக்கு முந்தியே வந்திருச் சில்லே?"

எல்லா விசாரிப்புகளுக்கும்- அன்புக்கும்- பாம்படம் ஆடிக்குலுங்க கலைக் கம்பீரமாய் புன்னகை செய்தான். உடைத்துக் கொடுத்த உபசாரச் சோடா வரவேற்பை ஏற்றுக் கொண்டான்.

அவனுள்... ஆடு மேய்ந்து அடிவாங்கிய அவமானம். சாதி குறித்த வசவுச் சொல் கேட்ட வலி, முகம் காட்டி விட்டு மறைந்தன.

இழவு வீட்டிற்குள்ளிருந்து அம்புகளாக வெளிப்பட்ட பெண்கள் வியப்பும் வேடிக்கையுமாய் துளைக்கிற பார் வைகள். 'இது... ஆணா, பெண்ணா' என்று அடங்கிய குரலில் நடக்கிற சர்ச்சைகள்.

சின்னமாரி உள்ளுக்குள் கிளுகிளுத்துக் கொண்டான். நழுவுகிற டவுசரைக் கூட பிடிக்கிற நிதானமில்லாமல் தேனீக்களாய் மொய்க்கிற சிறுவர் பட்டாளத்தை அதட்டி நகாத்தி ஆட்டத்திற்குத் தேவையான 'வட்டம்' அமைத் துத் தந்த பெரியவர் குதூகலப் பரப்பாய்ச் சொன்னார்.

''மாரி... இன்னிக்கு ஆட்டமும் பாட்டும் தூள் பரத்திரனுமப்பா... தண்ணியெல்லாம் ரெடியாயிருக்கு...''

''அதுக்கென்ன. செய்ஞ்சிருவோம். அறிஞ்ச கலையை அவுத்துக் காட்டுறதுலே என்ன ஒளிவு மறைவு சாமி? தண்ணியோ மத்த உபச்சாரமோ... அதெல்லாம் உங்க மனசைப் பொறுத்தது.''

''அப்ப... துவக்கிருங்க. ஜனங்க ரொம்ப ஆசையா எதிர்பார்த்துக் கிடக்காக''

''ஆட்டும் சாமி. பெரிய லோகம் போயிருக்கிற பெரியம்மாவுக்கு...'' பொம்பளைமக்க உண்டா?''

''ஒரு பெண்ணு தான். தூரத்துலே கட்டிக்குடுத்துருக்கு அவ வர்றதுக்காகத் தான் காத்துக்கிட்டிருக்கோம்.''

''அது வேற... அப்படியா சாமி?''

ஆட்டம் துவங்கப் போகிற அறிகுறியை உணர்ந்த வாலிபர்களிடையே ஆனந்தப் பரபரப்பு, உத்வேகமூட்டு கிற உற்சாகச் சத்தங்கள், பந்தலுக்கடியில் அடர்த்தியாக அடைந்து கிடக்கும் பெண்களிடையே ஆவல் கலந்த திகைப்பு, பெரியவர்களிடம் கூட, தம் வயதுக்குரிய நிதானம் தப்பிய ஒரு வாலிபப் பரபரப்பு, குதூகலம், சகல இதயங்களையும் பூக்களின் மென்மையாய்- நிலவின் ஒளியாய்- குழந்தையின் கனிவாய் கண நேரத்தில் மாற்றி விட்டது.

சின்னமாரிக்குள் நட்சத்திர இனுக்குகளாய் பூச்சிதறல்கள். பெருமிதத் ததும்பல். பூப்பூவாய் ஒளிச்சிதறல்.

குழுவினரைப் பார்த்தான், பார்வையைச் சொடுக் கினான். கால் சலங்கைகளைக் குலுக்கினான்.

ஊரையே கதிகலங்கடிக்கிற பயங்கரச் சத்தமாய் டங்காமேளம் 'டமார்... டமா'ரென்று அதிர... உறுமியும்

இறுகலான சோகமாக குமுற... நாதஸ்வரத்தில் இனிமைப் படையெடுப்பு, குதிரைக்குள் நுழைந்திருந்தவன் லகானைப் பிடித்த நிலையில் குறுக்கும் நெடுக்குமாய் பாய்ந்து சீற, சின்னமாரி நீண்டதலைமுடியை விரித்துப் போட்டு மாரடித்துக் கொண்டே சுற்றிச் சுற்றி ஆட... டங்கா மேளக்காரனும், உறுமிக்காரனும் கனத்த சுமை யோடு லயம் தப்பாமல் அடித்துக் கொண்டே வட்ட மடித்து ஆடினர்.

கரிசல் காட்டு கருத்தமேனிகளில் வரி, வரியாய் வியர்வைக் கோடுகள். வியர்வைகளில் பட்டுத்தெறிக்கிற காலை வெயில், வெறிபிடித்த வேகச் சுழற்சியாக ஆட்டம். இமைதட்ட விடாத சூறாவளியின் அசுர நளினம். கால்க ளும், கைகளும், மொத்த மேனிகளும் சேர்ந்து இயங்குகிற வேகத்தில்-தாளம் தப்பாத மின்னல் பளிச்சிடலில்-அசந்து போய்... அடித்து வைத்த ஈரமண்ணாக கட்டுண்டு நிற்கிற கிராமத்து ஜனங்கள்.

உறுமியின் இறுகலான குமுறல் சகல உள் மனசுகளின் துக்க உணர்வுகளை கிளறிவிட, டங்கா மேளத்தின் பெரு முழக்கம் கல் மனசுகளின் ஆழத்திலும் அதிர, நாதஸ்வர அணிமையும் சலங்கைகளின் ஓங்காரச் சிரிப்புகளும் ஒன்றாகி, கலந்து சங்கமித்து...

மனிதப் புயலாக ஆட்டம்.

சட்டென்று சின்னமாரி நிற்க-குழுவினரும் நின்றனர். பூமியே ஒரு குலுங்கு குலுங்கி நின்றுபோய்விட்ட மாதிரி ஒரு பிரமை.

ஆடியவர்களின் துணிமணிகள் ''தொப்பு தொப்'' பென்று நனைந்து விட்டன, சாரைப் பாம்புச் சீறல்களாய் ஆயாசப் பெருமூச்சுகள், பெருமித ஒளி கண்களில் துள்ள... நிமிர்ந்து பார்த்தான், சின்னமாரி.

கூட்டம் ரொம்ப வீங்கிப் போயிருந்தது. புளிச்சிப்ப மாய் அடைந்து நின்ற அடர்த்தியாய் மக்கள்.

மிதித்து ஆடச் சம்மதித்த மண்மாதாவைத் தொட்டுக் கும்பிட்டான் சின்னமாரி. குழுவினர் தரையை வணங்கியதோடு, வாத்தியாரின் காலையும் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டனர்.

கூட்டத்திலிருந்து உற்சாகக் கூச்சல்கள், பாராட்டுப் பூமாலைகளாய் கூப்பாடுகள், ஒரு வாலிபன் ஆனந்தப் பரவசத்தில் தலைகால் தெரியாமல் கும்மாள மிட்டான், கூச்சலிட்டுப் பாராட்டினான், சொந்தச் செலவில் சோடாக்களை உடைத்துக் கொடுத்தான்.

''அடிங்க... நொறுக்குங்க... சபாஷ்'' என்று தொண்டை கிழியக் கத்தினான்.

ஆற்றுமணலாய் நெருக்கியடித்துக் கொண்டு நிற்கிற ஜனங்கள் கண்களில் பிரமிப்பு, ஜொலிப்பு லாகிரி மயக்கம். ஆவல் குமுறி நிற்கிற மௌன இறுக்கம்.

சகலத்தையும் களிதுள்ள நோக்கிய சின்னமாரிக்குள் நூறுநூறாய் மலர் மாலைகள்... மனிதனுக்குரிய மரியாதையைத்தான் கேட்டான். ஏங்கினான். ராஜாவுக்குரிய கலைமரியாதை கிடைத்திருக்கிறது. உருவமற்ற பாராட்டுக் கிரீடங்கள்.

திருப்தியோடு தொண்டையைச் செருமிக் கொண்டான். பாட்டெடுத்தான். சின்னமாரிதானா, இது? ஆகாயத்திலும் முட்டிமோதி சகல இதயங்களையும் நெகிழவைக்கிற ஓங்கிக் கதறும் குரல்.

''உருண்டை மலை உச்சியிலே...

உச்சியிலே... நா...

உளுந்தம் பயறு காய வச்சேன்...

நா

காய வச்சேன்... ஆ... வஹ்
உளுந்தம் பயறு இன்னும்
காயிலே... ஏய் ஆத்தா

என்னைப் பெத்த ஆத்தா...
உளுந்தம் பயறு காயறதுக்
குள்ளே...

உங்க வீட்டுலே சங்குச் சத்தம்
கேட்டுருச்சே...

ஆ...ங்...

வானத்தை நோக்கி கைகளை விரித்து உயர்த்தி முறையிடுகிற மாதிரி. உச்ச ஸ்தாயியில் எழுந்த ஒப்பாரி, துயரம் தாங்காமல் அதிர்ந்து நடுங்கியது. ஆ... ங்... என்ற நீட்டி முனங்கலுடன் புதிய புயல் வேகத்தில் சின்னமாரி மாரடித்துக் கொண்டே ஆட, டங்கா மேளம் கோடை இடியாக அலற, உறுமி இறுகிக் கதற... நாதஸ்வரம் ஒப்பாரி மெட்டையே இசைக்கண்ணீராக திருப்பி இசைக்க, குதிரை சீறிச் சாட...

மீண்டும் ஒரு புயலின் ஆர்ப்பரிப்பாய், ஆட்டம். தாளலயம் தப்பாத சூறாவளி சுழல் இயக்கம். மனிதர்களை அலற அடிக்கிற மின்னல்களின் சுழற்சியாட்டம்.

சட்டென சின்னமாரி நிற்க... குழுவினரும் ஸ்தம்பிக்க ...இறுகலாக வந்து நின்ற மௌனம், சோகத்தில் விம்மித் தவிக்கிற இதயங்களை அறுத்துக்கொண்டு மீண்டும் சின்னமாரியின் ஒப்பாரிக்குரல்.

''பாறைக் கணவாயாம்... பாழாய்ப்
போகிற
பாறைக் கணவாயாம்...

உங்க செல்ல மகளுக்கு இப்ப
பழனிமலை அடிவாரமாம்...
பழனிமலை அடிவாரத்துலே—

இப்ப உங்க தங்க மகளுக்கு
பட்டுப்போன வாழ்க்கையாம்

ஏய்... ஆத்தா, என்னைப்
பெத்த அம்மா...
பாயிலே கிடந்த ஒன்னைக்
கண்ணாலே

பார்க்கணும்னு பரிதவிச்
சேன்... பரிதவிச்சேன்...

அந்தப் பாதகச் சீமையிலே
துணைக்கு வர

பக்கத்தாரும் பஞ்சமாச்சே...
ஆ...ங்''

மீண்டும் துரிதகதியில் கழல் ஆட்டம். மேளச் சத்த முழக்கம். நாதஸ்வரப் படையெடுப்பு.

ஒன்பது மணிக்கு உயிர் பெற்ற ஆட்டம், இதோ... உச்சிவெயில் மண்டைகளைப் பிளக்கிறது. வியர்வை ஆறாகப் பெருகி வழிகிறது. எண்ணெய்ப் பீப்பாய்க்குள் முக்கியெடுத்த மாதிரி... கலைஞர்கள் பாட்டும் ஆட்டமும் நீள... ஜனங்கள் மேலும் மேலுமாய் மொய்க்க... தேன் குடித்த நரியாய் சின்னமாரியின் மனசு துள்ள...

ரெண்டு தடவை சாராயத் தண்ணி அடித்தாகி விட்டது. இடையில் உபச்சாரச் சோடாப் பரிசுகள் வேறு, நேரம் ஆக ஆக... ஆட்டமும் பாட்டமும் உச்சகட்ட

மடைய... சின்னமாரியின் முகத்தில் வாட்டம். களைப்பு, அறுத்துக் காயப்போட்ட பூங்கொடிகளாக குழுவினர் முகங்கள்.

சின்னமாரிக்குள் உள்ளுக்குள் அந்தரங்கமாய் அறுக்கிற அச்சம். மனசுக்குள் படபடப்பாய் எழுந்து அடங்குகிற பீதி உணர்ச்சி. கலைமன வீர்ய ஒழுங்கைச் சிதறடிக்கிற கிலி. இரண்டாவது தடவை சாராயம் குடிக்க உட்கார்கிற போது... தொண்டையைச் செருமி காறித் துப்பினான். தற்செயலாகத் திரும்பிப் பார்த்தான், துப்பிய சளியில் சிவப்பாக ரத்த முகம்.

டாக்டர் சொன்ன வார்த்தைகள்... கண்ணில் நீர் தளும்ப முகம் வாடிப்போய் நின்ற லட்சுமி. 'சுவரை நம்பித்தானே சித்திரம்.'

தலைவிரி கோலமாய் நெஞ்சில் அடித்துக் கொண்டு கதறியழுகிற லட்சுமியின் முகம் ஒரு மின்னலாய் பளிச்சிட்டு மறைய- மனசு கரிக்கட்டையாகிறது.

'ஒடம்புக்கு முடியலே சாமி' என்று சொல்லிவிட்டு உட்கார்ந்து விடலாமா? குழுவினரை மட்டும் ஆடச் சொல்லிவிட்டு ஓய்வு எடுக்கலாமா? பாட்டு இல்லாமல் வெறும் ஆட்டமா? இதயமில்லாத வெறும் உடம்பில் என்ன அழகு இருக்கும்?

வெல்லப்பாகில் விழுந்த ஈக்களாய் சொக்கிக் கிடக்கிற இந்த அப்புராணி ஜனங்களை ஏமாற்றவா? வெயிலைக் கூட பொருட்படுத்தாமல் சுடு புழுதியில் கால்மாற்றி கால் வைத்துக் கொண்டு ரசிக்கிற கிராமத்து மக்களை வஞ்சிக்கவா? ஒப்பாரிப் பாட்டின் மனசை அறுக்கிற சோகத்தில் விம்மிப் பொதும்புகிற இந்தப் பெண்களை ஏமாற்றவா?

இந்தக் கள்ளமற்ற கபடமற்ற ரசனை எத்தனை பூமாலைகளுக்குச் சமானம்! புகழ்க்கிரீடங்களுக்குச்

சமானம்! சாதியை சொல்லிப் பாய்ந்த வசவுக்கத்திகளை நினைத்துக் கொண்டான்.

சின்னமாரிக்குள்ளிருந்த கலை வேட்கை வெறிபிடித்த யானையாகத் திமிறியது. சாட்டையைச் சொடுக்கியது. முருக்கியது. 'உம்... ஆடு... பாடு... இன்னும். இன்னும்...'

நெஞ்செல்லாம் காய்ந்து உலர்ந்து போய் காந்தலெடுக்கிறது. தொண்டை வறண்டு போய் எரிகிறது. ஒரு பெரியவரை பக்கத்தில் அழைத்து, மெதுவாக விசாரித்தான்.

''காரியமெல்லாம் எப்ப முடியும்?''

''இப்ப ஆயிரும், இதோ... 'நீர் மாலை'க்குக் கிளம்புறாக, ஒரு மணி நேரத்துலே மயானக்கரைக்குப் போயிரலாம்''

''அப்படியா...''

அவனுள் சரியச் செய்கிற அயற்சி. இடுப்பைச் சுற்றி மென்று தின்கிற கடுப்பு, தொடைச் சதையெல்லாம் கொத்திப் பிடுங்குகிற வலி. உட்கார். உட்கார்' என்று கெஞ்சுகிற முழங்கால் உளைச்சல். சமாளிக்க முடியவிலலை, பல்லைக் கடித்துக் கொண்டான்.

வாலிபர்களின் ஆரவாரம். ஆனந்தக்கூச்சல். உத்வேகப் படுத்துகிற உற்சாக ஆர்ப்பரிப்பு, சுற்றிலும் பாராட்டாய் எழுகிற ரசிகக்குரல்...குரல்கள்...

''வறுத்த கடலை வந்து சேருமே...
வந்து சேருமே... ஏய் ஆத்தா...
நீ பெத்த மகளுக்கு

''வைகை யாத்துத் தண்ணி வருமே...
வாசலுக்கு

வைகையாத்துத் தண்ணி வருமே
என்னப் பெத்த அம்மா...
நீ போன சீமையிலே

வறுத்த கடலையுமில்லையே...
ஐயய்யோ...இனிமே

வைகையாத்துத்
தண்ணியில்லியே...

ஆ...ங்..."

விரிந்த கூந்தல் சுழன்றாட, பாம்படம் ஆட, மாரடித்துக் கொண்டே இவன் சுற்றிவர, இடிமுழக்க மாய் அதிர்கிற மேளம், உறுமியின் சீறல், நாதஸ்வரப் பின்பாட்டு. மீண்டும் சுழல்கள் புயலாய் ஆட்டம். பேய்த் தன வேகமாய்...

சட்டென்று சின்னமாரி நிற்க... சுற்றிலும் கனத்த இறுக்கம். ஆகாயத்தை நோக்கி அகலமாய் கைகளை உயர்த்தி சின்னமாரி ஒப்பாரியைப் பாடினான்.

"தெறிச்ச கடலை வந்து
சேருமே...

ஏய் அம்மா... வந்து சேருமே
கடலை வந்து சேருமே

தெக்காத்துத் தண்ணி வருமே
வீட்டுக்கு...

தண்ணி வருமே...
நீ போன சீமையிலே
ஓ அருமை மகளுக்கு

தெறிச்ச கடலை யாரு தருவா...
ஐயய்யோ... இனிமே...

தெக்காத்துத் தண்ணி யாரு
கொண்டு வருவா?...

ஆ...ங்''

பாட்டு முடிந்தவுடன் வழக்கம் போல் உயர்த்திய கரங்கள் நெஞ்சுக்கு நேராக இறங்கின, 'சடேர், சடேரெ'ன மார்பில் அடித்துக் கொண்டான் ஆடத்துவங்கி விடுவான் என்ற லய ஒழுக்கத்தில் குதிரையும் மற்றவர்களும் சிறி வட்டமடித்து ஆடத்துவங்கி விட்டனர்.

பார்த்தால்—

சின்னமாரி குத்துக்கால் வைத்து உட்கார்ந்து விட்டான். தலை தரையைப் பார்த்தது. அவனது காலடியில் குறுகலாக அவனது நிழல். நிழல் முழுவதும் ரத்தம். சிவப்பாக மின்னிப்பரவுகிற ரத்தத்தில் படிகிற புழுதி. விரிந்த கூந்தல் இருபுறமும் விரிந்து மூடிக்கொள்ள... மாறி மாறி ஓங்கரிக்கிறான். 'குபுக்'கென்று சீறிப்பாய்கிற ரத்தம். புழுதியை ஈரமாக்கிப்படர்கிற உயிர்.

அவனுக்குள் விழுகிற திரைகள். விலக்க விலக்க வந்து மூடிக்கொள்கிற திரைகள். மங்கலாய்த் தெரிகிற லட்சுமி முகம். பிள்ளைகள் முகம். அப்போதும் திருப்தியாக ஒரு நினைவு. 'மனுசனா... நோயாளியா... சீப்பட்டு சீரழிஞ்சு சாகலே. பாட்டுக்காரனா பாட்டுப் படிச்சுக்கிட்டே சாகப் போறேன்... எவனுக்கும் கிடைக்காத நல்ல சாவு. பாராட்டுற ஜனங்க சுத்தி நிக்க... மரியாதையோட சாகப்போறேன். கலைச்சாவு''

குழுவினர் கதறியழுக... மொத்த ஊரே அல்லோகல் லோலப்பட்டது. நேற்று கண்ணை மூடிய கிழவியை யாராலும் நினைக்க முடியவில்லை. சகல உயிர்களிலும் ஒரே துடிப்பு. தவிப்பு.

''சின்னமாரி பிரேதத்தை எப்படி அவன் ஊருக்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பது?'' □

# 10. இழப்பு

சுப்ரமணி இருக்கிறானே... அவன் ஒரு தனி ரகம். அப்படிப்பட்ட ஒருவனை இந்தக் காலத்தில் பார்ப்பது அரிது. நல்ல முழுத்த இளவட்டம். ஓடுகிற பாம்பைத் தாண்டுகிற பிராயம்.

துறுதுறுப்பானவன். நேனிகூட அவன் கால் தூசிக்குப் பெறாது ஓரிடத்தில் ஒய்ந்து உட்கார்ந்து இருக்க அவனை யாரும் பார்த்திருக்கவே முடியாது. எந்நேரமும் றெக்கை கட்டிக் கொண்டுதான் பறப்பான். அத்தனை சுறுசுறுப்பு. மின்னல்தான்... வேகச் சுழற்சியில்.

நாலு பேர் கூடுகிற பொதுக்காரியங்களிலும் அவன் தான் முதல் ஆள். ஊரில் நிறையப் பேருக்கு அவன் உதவிகள் தேவைப்படும். கல்யாண வீடுகளில் பந்தியார் வேர்க்க விறுவிறுக்க அவன் பரிமாறிக் கொண்டிருப்பான். பந்தல் போட்டுக் கொண்டிருந்தால் வருவான், பார்ப் பான், வேலைக்குள் ஊடுருவி, நிமிஷத்தில் முடித்து விட்டுப் போய்விடுவான்.

ஊரின் சகல காரியத்திலும் அவன் கைவரிசை இருக்கும்.

பத்து வரைக்கும் படித்தான். அப்புறம் சொந்த விவசாயம்தான். அவன் புஞ்சையை பராமரித்து வைத்தி ருக்கிற அழகே தனி. கவிதையைப் போல கச்சிதமாக இருக்கும்.

மரங்களின் வரிசையாகட்டும், பொழியின் வடிவ மாகட்டும், முள் அடைப்பாக இருக்கட்டும், வேலை எது

வானாலும் திருத்தமாக ஒழுங்காக கச்சிதமாக, அதுவே ஒரு அழகாக...

அவனுக்குத் தெரியாத வேலைகளே இருக்காது. அத்தனையும் அத்துப்படி. எந்தப் புது வேலையாக இருந்தாலும்... கூர்மையாக கவனிப்பான். நிமிஷத்தில் அதன் சூட்சுமத்தைப் பிடித்து விடுவான்.

ஊர்க் காரியத்திற்காகவே நியமிக்கப்பட்டவனைப் போல, ஓடி ஓடி வேலை செய்வான். பிறத்தியார் தோள்ச் சுமைகளையும் இழுத்துப் போட்டுக் கொண்டு இவன் மல்லுக்கட்டுவான். மாய்ந்து மாய்ந்து பாடுபடுவான்.

அவன் இல்லாவிட்டாலும், கிராமத்தில் ஒரு துரும்பு கூட அசையாது. இத்தனைக்கும் அவன் பிரதிபலன் எதிர் பார்க்க மாட்டான். தந்தாலும் வாங்க மாட்டான்.

இதோ... சைக்கிளை எடுத்துக் கொண்டு சிட்டாய்ப் பறக்கிறான். மூன்றாவது வீட்டில் பெண்பார்க்க வர இருப்பவர்களை அழைத்து வரத்தான்... இந்த ஓட்டம்.

அம்மாவும் திட்டித் திட்டிச் சலித்துப் போய் விட்டாள்: "ஏண்டா இப்படி ஊரான் வீட்டுக் காரியங் களுக்கு ஓடியலையுறே? ஒனக்கென்ன தலையெழுத்தா?"

"சும்மா இருக்கும்போதுதானே போறேன்? அதாலே... நம்ம வேலை ஒன்னும் நின்னு போகலியே?"

"அடுத்தவுகளுக்கு ஒழைக்கவா ஒன்னைப் பெத்து வளர்த்தேன்?"

"சும்மாயிருந்தா எலும்பெல்லாம் துருப்பிடிச்சுப் போகும்மா. அப்புறம் நம்ம வேலைகளைப் பார்க்கக்கூட ஒடம்பு வளையாது"

இவனது வெகுளித் தனமான பதிலில் அம்மா ரொம்ப எரிச்சல் பட்டாள். கண்கள் இடுங்கின. குலை சொதிக்க, பாம்பாய்ச் சீறினாள்.

"அடக் கூறுகெட்ட மூதி... ஒனக்கு அறிவே வராதா? எதுல சுத்துனாலும் ஆதாயத்தோட சுத்தணும்டா" அப்பத்தான்டா அடுத்தவன் மதிப்பான். இப்படி வெட்டி வேலையும் வீண்காரியமுமாய் சுத்திக்கிட்டுத் திரிஞ்சா... எவன் மதிப்பான்? எவன் ஒனக்குப் பொண்ணு குடுக்கப் போறான்?"

"இப்ப யாரு பொண்ணு கேட்டு அலையுறாக? அதான்... நீ அடிக்கடி சொல்லுவியே, மாலை பூத்து வந்தா... எல்லாம் தானா வந்து கை கூடும்னு"

"இப்படியும் ஒரு இளிச்ச வாய்ப்பய என் வவுத்துலேயா வந்து பொறக்கணும்' அடக் கடவுளே..."

அவளது அங்கலாய்ப்பையும் புலம்பலையும் கேட்டுக் கொண்டிருக்க... அங்கே அவன் இல்லை. ஊரைச் சுமக்க சிறகை விரித்துவிட்டான்.

தேவானைக்குக் கல்யாணம் நிச்சயமாகி விட்டது. வருகிற பதினைந்தாம் தேதி முகூர்த்தம். இன்னும் ஒன்பது நாள் கிடக்கிறது. அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. இருட்டுக்குள் விட்ட மாதிரி திகைப்பாக இருந்தது. வந்தார்கள். பார்த்தார்கள். பேசினார்கள். நிமிஷத்தில் நிச்சயம் பேசிவிட்டார்கள்.

இவளிடம் சம்மதம் கேட்கவில்லை. அபிப்ராயம் கேட்கவில்லை.

இவளாகவே வெலியப் போய்ச் சொல்ல முடியுமா? என்னத்தைச் சொல்ல...

அவள் சொல்லை எதிர்பார்க்காமல் கல்யாணக் காரியங்கள் எழுந்து ஓட ஆரம்பித்து விட்டது.

மைக் செட் பேசுவதற்கு சுப்ரமணிதான் போய்விட்டு வந்தான் அட்வான்ஸ் கொடுத்து விட்டான். அழைப்பிதழ் அச்சிட ஆலங்குளம் அச்சாபீஸுக்குப் போக

வேண்டும். சுப்ரமணிக்கு அவன் புஞ்சையில் தண்ணீர் பாய்ச்ச வேண்டியிருக்கிறது மதியக் கரண்டு முடித்து விட்டு ஆறுமணிக்கு மேல் அவன் தான் போகிறான்.

மேட்டர் அவனே போட்டு வைத்து விட்டான் கடவுள், யோகம், நட்சத்திரம் எல்லாம் அவனுக்கு ஒவ்வாது. 'அருஞ்சுனை காத்த அய்யனார் துணை' என்று போட வேண்டிய இடத்தில், 'அன்பும் பாசமுமே மனித அழகு' என்று எழுதி வைத்தான்.

''மண விழா அழைப்பிதழ்' என்றான். நாள், கிழமை இடம் மணமக்கள் பெயர்...

''இது எங்கள் வீட்டு விழா மட்டுமல்ல... உங்கள் வீட்டு விழாவும்தான். விழாவை மகிழ்ச்சிப் படுத்துங்கள். உங்கள் அன்பும், ஆசீர்வாதமுமே மணமக்களுக்கான வாழ்க்கைத் துணை. வாங்க... வாங்க...!''

என்று எழுதி கீழே பெற்றோர்கள் பெயர்களைக் குறித்தான். தேவானையின் அய்யா குமாரசாமி பார்த்து விட்டு முகத்தைச்சுளித்தார். கண்களில் மறுப்பு துருத்திக் கொண்டு நின்றது.

''இது நல்லால்லே... கல்யாணப்பத்திரிக்கை மாதிரித் தெரியலியே... என்னமோ மாநாட்டு நோட்டீஸ் கணக்கா இருக்கே?''

''சும்மாயிருங்க மாமா. இதான் நல்லாருக்கு. புதுப்பாணி...''

''எல்லாரும் அடிச்சமாதிரி நம்மளும் அடிச்சிட்டுப் போயிருவோமே... எதுக்கு இந்தத் தலைப்புரட்டு வேலையெல்லாம்?''

''என்ன ஏதுன்னு கேளாமலேயே, எல்லாரும் போற பாதையிலேயே நாமும் போறது கூறுகெட்ட வேலை

மாமா. செம்மறியாடும் நாமும் ஒன்னா? நாம, நம்ம ரூட்லே, நம்ம புத்தியோட போவோமே...?''

''சரி சரி... எதுக்கு நமக்குள்ளே வழக்கு? ஒம் மனம் போலவே செய்''

உள் வீட்டுக்குள்ளிருந்து சுப்ரமணியையே பார்த்துக் கொண்டிருந்தாள் தேவானை. பெரிதாய் மறுத்த அய்யா, சட்டென்று அவனிடம் பணிந்து போகவும்... இவளுக்கு சிரிப்பாய் பொத்துக் கொண்டு வந்தது. வாயில் சேலையை வைத்து பொத்திக் கொண்டாள்.

கல்யாணப் பட்டு, கம்மல் மூக்குத்தி வாங்கி வர... அய்யா குமாரசாமி ராஜபாளையம் புறப்பட்டார். அம்மாவும் சந்தோஷம் பொங்க, நல்ல சேலையை உடுத்திக் கொண்டு கிளம்பிவிட்டாள் வெள்ளிக்கிழமை நல்ல நாள் என்று அம்மாவுக்குத் திருப்தி.

சாயங்காலம் ஆறரை மணி இருக்கும். திடுதிடு வென்று யாரோ வீட்டிற்குள் நுழைகிற சத்தம். திடுக் கிட்டு எறிட்டாள் தேவானை. சுப்ரமணியைப் பார்த் ததும் வெட்கத்தில் கூசினாள். பதுங்கினாள். மனசுக்குள் ஒருவித படபடப்பு. பரபரப்பு.

''யார் இருக்கா? மாமா... மாமோய்''

இவள் தொண்டைக்குள் சத்தமாய் கிசுகிசுத்தாள்.

''ராசபாளையம் போயிருக்காக''

''சரி... கல்யாணப் பத்திரிக்கை மேட்டர் எழுதிக் குடுத்திருக்கேன். இருக்கும் எடுத்துட்டு வா''

மனசுக்குள் இனம் புரியாத பயம். பீதியற்ற பயம். நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக் கொண்டது.

''அட... அந்தப் பலகைமேலே இருக்கும். எடம்மா''

பொறுமையில்லாமல் அவனே வந்தான். துறுதுறு வென்று தேடினான். 'அதை இதை' புரட்டினான். எடுத்துக் கொண்டு புயலாய்ப் போய்விட்டான்.

அவன் போவதையே பார்த்துக் கொண்டிருந்தாள் தேவானை. கண்ணுமுழி ஆடவில்லை.

அன்றைக்கு சுப்ரமணி புஞ்சையில் களை வெட்டு. ஐந்து பெண்கள் களை வெட்டினர். இவன் ஓடி ஓடி வாய்க்காலைச் செதுக்கினான். மறுநாள் பாய்ச்ச வேண்டிய தண்ணீரை இன்றே பாய்ச்சிவிட வேண்டியது தான்.

நாளைக்கு ஏகமாய் வேலை கிடக்கிறது. ராஜ பாளையம் போகணும். கல்யாணச் சமையலுக்கான சாமான்கள் வாங்கணும். மணமக்களுக்கான ஜமுக்காள மும், தலையணையும் வாங்கணும்.

லிஸ்ட் எல்லாம் ரெடி, பணம்தான் வாங்கணும். நாளைக் காலை பஸ்ஸுக்குப் புறப்பட்டாக வேண்டும்.

மறுநாள் காலை. குளித்து முடித்து நல்ல வேட்டி சட்டையை மாட்டிக் கொண்டு ஓடி வந்தான். குமாரசாமி இல்லை. அத்தையும் இல்லை தேவானை மட்டும்தான் இருந்தாள்.

இவன் கட்டி வைத்திருந்த சாக்குச் சுருட்டை எடுத்துக் கொண்டான். அவனுக்குள் பரபரப்பு. பஸ்ஸுக்கு நேரமாகிவிட்ட அவசரம்.

கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் தேவானை இருப் பாள் என்று ஓர் நம்பிக்கை.

"ரூவா குடுத்துட்டுப் போனாரா, உங்க ஐயா?"

"ம்"

"பேசுனா... முத்து உதுந்துருமா? 'ம், ம்'ன்னு கோயில்மாடு கணக்கா தலையாட்டுறியே? சரி, ரூவா எம்புட்டு?"

"தெரியாது இந்தாங்க"

பொட்டலத்துடன் கை மட்டும் நீண்டது. உடம்பு முழுவதையும் சுவர் மறைவில் மறைத்துக் கொண்டு வளையல் குலுங்கும் கை மட்டும் நீளுவதைப் பார்த்தவுடன், 'பக்'கென்று சிரித்துவிட்டான்.

'எதுக்கு சிரிக்கிறான்' என்று புரியாமல் துணுக்குற்றுப் போன தேவானை விருட்டென்று முகத்தை வெளியே காட்டிப் பார்த்தாள்.

"மாயக்கை நீளுதே... பேயோ என்னமோன்னு பயந்துட்டேன். நல்ல வேளை... நீதானா?"

பொட்டலத்தை எடுத்துக்கொண்டு விறுவிறுவென்று போய்விட்டான். அவள் கூடுதலாய் தலையை நீட்டி எட்டிப் பார்த்தாள். அவன் முதுகு மின்னலாய் மறைந்து விட்டது.

அவன் சொன்னதை நினைத்துப் பார்த்தாள். சொன்னபோது அவன் முகம் இருந்த கோலமும் மனசுக்குள் வந்தது. விழுந்து விழுந்து சிரித்தாள், நினைக்க நினைக்க சிரிப்பு, சிரிக்க சிரிக்க சிரிப்பு. சுதந்திரமான சிரிப்பு... வயிறே புண்ணாகிவிட்டது.

அன்றைக்கு ராஜபாளைய வெயில் முழுவதும் சுப்ரமணி தலையில்தான். மதியச் சாப்பாடு கூட இல்லாமல் பகல் முழுக்க ஓடி ஓடி அலைந்தான். சரக்குகளை வாங்கி, தள்ளுவண்டியில் போட்டு பஸ் ஸ்டாண்டிற்குக் கொண்டு வந்து... இரண்டு மணி பஸ்ஸில் அவசர அவசரமாக ஏற்றினான்.

கடைசியாக கடலெண்ணெய் டின்னை விருட்டென்று தூக்கினான். பாதித் தூக்கிய நிலையில் கைபிடி வளையம் உருவிக் கொள்ள 'நச்'சென்று டின் கீழே விழுந்தது. அவனது கால் பெருவிரலில் தீப்பிடித்த மாதிரி சுரீரென்றது. விரலின் முன்பகுதி சிவப்பட்டது போல காயம் பட... ரத்தம் குபுகுபுவென்று தரையெல்லாம் நனைக்க...

நல்லவேளை, டின்னுக்குச் சேதம் இல்லை. இவன்தான் சேதமாகிவிட்டான். வலி உயிர் போயிற்று. எப்படியோ சரக்குகளை ஏற்றி முடித்து... ஊர் கொண்டு வந்து சேர்ப்பதற்குள்—

ஆத்தாடி அம்மாடி என்றாகிவிட்டது.

அவன் அம்மா கால்விரல் காயத்தைப் பார்த்துவிட்டு குலை பதறினாள். தேகமெல்லாம் நடுங்க தலையில் அடித்துக் கொண்டாள். அழுகையோடு கொதித்தாள்.

''அடப் பாவி... இப்படி ரத்தம் வடிச்சிக்கிட்டு நிக்குறீயே... அவுக வீட்டுக் கல்யாணத்துக்கு நீ எதுக்குடா இப்படி அலையுறே? ஏலேய்... ஏமாளிப் பயலே, இந்த மாதிரியா ரோஷம் கெட்டுப் போய் திரியறது? சூடு சுரணை வேண்டாமா? அறிவு வேண்டாமா?''

''எதுக்கும்மா புலம்புறே? இப்ப என்ன ஆகிப் போச்சு? ரெண்டு ஊசி போட்டா... நாலு நாள்லே புண்ணு ஆறிப் போயிடும். இதுக்கெதுக்கு இந்தக் கூச்சல் போடுறே?''

''போடா கிறுக்குப் பயலே... ஒன்னை மாதிரி இளிச்ச வாயன் இந்த ஊர் ஒலகத்துலே எவனாச்சும் இருப்பானாடா...? மானங் கெட்டவண்டா நீ''

சுப்ரமணிக்குள் சட்டென்ற ஒரு நிதானம். ஆழ்ந்த யோசனை.

அம்மாவின் பேச்சுக்குள் வேறு ஏதோ ரகசியம் முகம் காட்டுகிறது சொல்லாமல் சொல்லுகிறாள். திரை போட்டு பேசுகிறாள். பேசுகிற பேச்சுக்குள்ளேயே ஏதோ ஊமை ஜாடை செய்கிறாள் ஜாடையில் எதைக் காட்டுகிறாள்? எதை உணர்த்த முயல்கிறாள்?

மூளைக்குள் ஒரு வண்டு புகுந்து கொண்டு துளைக்கிறது. குடைகிறது. மனசு எங்கெங்கோ அலைகிறது. பரவுகிறது வியாபிக்கிறது. ஊஹூம், ஒரு இழவும் பிடிபட மறுக்கிறது.

முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு அழுது கரைகிற அம்மாவையே பார்த்துக் கொண்டிருந்தான். சுப்ரமணி மனசில் குழப்பம்.

தேவானை வீட்டில் கல்யாணக்களைகட்டத் தொடங்கிவிட்டது. புதுத்துணிமணிகள் நடமாட்டம். வீடு மராமத்து, சுவர் வெள்ளையடிப்பு, பந்தல்கள் ஊன்றுதல், மாவிலைத் தோரணம் கட்டுதல்.

வேலைகள் தூள் பறந்தது. சிறகு கட்டிக் கொண்டு பறந்தது. எல்லா வேலைகளிலும் சுப்ரமணியின் கை ரேகைகள். வியர்வைத் துளிகள். மன ஈடுபாடு.

அங்கும் இங்குமாய் தரையில் கால் பாவாமல் ஓடித் திரிகிற சுப்ரமணி. எங்குத் திரும்பினாலும் அவன் முகம். தொட்ட இடத்தில் எல்லாம் அவன் கை வண்ணங்கள்.

தேவானை அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

...அது நடந்து ரெண்டு மாசமிருக்கும். இவள் பாயில் படுத்துவிட்டாள். உறக்கத்தின் மடிக்குள் முகம் பதித்து, மனமும் மறைக்கிற ஒரு மயக்க நேரம்—

சுப்ரமணியின் அம்மா பேச்சுக் குரல் கேட்டது போலிருந்தது. இவளது அம்மாவுடன் வந்து 'குசு குசு' வென்று பேசிக் கொண்டிருந்தது போல ஒரு தோற்றம்.

முழுசாகக் கேட்க முடியாவிட்டாலும், ஒன்றிரண்டு வார்த்தைகள் தெறித்து வந்து காதில் விழுந்தன.

"'தேவானை' 'சுப்ரமணி' என்று பெயர்கள் பேச்சில் அடிபட... முழுக்க விழித்துக் கொண்டாள். கூர்மையானாள். மனசு கிடந்து தவித்தது. ஆவலில்பரபரத்தது. நெஞ்சு வெடித்து விடுவதைப்போல விம்மியது. சிறகடித்துப் பறக்க ஆசைப்பட்டது.

அப்புறம் ஒன்றுமே காதில் விழவில்லை. சுப்ரமணியின் அம்மா சத்தமில்லாமல் போய்விட்டாள் போலும்!

என்ன பேசிக் கொண்டார்கள்? அவளுக்குள் விதம் விதமாய் கற்பனைகள், கனவுகள்... சிறகடிப்புகள்...

தேவானையின் கல்யாணம் முடிந்து, மூன்று நாட்களாகிவிட்டன. இன்று அவள் புருஷன் ஊருக்கு-புகுந்த வீட்டுக்கு-புறப்பட வேண்டும். அதற்கான ஏற்பாடுகளை சுப்ரமணிதான் செய்து கொண்டிருந்தான்.

குமாரசாமி செயலற்றுப் போய் நின்றார். தேவானையின் அம்மா வாசலில் நின்று அழுது கொண்டிருந்தாள். இருவர் முகங்களிலும் விம்மி வெடிக்கிற சோகம் பிரிவுச் சோகம். பெற்று, வளர்த்து, சீராட்டி, ஆளாக்கி, கண் முன்னால் அணு அணுவாய் வளரப் பார்த்த அருமை மகளை நிரந்தரமாக இழக்கப் போகிறோமே என்கிற கலக்கம். 'வாழப் போகிறாள் மகள்' என்கிற மகிழ்ச்சியை விழுங்கிவிட்டு மேலெழும்பி நிற்கிற வேதனை உணர்ச்சிகள்.

தேவானையும் சுமுகமாக இல்லை. விம்மிப் போயிருந்தாள். ஆனால், அழவில்லை. முகத்தில் வருத்த நிழல் மட்டும். அவள் சிறிய கண்கள் பறவையாடின.

சாமான்களை எல்லாம் வண்டியில் ஏற்ற... புருஷனும் மற்றவர்களும் ஏறிக் கொள்ள... தேவானை தயங்கினாள்.

மருகித் தவிக்கிற மனசோடு வண்டியை நெருங்கினாள். மாட்டுவண்டியின் காடியைப் பற்றிக் கொண்டு... திரும்பிப் பார்த்தாள்.

வலையில் சிக்கிய பறவையின் சிறகுகளாக மனசு துடிக்க அம்மாவை-அய்யாவை-சுற்றி நின்ற உறவினர் களைப் பார்த்தாள், சுப்ரமணியிடம் பார்வை வந்தது. நின்றது தயங்கியது. அவ்வளவுதான்.

வெடித்துக் கதறிவிட்டாள். 'கோ' வென்று சத்தமாய் அழுதுவிட்டாள். அவள் அழுகையைப் பார்த்து, அய்யா வும் அம்மாவும் குலுங்கியழ...

சுப்ரமணி தேவானையை சத்தம் போட்டு, அதட்டி வண்டியில் ஏற்றினான்.

வண்டியில் ஏறியமர்ந்த பின்னும் கதறிக் கதறி அழு தாள். அவள் பார்வை, சுப்ரமணியிடமே நங்கூரம் இட்டிருந்தது.

"பெத்து வளர்த்த தாய் தகப்பனைப் பிரியுறதுன்னா சும்மாவா? மனசு கிடந்து தவிக்கத்தானே செய்யும்?"

சுற்றி நின்ற உறவுப் பெண்களில் ஒருத்தி அபிப்ராயம் சொன்னாள். அதுவும் தேவானை காதில் விழுந்தது.

அவள் எந்த இழப்பை நினைத்து அழுகிறாள்? அது அவளுக்குத் தானே தெரியும்?

மாடு நகர, வண்டி அசைந்தது. அவள் இன்னும் அழுகிறாள். மாலை மாலையாகக் கண்ணீர், கண்ணீர்த் திரைக்கிடையில் மங்கலாய்...

சுப்ரமணி ஊமைக் கனவாய் கலைந்து கொண் டிருந்தான்.

# 11. பந்தம்!

அய்யனார் பயந்த மாதிரியே நடந்து விட்டது. அம்மா செய்கிற இந்தக் காரியம், இப்படியோர் கேவலத்தைக் கொண்டு வந்து சேர்க்கும் என்று உள் நடுக்கமாய் பதறிக் கிடந்தான். அப்படியே நடந்து விட்டது.

நடந்து முடிந்த அவமானத்தை நினைக்க நினைக்க அவனுள் திகு திகுவென்று எரிந்தது. நெஞ்சு விறைத்து விம்மியது. வெடித்துவிடப்போவதைப் போல மூச்சுத் திணறியது. எரிச்சலும் கசப்புமாய் மனசு, அடிபட்ட நாயாகக் கதறிக் கொண்டிருந்தது.

இள மதிய வெயில், சுள்ளென்று அறைந்தது. கோபுரங் குத்தியாக மண்ணை அள்ளிப் போட்டுக் கொண்டு, தட தடக்கிற டக்கர்கள். குப்பையடிக்கிற மாட்டு வண்டிகள்.

ஊர்த் தெரு முழுதும் புழுதி, கோடை வெள்ளாமையும் முடிந்து போயிற்று. பாடு ஜோலி எதுவுமில்லாமல், ஊர் ஜனம் கூரை நிழல்களில் பேன் பார்த்துக் கொண்டிருந்தது. மடத்தில் ஏகக் கூட்டம் ஊர் பாயாசத்தைப் பேசிக் குடித்து, பொழுதை போக்கினர்.

அய்யனாருக்கு அங்கு நிற்கவே மனசு கிடந்து அரண்டது. மனுச மக்கள் கூடுகிற இடங்களை கண்டாலே பதறி வருகிறது. இங்கும் எவனாச்சும் ஒருத்தன் செருப்படி மாதிரி பேசமாட்டான் என்பதற்கு என்ன உத்திரவாதம்?

நோக்கின்றி அலைபாயும் மனசு. இந்த வேகத்தில் வீடு போகக் கூடாது. போனால்... பார்வதியோடு சண்டை நாறிப்போய் விடும். எங்கே போக?

நடுத் தெருவிலிருந்து மேலத் தெருவுக்குப் பிரிகிற இடம். நின்றான். இடிபாடான ஒரு வீடு. அதில் இன்னும் சிதையாமல் ஒரு தாழ்வாரம். எந்த மறைப்புமில்லாத ஒரு கூரைச் சாய்ப்பு.

கல் கூட்டிய ரெண்டு அடுப்பு. ரெண்டு மூணு சட்டிகள், அம்மா... இங்குதான் ரெண்டு மாசமாய் தனிச் சமையல்.

'ஒத்தை மகன் பெத்தேன். அருமை பெருமையா வளர்த்து ஆளாக்குனேன். பொண்டாட்டி பேச்சைக் கேட்டுக்கிட்டு, பெத்தத் தாய்க்குக் கஞ்சி ஊத்தாம வெரட்டிட்டான். சாகப்போற வயசுலே, நாதியத்த சீவனாய் பாடுபட்டு, கஞ்சி காய்ச்சிக் குடிக்கேன்' என்று ஊருக்கெல்லாம் சத்தமில்லாமல் தண்டோரா போட்டுச் சொல்கிற மாதிரி...

வெட்ட வெளியில் வந்து சமையல் பண்ணுகிறாள்.

நடுத்தெருவில், பெத்த மகனின் மானத்தைப் போட்டு உடைப்பதில், அவளுக்கு அப்படியொரு சந்தோஷம்.

பிள்ளையை கேவலப்படுத்திப் பார்ப்பதில் ஒரு திருப்தி.

பெத்த மனம் பித்தாம்... பிள்ளை மனம் கல்லாம்...

யார் சொன்னது? வந்து... எங்கம்மாவைப் பாருங்க. சொலவடையை மாத்திக்கிடுவீக...

புஞ்சைப் பக்கமாய் நடையைப் போட்டான். ஆவணி மாசம். கோடை வெள்ளாமையும் முடிந்து, ஒரு உழவு அடித்துக் கிடக்கிறது. உழுத மண்ணில் மிதிக்கச் சுகமாக இருக்கிறது. பாதம் புழுதியில் புதைந்து எழு

கிறது. காய்ந்து கிடக்கும் கம்பந்தட்டையின் வேர்த் தூர்கள். வெட்டுப்பட்டது போக கத்திபோல நிமிர்ந்து நிற்கும் அகத்தித் தூர்கள்.

உழுத மண், தாய் மடியைப் போல காலுக்குச் சுகமாய், இதமாய்... ஈரநைப்பான தன்மையாய்...

அம்மாவும் இப்படி இருந்தவள் தானே...

'எம்மா... நாளைக் கழிச்சு தீவாளியாம்மா?'

'ஆமடா கண்ணு'

'எல்லாரும் புதுச்சட்டை போடுவாக, என்னம்மா?

'ஆமய்யா செல்லம்...'

'எனக்கு...?'

கேள்வியில் முட்டிக் கொண்டவளைப் போல அம்மா முகம் மாறும். வேதனையில் கருக்கும். கண்ணிலிருந்து கர கரவென்று கண்ணீர் பெருகும்.

இவன் புரியாமையுடன் தவிப்பான். இவன் சின்ன முகத்தை உள்ளங்கையால் தடவி முத்தமிடுவாள் அம்மா.

'என்னம்மா?'

'ஒண்ணும் இல்லேடா தங்கம்... அந்த ஒழக்கரிசிச் சீவன் இல்லாமப் போய்... நாம இப்படி நல்ல நாள்லே நாதியத்துத் தவிக்கோமேன்னு நெனைச்சேன்ய்யா...'

'அழுவாதேம்மா... எனக்கு புதுச் சட்டை வேண்டாம்மா.'

அவ்வளவுதான். வெடித்துப் போய் கதறியழுது, ஆவி சோர்ந்து கட்டிக் கொள்வாள். இவனுக்கு மூச்சுத் திணறும். மனசு ததும்பும்.

என்ன செய்வாளோ, ஏது செய்திருப்பாளோ... இவனுக்கு ஒரு டவுசரும், சட்டையும் வாங்கி விடுவாள்.

ஊரெல்லாம் இட்லியும், பலகாரமுமாய் அல்லோல கல்லோலப்படும். இவளும் சோளத்தை நனையப்போட்டு, ஆட்டி, சோளத்தோசை சுட்டுக் கொடுத்து விடுவாள்.

சோளத் தோசையை உள்ளங் கையில் வைத்துக் கொண்டு தெருவில் சுற்றியவாறே... பிய்த்துப் பிய்த்து தின்பான், பெருமையோடு...

இதோ... அந்தத் தோசையின் ருசி மனசுக்குள்...

அப்படி இருந்தவள்தானே அம்மா? அத்தனை குழைவும், நெகிழ்வுமான பாச வடிவமாய் இருந்த அம்மா, இத்தனை தூரம் மூறுக்கேறிப் போனது... உறவையே அறுத்துக் கொண்டு போனது எல்லாம்... பார்வதியால் தான்.

'திமிர் பிடிச்ச கழுதை. அவுக அப்பனைப்போல கொணம். அதே ராங்கி. அகம்பாவம். வாய். ஒடம்பு பூராவும் வாய். வாய் முழுக்க நெருஞ்சிமுள். நாவை அசைத்தாலே சீறி வருகிற முள்.'

பார்வதியும் ரெண்டு பிள்ளைகளை சுமந்து பெற்று பறிகொடுத்தவள். மூன்றாவது பிள்ளையை வயிற்றில் சுமந்து கொண்டிருக்கிறாள். நிறைமாதம்.

அத்தை மகன் என்று ஆசைப்பட்டு வாழ்க்கைப் பட்டாள். அவளும் என்ன சுகத்தைக் கண்டு விட்டாள்?

முக்கால் குறுக்கம் இறைவைப் புஞ்சையில், ரவ்வும் பகலுமாய் பட்ட பாடுகள்தான் மிச்சம். கால வெள்ளாமை மிளகாய்ச் செடி. கோடை வெள்ளாமை பருத்தி அல்லது கம்பு. நாள் முழுக்க பாடுகள். காலம் முழுக்க உழைப்பு. விளைந்த வெள்ளாமையை அடிமாட்டு விலையாக வியாபாரிகள் அள்ளிக்கொண்டு போக மிஞ்சுவது வறுமையும், கடனும்தான்.

நல்ல நாளுக்குக் கூட மனசு கனிந்த வாழ்க்கையில்லை. வரட்டிழுப்பு வாழ்க்கையில் பிழைப்பே நாறிப் போக, அன்றாடப் பொழுதை பற்றாக்குறையில் இருண்டு போய்... மனசுகள மரத்துப்போய்... உறவுகளின் அருமையெல்லாம் அர்த்தமிழந்து போய்...

அம்மாவுக்கும், பார்வதிக்கும் ஏழாம் பொருத்தம். சுத்தமாய் ஒத்துவரவில்லை. எந்நேரமும் ஏட்டிக்குப் போட்டிதான். குத்தலும் குதர்க்கமுமாய் பேச்சுகளும், அழுகையும்தான். ஆத்திரமும் அங்கலாய்ப்புமான புலம்பல்கள். வீடே முச்சுத் திணறும்.

பார்வதி அடைகோழியாய் கொத்திப் பிடுங்குவாள். எடுத்துப் போடும் துரும்பில் கூட குற்றம் காண்பாள். கத்தி கத்தியாக வார்த்தைகளை வீசுவாள்.

அம்மா சும்மா இருந்தாலும் பார்வதிக்குப் பொறுக்காது. 'இருந்து தின்னா... இரும்பு கூட அத்துப் போகுமே' என்பாள்.

நச்சரிப்பு தாங்காமல் அம்மா ஏதாச்சும் வேலை செய்தால், அதையும் குறை சொல்வாள். 'பெரிய மனுஷி இப்படி செய்ஞ்சா... வீடு விளங்குமா?' என்று கொதிப்பாள்.

அம்மாவும் பொறுத்துப் போக மாட்டாள். வாய்க்கு வாயாக எதிர் வாய் போடுவாள். ஒரு சொல்லுக்குக் கூட தாழ்ந்து போக மாட்டாள்.

'நேத்து பொறந்த இந்தச் சின்ன நாய்க்கு நா பணிஞ்சு போகணுமோ? எங்க வீட்டுக்காரரு இருந்தாருன்னா, இவா... இப்படிப் பேச முடியுமா? அடேய், பொட்டப் பயலே, நீயும் ஒரு புள்ளையாடா?'

பார்வதியும் விட மாட்டாள்.

'இது கிழட்டுப் பாம்பு. காலைச் சுத்துன சனியன். கடிச்சுக் கொல்லாம விடாது,' என்பாள்.

மாமியார்- மருமகள் சண்டையில் வீடு நாறும்.

நடுவில் கிடந்து கொண்டு இவன் அல்லாடுவான், எந்தப் பக்கமும் சாய முடியாது. ரெண்டு பக்கமும் பொல்லாப்பும், வசவும் தான்.

அவர்கள் சண்டை ஒரு நாள் ரொம்ப உச்சகட்டத் துக்கு எட்டிவிட்டது. சண்டை போட்டு களைத்துப் போன பார்வதி வெறியோடு கிளம்பி விட்டாள்.

'உங்க ஆத்தாவை கட்டிக்கிட்டு நீங்கதா மாரடிங்க. நா எங்கம்மா வீட்டுக்கு இப்பவே போறேன். இந்த வீட்லே இருந்து நா சீரழிஞ்சது போதும்.'

அவளுக்கும் முன்னால்... சட்டி பானைகளை பொறுக் கிக் கொண்டு நிஜமாகவே அம்மா புறப்பட்டு விட்டாள். அழுகையும், புலம்பலுமாய் வாசலைத் தாண்டி விட்டாள்.

'நாளைக்கு சாகப்போற கெழடி நா, என்னாலே நீங்க தும்பப்பட வேண்டாமய்யா. நா எம்பாட்டை பாத்துக்கிடுதேன்'

அம்மா தனியாக கஞ்சி காய்ச்சக் கிளம்பியவுடன், அய்யனாருக்குள் தர்மசங்கடம். தவித்தான் . அம்மா போவது உயிரே போகிற மாதிரி இருந்தது.

'வேண்டாம்மா... போகதேம்மா. எனக்கு கேவலம்மா. ஊர்லே என்ன கைகொட்டிச் சிரிச்சுருவாங்கம்மா...' என்று எம்புட்டோ மன்றாடிப் பார்த்தான். கெஞ்சிக் கூத்தாடினான். இவனது மன்றாடலை—

அம்மா ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை. ஒரே பிடிவாதம். விறைப்பு. முடிவில்லாமல் பட்ட அவமானங் களால் மரத்துப்போன வீராப்பு.

அம்மா ரொம்ப சினந்து சீறினாள்.

'ஏலேய், பொண்டாட்டியை அடக்க ஏலாத பொட்டப்பய நீ நா ஒங்கூட இருந்தா... நீங்க நிம்மதியா இருக்க முடியாது. என்னை விட்டுடு.'

அம்மா ஒரு போக்காய் போயே விட்டாள், தனிச் சமையல் செய்து கொண்டாள். அவளுக்கு ஏக வைராக்கியம்.

அய்யனார் பயந்த மாதிரியே... இதோ அந்தக் கேவலம், முகத்துக்கு நேராய் இன்று கூத்தாடி விட்டது,

டீக்கடையில்—

அம்மா கட்சி- அய்யா கட்சி என்று வரிந்து கட்டிக் கொண்டு பேச ஆரம்பித்து, சூடு கிளம்பி, வார்த்தைகள் தடித்து, கைச்சரசம் ஆகிவிடுமோ என்கிற கலவர நிலவரம்.

அய்யனார் சும்மா இருக்காமல்... அவர்களை சமாதானப்படுத்த வாயைக் கொடுத்து விட்டான்.

'அட ஏம்பா, 'கட்சி கட்சி'னு சண்டை போடுதீக உள்ளூர்க்குள்ளே நாம, அண்ணன் தம்பிகளா பந்த பாசத்தோட இருக்க வேண்டமா?' என்று மனசுக்குப் பட்ட நியாயத்தைச் சொல்லி விட்டான்.

அவ்வளவுதான். ரெண்டு பேரும் இவன் பக்கமாய் திரும்பினர். சினந்து பார்த்தனர். பார்வையில் ஏளனம்.

'ஆமாய்யா... பெத்த தாய்க்கு கஞ்சி ஊத்தாம தெருவுலே வுட்டவனெல்லால்... பந்த பாசத்தைப் பத்திப் பேச வந்துட்டானய்யா.'

'ஆமா... யோக்கியன் வாரான், சொம்பைத் தூக்கி உள்ளே வை.'

அய்யனார் திணறிப் போனான். மூஞ்சியில் காறித் துப்பிய மாதிரி உணர்ந்தான். பலரறிய செருப்படியாய் வந்து விழுந்த வார்த்தைகள். வார்த்தைக் கத்திகள், மனசே கிழிந்த மாதிரி இருந்தது.

இந்த ரெண்டு பேர் காறித்துப்பி விட்டார்கள். ஊரிலுள்ள மற்றவர்கள் காறித்துப்பவில்லை. எச்சிலைக் கூட்டி வைத்திருப்பார்கள். வெறுப்போடு வாய்ப்பை எதிர்பார்த்து இருப்பார்கள். நேரம் கிடைத்தால், செருப்பால் அடிக்காமல் விடமாட்டார்கள்.

எல்லாம்... அம்மாவால் வந்த அவமானம். அவள் மட்டும் கொஞ்சம் பொறுத்துப் போயிருந்தால்... இந்த இழிவு வந்திருக்குமா?

அம்மா... அம்மா... ஏம்மா, ஒனக்கு இம்புட்டு வீராப்பு? வைராக்யம்? ஓம் மகன், ஒனக்கு எதிரியா?

போக்கிட மற்று புஞ்சைக்குள் சும்மா அலைந்த அய்யனாருக்குள் மாறி மாறி நினைவுகள். கசப்பும், எரிச்சலுமான நினைவுகள். புண்ணை மொய்க்கிற ஈக்களாய் நச்சரிக்கற நினைவுகள்.

ஆழ்ந்து சோ(ர்)ந்து போய்... இவன் வீடு வந்த போது- இவன் வீட்டின் முன்பு, ஒரே அல்லோலகல்லோலம். வீட்டின் முன்னால் பதற்றமாய் நாலைந்து பெரியவர்கள். வீட்டிற்குள் பக்கத்து வீட்டுப் பெண்களின் பரபரப்பான நடமாட்டம்.

அய்யனார் முழுசாக நிலைகுலைந்து போய் விட்டான். என்னாச்சு என்று இவன் வாயைத் திறப்பதற்குள்- ஒரு பெரியவர் இவனை உரிமையோடு கண்டித்தார்.

''எங்கப்பா போய்த் தொலைஞ்சுட்டே? இப்படியா ஒரு ஆம்பளை பொறுப்பத்துத் திரியறது? பாவம் பார்வதி, இடுப்புவலி கண்டு, ஒத்தையிலே கெடந்து தவிச்சிருக்கா...''

இவனுக்குப் பகீரென்றது. உயிரே கழன்று நழுவுவதைப் போலிருந்தது. வீட்டிற்குள் ஓடப்போனவனை அவர்தான் எட்டிப் பிடித்தார்.

"நீ இப்ப எதுக்குப் போறே? ஆம்பளை போய் ஆகுற காரியமில்லே."

"பாரு எப்படி இருக்கா...! இப்ப?"

"உள்ளே பொம்பளை யாள்க நல்லா பார்த்துக்கிடு வாங்க. புள்ளைப் பேறு பாக்குறதுலே கைராசிக்காரி ராமாயம்மா. அவளும் வந்துருக்கா. எல்லாம் நல்லபடியா நடக்கும்."

அய்யனார் வெலவெலத்துப் போனான். முகம் பூராவும் அப்பிப்போன அச்சம். பீதி. பருந்தைப் பார்த்த கோழிக்குஞ்சாக பதறித்துடித்து...

பெரியவர் ஏதேதோ சமாதானம் சொன்னார். அனுபவப்பட்ட நிதானத்தில் ஆறுதல் வார்த்தைகள் சொன்னார். எதுவுமே அவன் காதில் விழவில்லை.

அவன் மனசெல்லாம்... 'பாரு, பாரு... பாரு...' என்று அரற்றியது. 'ஒத்தையிலே கிடந்து எப்படித் தவிச்சாளோ, அந்த நேரத்துலே அவள் மனசு எப்படியெல்லாம் கிடந்து துடிச்சதோ...' என்று மாறி மாறி அணத்திக் கொண்டே இருந்தான்.

அவனுள் ஒரு குற்ற உணர்வு. நினைக்க நினைக்க முள் முள்ளாக உறுத்தல். குட்டி போட்ட பூனையாக அலை பாய்ந்து வந்தான். பரிதவித்து பரிதவித்து அங்குமிங்கு மாய் தேம்பித் தேம்பி நின்று புலம்பிய அய்யனார்—

அரவமில்லாமல் நழுவினான். கூரை வீட்டின் பின் பக்கமாய் சுற்றி வந்தான். தவிப்போடு கீழ்பக்கச் சுவருக்கு வந்தான்.

சுவரில் ஒரு சிறிய ஜன்னல். கையகல ஜன்னல். அடுப்புப் புகை வெளிவருகிற கரி படிந்த ஜன்னல்.

இதன் வழியாய் பார்த்தால்... அந்த வீடு பூராவும் தெரியும்.

குண்டு பல்ப் எரிகிறது. அழுக்கான மஞ்சள் நிற வெளிச்சம். குறுக்கும் நெடுக்குமாய் ஓடியலைகிற பெண்கள். கட்டிலைச் சுற்றிலும் பெண்கள்.

கட்டிலில் கிடந்து புழுவாய் துடிக்கிற பார்வதி. வலி தாங்காமல் அலறுகிற அவலச் சத்தம்.

அவள் கைகளை அமுக்கிக் கொண்டு ரெண்டு பெண்கள். கயிறாய் முறுக்கிக் கொண்டு திமிர்கிற பார்வதி. குத்துக்கால் வைத்திருக்கிற பார்வதி. கால்களை அழுத்திப் பிளந்து கொண்டு ரெண்டு பெண்கள். ஆறுதல் வார்த்தை சொல்லிக் கொண்டே கனத்த வயிறை நீவி விடுகிற பெண்கள்.

வலி பொறுக்காமல் துடித்துக் கதறுகிற பார்வதி. கதறாத சமயத்தில் மட்டியை கடித்துக் கொண்டு உறுமித் தவிக்கிற பார்வதி. மரண விளிம்பில்... இவனது உயிர். இவனது ஆத்மா. உயிர்ப் பங்காளி.

அய்யனாருக்கு குலை பதறியது. தொடை எலும்பே உருவிக் கொண்ட மாதிரி, கால்களில் ஒரு தளர்ச்சி. ஒரு நடுக்கம். மனம் முழுக்க பதற்றம்.

உயிர் போகிற மாதிரி அவஸ்தையில் துடிக்கிற துடிப்பை — அந்தப் பாதரவை — காணச் சகிக்கவில்லை. மனம் படபடத்தது. கண்கள் இருட்டிக் கொண்டு வந்தது.

'அம்மம்மா... பிரசவம்னா இதுதானா? உயிர் வாதனையா? இத்தனை வேதனைப்படுத்தியா ஒரு குழந்தை பிறக்குது? பெண்ணே. நீ பாவப்பட்ட ஜென்மம் தான்.'

அவனுள் பார்வதியின் துடிப்பும், கதறலும், மீண்டும் மீண்டுமாய்... அலை அலையாய்... மனசின் பிசைவாய்.

ஒரு சின்னக் குரல். பூமியைப் பார்த்து அரண்டு போய் 'வீர், வீர்' என்று வீறிடுகிற உயிர்க் குரல்.

"ஆம்பளைப் புள்ளே..."

என்று ராமாயம்மாளின் சந்தோஷக் குரல்.

இவனுக்குள் பீறிட்டு, இவனையே அடித்துச் செல்கிற இன்பப் பிரவாகம். சந்தோஷப் பரவசம்.

இவன் அரவமில்லாமல்... சுற்றிக் கொண்டு வீட்டு முற்றத்துக்கு வந்து சேர, உள்ளிருந்து மூன்று தடவை குலவைச் சத்தம்.

ரொம்ப நேரம் கழித்து தான், அவன் உள்ளே போக முடிந்தது. எல்லாப் பெண்களும் போய் விட்டனர். ராமாயம்மாளும் போய் விட்டாள்.

பார்வதி துவண்டு போய் வயிறில்லாமல் கிடந்தாள். உடம்பில் அசாத்திய தளர்ச்சி. ஒரு உயிரைத் தந்த மனசின் மலர்ச்சி மட்டும் கண்ணில் மின்னியது.

அரண்டு போய்க் கிடந்த அய்யனாரின் முகத்தைப் பார்த்துச் சிரித்தாள். மென்னகை. அவனது கண்களில் நெகிழ்ந்து போன மனசின் கருணைப் பெருக்கு.

"பாரு..." அவன் குரலில் சோக இடறல்.

"ம்... ரொம்பப் பயந்துட்டீகளா?"

"புள்ளைப் பேறுன்னா... இம்புட்டுப் பெரிய கொடுமையா? ரசிக்க முடியாத ரணவேதனை. இல்லே பாரு?"

"ஆமாம்... ஒவ்வொரு பிரசவமும் பொம்பளைக்கு மறு பொழப்புதான். செத்துப் பொழைக்கிற மாதிரி தான்."

"நீ துடிச்ச துடிப்பை... இந்த ஜன்னல் வழியா பார்த்தேன்."

பார்வதியின் முகம் வெட்கத்தில் எட்டுக் கோணலாய் கோணியது. "ச்சிய்! இப்படியும் ஒரு ஆம்பளையா?"

செல்லச் சிணுங்கலாய் கண்டித்தாள்.

"பார்க்கப் பார்க்க பாவமாயிருந்தது பாரு."

"பொம்பளை ஜெம்மமா பொறந்துட்டா... இதான் தலையெழுத்து. புள்ளையைப் பாருங்க."

"இருக்கட்டும் இருக்கட்டும்."

"ஏங்க... இந்தப் பய, நாம தவங்குற காலத்துலே கஞ்சி ஊத்துவானா, காறித் துப்புவானா?"

பெருமைத் ததும்பலோடு செல்லச் சிணுங்கலாய் கேட்ட பார்வதியின் கேள்வியால், நெக்குருகிப் போன அய்யனாருக்குள்... அலை அலையாய் நினைவுகள், சோளத் தோசை சுட்டுத் தந்த அம்மா. ஆவி சேர்ந்து கட்டித் தழுவிக் கொண்ட அம்மாவின் முகம். முகம்... முகங்கள்.

"ஏம் பாரு... நா ஒன்னு கேக்கட்டா? வருத்தப்பட மாட்டியே?"

"ம். கேளுங்க" கனிந்த அவளின் மிருதுவான குரல்.

"என்னைப் பெத்தெடுக்குறப்பவும்... எங்கம்மா இப்படித்தானே சங்கடப்பட்டிருப்பா, இல்லே பாரு?"

அவன் குரலே வேறொரு தொனியாக—ரொம்ப மிருது வாக ஒலித்தது.

அவனது கேள்வியில் அவள் மெல்லிசாக அதிர்ந்தாள். அந்த அதிர்வு, ஆழ் மனசு வரை படர்ந்தது. அவள் கண்ணில் ஒரு துடிப்பு. அறுபட்ட பல்லிவாலாக மெல்லிய துடிப்பு.

ரோமம் அடர்ந்த அவனது மணிக்கட்டை வாஞ்சை யோடு பற்றி அழுத்தினாள். அவனது கண்களுக்குள் ஆழ மாய்—மிருதுவாய் — பொருந்திப் பார்த்தாள்.

அவனது மனசையே பார்ப்பது போல — மனசின் மடிப்புகளின் உள் நிழல்களை விரித்து விரித்து படிப்பது போல — அப்பப்படிப் பார்த்தாள்.

சாயங்கால வேலை முடிந்து வந்த அம்மா, தகவல் அறிந்தவுடன் ஓடி வந்தாள். மகனையோ மருமகளையோ ஏறிட்டுக் கூட பார்க்கவில்லை. பேரனை கொஞ்ச ஆரம்பித்து விட்டாள்.

''ஏ... ராசா... ஏந் தங்கப் பெட்டி... எம் பொன்னு ரதம்... ஏங்கண்ணு.''

அவள் மறந்து கூட மருமகளை நிமிர்ந்து பார்க்கவில்லை. பகையாளிகள். கடித்துத் துப்பிய அற்பப் பதர்கள்.

ஆனால், பார்வதி மெல்ல குரல் கொடுத்தாள்.

''அத்தே...''

பார்வதியின் குரல் மென்மையாக இருந்தது. ஒரு பந்தமும் பாந்தமுமாய்... அவள் குரல் புதுத்தொனியில் ஒலித்தது. 'பேரனைக் கொஞ்சிக்கிட்டு... இனிமே அம்மா இங்கேயே இருந்துருவாள்' அய்யனாருக்குள் சந்தோஷப் பூக்கள்.

---

ஏப்ரல், 1993—'கதைமலர்'

# 12. காட்டம்

இப்படியொரு சண்டை டீக்கடைக்குள் வரும் என்று யாரும் நினைக்கவேயில்லை. அதுவும், விடிந்தும் விடியாத வைகறைப் பொழுதில் இப்படியொரு வாய்ச்சத்தமா!

எப்படித்தான் சண்டை ஆரம்பித்தது என்று யாரும் யோசித்துப் பார்க்கவே வழியில்லை. அத்தனை கார சாரம்.

ஆட்டுக்கார கிட்ணனும், வேல்ச்சாமியும் மல்லுக்கு நிற்கிற உக்கிரத்தில். வாயும் வார்த்தையும் முற்றிக் கொண்டே போயிற்று. எகிறிப் பாய்ந்தது.

'என்ன செய்வது, ஏது செய்வது' என்று ஒருத்தருக்கும் பிடிபடவில்லை. 'யாரைச் சத்தம் போட, எப்படி கண்டிக்க. ஒன்றும் புரியவில்லை.

ஏகக்குழறுபடி.

'எங்கே... கைகலப்பில் போய் முடிந்துவிடுமோ' என்று சுற்றியிருந்தவர்களுக்குள் உதைப்பு. 'என்னடா இது, பெரிய வம்பாய்ப் போச்சு' என்று அவரவர் மனசுக்குள் கையைப் பிசைந்து கொண்டு திகைத்தனர்.

□

அது... ஆடிமாதக் கடைசி. அருங்கோடை. போன வருஷம் கார்த்திகையில் பெய்த மழை. அதற்குப் பிறகு மழை என்கிற பிறப்பே இல்லை.

ஆடிப்பட்டத்திற்கு மழை பெய்யும் என்று எல்லா சம்சாரிகளும் ஏங்கித் தவம் கிடந்தனர். நம்பிக்கையில் மண்ணையள்ளிப் போட்டுவிட்டு 'இந்தா, அந்தா' என்று இழுத்து ஏமாற்றிக் கொண்டே போயிற்று.

மேகம் கூடிகூடிக் கலைகிறது.

காடு கரைகள் எல்லாம் தீப் பிடித்த மாதிரி காய்ந்து கிடந்தது. ஒரு புல் கூட கண்ணில் தட்டுப்படவில்லை! பச்சை என்கிற பிறப்பே அற்றுப் போயிற்று.

வறட்சிக்குத் தாக்குப் பிடிக்கிற அருகுக் காடுகள் கூட காய்ந்து கருகிப்போய் விட்டது. கற்றாழையே நீர்ப்பசையற்று பொசுங்கிக் கிடந்தது.

மேய்ச்சலுக்கு இடமில்லாமல், ஆட்டுக்குட்டிகள் அற்றலைந்தன. கருகிக் கிடந்த சருகுகளை மேய்வதாக நினைத்துக் கொண்டு, சுடுபுழுதியை நக்கிக் கொண்டு திரிந்தன, செம்மறிகள்.

கிட்ணனுக்கு பார்க்கப் பார்க்க பாகரவாக இருந்தது. பசியும் வெயிலும் தாளாமல்... மதிய வெக்கையில் செம்மறியாடுகள் எல்லாம் "ம்ம்ம்... மே...க், ம்ம்ம் மே...க்" என்று கதறுகிற கொடுமையைப் பார்த்தால்—

இவனுக்குக் குலை கொதித்தது.

ஒட்டி உலர்ந்து போய்- எலும்பும் தோலுமாய் தகை பொறுக்காமல் இளைக்கிற ஆடுகளை வந்து அப்பிக் கொள்கிற கண்ட கண்ட நோய்கள். வெக்கைநோய், காணம், அம்மை என்று பல நோய்கள்...

அம்மை நோயினால் நாலு ஆடுகள் செத்தே போயிற்று.

செங்கால் வெள்ளை ரொம்ப ராசியான ஆடு. நாலு ஈத்து ஈன்றிருக்கிறது. இவனுக்குப் பிரியமான ஆடு. பேர்

சொல்லி இவன் சத்தம் கொடுத்துவிட்டால் போதும், காதை உயர்த்திக் கொண்டு பணியும்.

அதுவும் அம்மை நோயில் விழுந்து, துள்ளத் துடிச்சு செத்த அன்றைக்கு, ஏதோ பிள்ளையை பறிகொடுத்த வனைப்போல, தலையில் தலையில் அடித்துக் கொண்டு அழுதான்.

அது செத்து விழுந்த கோலத்தை நினைத்தால், கிட்ணனுக்கு இப்பவும் சாப்பிடத் தோன்றாது...

ஆடுகள் வேல மர நிழல்களிலும் வெயிலிலுமாய் படுத்துக் கிடந்தன. ஆடிமாத வெயில் சுள்ளென்று அடிக்கிறது. காற்றையே காணோம்.

ஆட்டுக்கம்பை சாய்வாக ஊன்றி, அதன் மேல் இடது கம்மங் கூட்டை வைத்து, உடம்பின் மொத்தப் பாரத் தையும் அதன்மேல் போட்டு, வெட்ட வெயிலில் ஒற்றைக் காலில் நின்று கொண்டிருந்த கிட்ணன், ஆகாயத்தை அண்ணாந்து அண்ணாந்து பார்த்தான்.

'ஒரு மழையாச்சும் எட்டிப் பார்க்க கூடாதா' என்று ஏக்கம் என்றால் எக்கம் கிட்ணனுக்கு. குலதெய்வத் திலிருந்து மாரியம்மன் வரைக்கும் எல்லாச் சாமிகளுக்கும் மனசுக்குள் நேர்த்திக் கடன் போட்டு வைத்திருந்தான்.

ஒரு தூறலைக்கூடக் காணோம்.

அவனுக்கே சில சமயம் சலித்துப் போகும். கொந் தளிக்கிற மனசோடு ஆங்காரமாய்ப் புலம்புவான். "ஒரு சாமிக்குக் கூடவா, கண்ணும் காதும் இல்லாமப் போச்சு? ஒரு நொண்டி மேகம் வந்து ஒழுகிட்டுப் போனாக்கூடப் போதுமே... அஞ்சாறு புல்லு மொளைச்சாலும், ஆடு குட்டிகளுக்கு உசுர் வந்துருமே... பாழாய்ப் போற சாமிக, வாயில்லாச் சீவங்க பாவத்துலேயா... விழணும்? ச்சே..."

பெரு மூச்சு விட்டுக் கொண்டான், கவலைப்பட்ட மனசின் நச்சரிப்பில் வேதனையோடு அங்கலாய்த்துக் கொண்டான்.

"ஹூம்... அடை மழையும். அருங்கோடையும் ஆட்டுக்காரனுக்குக் கடுப்பகை."

□

பத்து வயசிலிருந்து ஆட்டுக் குட்டிகளின் கொச்சை வாடையில் புரண்டவன், கிட்ணன். சொந்தப் பசியைக் கூட பொருட்படுத்திக் கொள்ள மாட்டான். ஆடுகள் வயிற்றுக்கு இல்லாமல் கத்தினால்... அதைச்சகித்துக் கொள்ள மாட்டான்.

ஆடுகளின் பசியை அமர்த்துவதற்காக, களவு செய்யக் கூடத் தயங்க மாட்டான்.

'வாயில்லாச் சீவன்களுக்காக செய்ற களவு, பாவமில்லே. சாமிகூட மன்னிச்சிரும்' என்று மனசுக்குள் சொல்லிக் கொள்வான்.

பெற்ற பிள்ளைகளுக்கு நோய்நொடி என்றால்கூட அலட்டிக் கொள்ள மாட்டான். மனைவி பார்த்துக் கொள் வாள் என்று விட்டாற்றியாக நினைத்துக் கொள்வான்.

ஆட்டுக்குட்டிகளுக்கு 'ஒன்று' என்றால்... அலைய குலைய நிற்பான். உயிர் துடித்துப் போவான்.

ஆடுகள் என்பது கிட்ணனுக்கு, வெறும் பணப் பொருளல்ல. உயிர் சிநேகிதம், பிள்ளைகளைப் போல. மனசின் ஆழ் உணர்வுகளோடு பின்னிக் கிடப்பவை. அதன் அசைவில், இவன் உயிர் அதிர்வான்.

□

முந்தா நாளுக்கு முதல் நாள்

வேல்ச்சாமி புஞ்சையில் கம்பங்கதிர் அறுத்தார். அன்றைக்கே கப்பந்தட்டையையும் அறுத்து ஒதுக்கு கிறார்கள். இறவைத் தோட்டம். கோடைத் தண்ணீர் பாய்ந்த பாத்திகள் நல்ல பசும் புல் நிறையக் கிடக்கும்.

ஆவலோடு ஆடுகளைப் பத்திக்கொண்டு தோட்டத்தின் பக்கமாய் வந்தான், கிட்ணன். கம்பந்தட்டைகளை ஒதுக்கிய பாத்திகளில் ஆடுகளை உள்ளிறக்கினான்.

பறப்பெடுத்துப்போய் ஆடுகளும் துடியாய்ப் பாய்ந்தன. காய்ந்த ஆடுகள் விழுந்து 'பரச், பர்ச்'சென்று ஆவலாய் மேய்ந்தன. அதுகளுக்கு ஏகக் குதூகலம்.

வேல்ச்சாமி புஞ்சையின் மறுமுனையிலிருந்து ஓடி வந்தான். எதையோ பறி கொடுத்தவனைப் போல ஆங்காரமாய்க் கத்திக் கொண்டு வந்தான்.

''எவண்டா இது, புஞ்சைக்குள்ளே ஆட்டை விடுறது?''

''தெலியுது, தெலியுது'' என்று இளக்காரமாய் 'அளத்தம்' காட்டிய வேல்ச்சாமி,

'மொதல்லே, ஆடுகளை வெளியே பத்து'' என்றான். அவன் குரலில் பொருத்தமில்லாத காட்டம் கனன்றது. நியாயமில்லாத கடுமை.

கிட்ணன் அலுங்காமல் நின்றான்.

''எதுக்கு? கம்பர்தட்டையை ஒதுக்குன எடத்துலே தானே ஆடுக மேயுது? வெள்ளாமையிலா விழுந்துருச்சு?''

''வெள்ளாமையோ, இல்லையோ... செம்மறியாடுக எறங்கக் கூடாதுன்னா, கூடாதுதான்.''

''அதான் கேக்கேன்... எதுக்கு?''

"ஈரப்புஞ்சை. உழுகணும். ஆடுக மேய்ஞ்சா, நெலம் இறுகிப் போகும்."

மழலைத்தனமான காரணம். கேலிக்கூத்தான நியாயம். எடுபடாத சால்ஜாப்பு.

கிட்ணன் சிரித்தான், மெல்லிசாக.

"என்ன வேல்ச்சாமி, அர்த்தமில்லாமப் பேசுதே. ஆடுக மிதிச்சு நெலம் இறுகியா போயிரும்? அதிசயமாயிருக்கே... நீ பேசுறது."

"எங்களுக்கு பேசுறதுக்கு யாரும் சொல்லித் தர வேண்டாம். மொதல்லே, ஆடுகளை வெளியே பத்துறியா... இல்லே, நா பத்தவா?"

கோபம் கோபமாய் கத்திய வேல்ச்சாமியைப் பார்த்து உள்ளூர்க்காரன் என்ற சகஜபாவத்தில் இதுவரை சிரித்துக் கொண்டிருந்த கிட்ணனுக்கு என்னவோ போலாகி விட்டது.

தாட்சண்யமில்லாமல் எரிந்து விழுகிறான், வேல்சாமி. முகத்தில் அடித்த மாதிரி, வார்த்தைகளை எறிகிறான்.

கிட்ணன் முகம் சிறுத்துவிட்டது. அவமானமாய் உணர்ந்தான். இறுகிப்போன மனசோடு அவனை ஏறிட்டான்.

அதற்குள்—

வேல்ச்சாமி குனிந்து மண் கட்டியை எடுத்து எறிய எத்தனிக்க—

குஞ்சைப் பறிகொடுத்த தாய்க்கோழியாய் சீறினான், கிட்ணன்.

"ஏய்... வாயில்லாச் சீவனை எறியாதே. வேணும்னா, எம்மேலே எறி."

"ஒம்மேலே எறிய எனக்குக் கிறுக்கா பிடிச்சிருக்கு? அது இதுன்னு அழிச்சாட்டியம் பேசாம, ஆட்டை மொதல்லே வெளியே பத்து."

"சரி... நா பத்திக்கிடுதேன்."

நொய்ந்துபோன மனசோடு ஆடுகளை மடக்கிப் பத்தினான், கிட்ணன். ஆடுகள் மடங்கி மடங்கி உள் பாய்ந்தன. பசும்புல்லை பார்த்த ஆவல், அதுகளுக்கு.

அடம்பிடித்து அழும் குழந்தையை தூக்குவதுபோல... மனத்தாங்கலோடு சிரப்பட்டு வலுக்கட்டாயமாய் ஆடு களைப் பத்தி வெளியேற்றினான். கிட்ணன் மனசுக்குள்—

பற்றியெரிகிற தீ. எங்குமில்லாத அநியாயத்தைக் கண்ட தீ. ஈவிரக்கமற்ற வங்கொடுமையை உணர்ந்த தீ. குரூரமான அவமதிப்புக்கு ஆளான தீ.

□

கம்பந்தட்டையை ஒதுக்கிய பிறகு, இம்மாதிரியான புஞ்சையில், யாருடைய ஆடுகள் வேண்டுமானாலும் இறங்கலாம். பகையாளியின் ஆடுகள் மேய்ந்தால்கூட, எந்தச் சம்சாரியும் ஒன்றும் சொல்லமாட்டான். இயல் பான வழமை, அது. கிராமத்து சகஜம்.

வேல்ச்சாமி... தடுப்பது புதுசு. இயல்புக்கு மாறானது. அத்துமீறல்.

ஆனால், அவனளவில் அதற்கும் நியாயம் இருந்தது.

அவனுக்குக் கொஞ்ச நாட்களாகவே, செம்மறியாடு மேய்ப்பவர்கள் மீது தீராக்கோபம்.

புஞ்சைக்கு கிடை வேண்டும் என்று தாகத்தோடு கேட்ட போதெல்லாம்... ஆட்டுக்காரர்களும், கிடைக் கோனும் ஏகக்கிராக்கி பண்ணி மறுத்துவிட்டார்கள். அதைக்கூட இவன் பெரிதாக நினைக்கவில்லை,

இந்தக் கோடை வெள்ளாமையில் ஆட்டுக்காரர்கள் வேறொரு வழியில் வேல்ச்சாமியை ரொம்பத் தொல்லைப் படுத்திவிட்டார்கள். பொறுமையை சோதித்து, 'உண்டு, இல்லை' என்று பண்ணிவிட்டார்கள்.

இவனது பம்ப்செஷட் மோட்டாரில் கொஞ்ச நாளாய் ஒரு ரிப்பேர். ஃபுட்பால் வாசர் லீக்காகும்.

வேறு மோட்டார்களைப் போல... வந்தோம், பச்சைப்பட்டனை அழுத்தி தண்ணீர் பாய்ச்சினோம் என்று இவன் மோட்டாரில் கிடையாது.

வந்து ரெண்டு குடம் தண்ணீரை குழாய் வழியே உள்ளே ஊற்றணும். ஏர் வாசர் பிடுங்கிவிடணும். அப்புறம்தான், வேண்டா வெறிப்பாய் மெல்ல உறுமி இயங்கும்.

அதற்காகவே; மோட்டார்த் தண்ணீர் வந்து விழுகிற சிமெண்ட் தொட்டியில் தண்ணீரை ரொம்பக் கவனமாய்ப் பாதுகாப்பான். களிமண்ணைக் குழைத்து தொட்டியின் துவாரத்தை அடைத்து வைப்பான்.

கோடை, கடுங்கோடை. ஆடு குட்டிகளுக்கு எங்கும் ஒரு சொட்டு தண்ணீர் கிடைக்காது. பொழுது மயங்குகிற நேரத்தில் ஆள் இல்லாத சமயத்தில், தொட்டி அடைப்பை எடுத்துவிட்டு, தண்ணீரை வாய்க்காலில் தேக்கி, ஆடு குட்டிகளை குடிக்க விடுவார்கள்.

இதை எந்த ஆட்டுக்காரன் செய்தானோ...

வேல்ச்சாமி வந்து பார்க்கிற போதெல்லாம், வெறும் தொட்டிதான் காய்ந்து கிடக்கும். மனசு கிடந்து தகிக்கும்.

அப்புறம்... மெனக்கிட்டு ஊருக்குள்போய், அலைந்து திரிந்து, ரெண்டு குடம் தண்ணீர் சுமந்து, மோட்டாரை ஓட்டுவதற்குள்...

வேல்ச்சாமிக்கு 'ஆத்தாடி, அம்மாடி' என்றாகிப் போகும். ஆட்டுக்காரர்களை சகட்டு மேனிக்கு வைது தீர்ப்பான்.

அவனுக்கு அந்தக் கடுப்பு. காட்டம்.

''செம்மறியாடுகளை கண்ணுலே காண்கவிடாம, தொரத்தியடிக்கணும். அப்பத்தான், அவங்களுக்குப் புத்தி வரும்.''

அந்தக் காட்டத்திற்கு... கிட்ணன் வந்து மாட்டிக் கொண்டான், இன்றைக்கு.

ஆடுகளைப் பத்திக்கொண்டு, கிட்ணன் ஓடைக்குள் இறங்குகிறபோது மனக்கொதிப்போடு சபித்துக்கொண்டான். ''வாயில்லாச் சீவன் வவுத்துலே மண்ணடிக்கிற இந்த மாதிரிப்பட்ட பாவிக புஞ்சையெல்லாம்... வெளையாம நாசமாய்ப் போகணும்.''

□

விடியற்காலம். கண்ணுக்குள் நெருஞ்சிமுள் சொருகிய மாதிரியிருந்தது. கிட்ணனுக்கு உறக்கமே வரவில்லை. முகத்தைக் கழுவிவிட்டு டீக்கடைப் பக்கம் வந்தான்.

இன்னும் மிச்சமிருக்கிற வைகறை இருட்டு.

''ஒரு டீ குடப்பா'' என்று சத்தம் காட்டிவிட்டு, டீக்கடைத் தாழ்வாரத்தில் வெளியே உட்கார்ந்தான்.

கடைக்குள் நிறைய ஆட்கள். மழை செய்கிற மாய்மாலக் கூத்து பற்றிய கசகசக்கும் பேச்சுச் சத்தம்.

''நாலு நாளா... மாரிமூலை மின்னுதே.''

''மின்னி என்ன செய்ய? மதியம் வரைக்கும் மழைக் கோப்பு கனமாயிருக்கு. தேன் தட்டா மேகம் கருத்து வருது... மதியத்துக்குமேலே காத்தடிச்சு... எல்லாம் கலைஞ்சிருது.''

"மாரி மூலை மின்னிட்டா... ரெண்டு நாள்லே மழை வந்துரும்...

"அதெல்லாம் தருமம் காலூனி நின்ன காலம். இப்பத்தான் எல்லாப் பயகளும் தலையை கீழே ஊனி, தலைப்பிரட்டுத் தனமா நடக்குறாங்களே... மழை எப்படி வரும்?"

"மழை 'அந்தா, இந்தா'ன்னு கண்ணாமூச்சி காட்டிக் கிட்டிருக்கு. ஆடிப்பட்டத்துலே கடலை வெதைக்குற சம்சாரிக, தவியாய் தவிச்சுப்போய் நிக்காக."

"அதாச்சும் பரவாயில்லே. ஆடுமாடுக புல்லுமில்லாம தண்ணியில்லாம தவிக்கிற தவிப்புதான் பாக்கச் சகிக்கலே. பரிதாபமாயிருக்கு."

அந்நேரம்தான் வேல்ச்சாமி சத்தம் கேட்டது.

"எனக்கு நாலுவண்டி கம்பங்கருது களத்துலே கெடக்கு. அடிச்சித் தூத்தி, வீடு கொண்ணாந்து சேத்தாத் தான் நிம்மதி. நாலு நாளைக்காச்சும் மழை வராம இருந்தா... நல்லது."

அவனது சுயநலமான விருப்பம், அந்தச் சூழலுக்குப் பொருந்தாத அந்நியமாய் ஒலிக்க... எல்லாருக்கும் என்னவோ போலிருந்தது.

பாயசத்தில் பல்லி விழுந்த மாதிரி...

ஆனால், கிட்ணன் அடிபட்ட புலியாய் எழுந்து, புயலாய் கடைக்குள் பாய்ந்தான். பெரும் சீறலாய் சீறினான்.

"ஆடிப்பட்ட மழை வேண்டாம்னு சொல்றவன், ஒரு சம்சாரியா? கம்பங்கருதை காலாகாலத்துலே அடிச்சி, தூத்தி எடுக்க மேல்வலிச்சுப் போய்த் திரியுறவனெல்லாம் எதுக்குச் சம்சாரியா இருக்கணும்?"

வேல்ச்சாமியும் குற்ற உணர்வில்லாமல், எதிர்ச் சீறலாய் சீறினான்.

''மழை வேணும், வேண்டாம்னு சொல்றது என்னோட இஷ்டம். கண்ட கண்டவனுக்கெல்லாம் எதுக்கு பொத்துக்கிட்டு வரணும்?''

''ஆடு குட்டிகளுக்கு இரை தண்ணியில்லாம அல்லாடுற மனுச மக்களுக்கும், பட்டத்துலே வெதைக்கணும்னு ஆலாய்ப் பறக்குற பரம்பரைச் சம்சாரிகளுக்கும் மழையோட அருமை தெரியும், மத்த நாய்களுக்கு என்ன தெரியும்?''

''வார்த்தை ஒழுங்காபேசு. 'நாய் கீய்'னு பேசுனீன்னா வாய்கிழிஞ்சி போகும்.''

''ஏன்? ஏங் கை பூப்பறிக்க போயிருக்குமோ?''

அவ்வளவுதான். வாய்ச்சத்தம் காரசாரமாயிற்று. அனல் பறந்தது. ரெண்டு பேரும் வார்த்தைகளை திகிடுமுகிடாய் தூக்கியெறிந்தனர்.

மல்லுக்கட்டு வந்து விடுமோ என்கிற பதற்றம், சுற்றியிருந்தவர்களுக்கு.

எப்படி தலையிட... யாரைக் கண்டிக்க என்று ஒருத்தருக்கும் விளங்கவில்லை. கை மீறிப் போய்விடும் போல நிலவரம். கலவர நிலவரம்.

கடைசியாய்—

ஒரு பெரியவர் தலையிட்டு, ஓங்கிய சத்தத்தில் கண்டித்தார்.

''என்னப்பா இது, அறிவுகெட்டதனமா சண்டை போடுறீக. நீங்க சொல்லியா... மழை பேய்றதும், நிக்கறதும்? இதுக்குப் போய் ஒரு சண்டையா?''

அதற்குள் மற்றவர்களுக்கும் வழி புலப்பட, அவரவர் குரலில் சத்தம் போட்டனர்.

''அதானே? இது என்ன, ஊரா, காடா? நீங்க பாட்டுக்கு சண்டையை கோர்த்துட்டீங்களே? நிறுத்துங்கப்பா.''

''அதானே? நீங்க ரெண்டு பேரும்தா ஆம்பளைகளா? சுத்தியிருக்குறவுகளை மனுச மக்கள்னு, மதிச்ச மாதிரித் தெரியலியே...''

ஆள் ஆளுக்கு சத்தம் போட... ரெண்டு பேரும் மட்டுப்பட்டனர். ஓய்ந்துபோன மழை மாதிரி... சாறல் முணுமுணுப்புகளோடு வெளியேறி, ஆளுக்கொரு திசையாய் போய்விட்டார்கள்.

பின்னும்—

டீக்கடைக்குள் சண்டை பற்றியே பேச்சு. எஞ்சியிருந்த கிராமத்து அப்புராணிகள். நடப்பையும். மன ஆழ நுட்பங்களும் அறிந்த விபரமான அப்புராணிகள்.

அதில் ஒருவர் சொன்னார்.

' இப்ப வந்த சண்டை மழைக்காக வந்த மாதிரித் தெரியலியே... அவுகளுக்குள்ளே வேற ஏதோ காட்டம் இருந்துருக்கும் போலிருக்கு.''

'நெசந்தான். பேச்சு வெடிக்கிற தொனியிலேயே அது தெரியுதுல்லே?''

''என்ன காட்டமோ?''

''யாரு கண்டது? மழை தண்ணியில்லாம காடுகரைசு வறண்டு போகப்போக... மனுச மக்க மனசும் வறண்டு போயிரும்லே; ஈரமத்துக் காய்ஞ்சுபோன மனசுகள்லே, காட்டத்துக்கா பஞ்சம்!''

இன்னும் டீக்கடையில் அதே பேச்சு, நீண்டு நெளிந்து வளைந்து வெவ்வேறு திசைக்கு நகர்ந்து கொண்டிருக்கிறது. வாழ்க்கையைப்போல.

---

டிசம்பர், 1992—'மகுடம்'

மீனாட்சி
புத்தக நிலையம்